விலை: 30.00
பக்கங்கள்: இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 தை 15 செவ்வாய்க்கிழமை (29.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 041

# அனைத்து இன மக்களிடையே நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப உதவிகளை வழங்க தயார்



## அமெரிக்க தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

அனைத்து இன மக்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை கட்டி யெழுப்புவதற்கான உதவிகளை வழங்க அமெரிக்க அரசாங்கம் தயாராக வுள்ளதாக இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான அமெரிக்க தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் குறிப்பிட்டார். (23ஆம் பக்கம் பார்க்க)

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்

### நீதி கோரி நாளை போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் விவகாரம் தொடர்பில் இலங்கை அரசு உரிய தீர்வை முன்வைக்க வலியுறுத்தியும் மன்னார் புதை குழி விவகாரத்தில் விரைவான நீதி கோரியும் சர்வதேச 23

## உள்நாட்டு மதுபானத்தின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

உள்நாட்டு மதுபான போத்தல் ஒன்றின் விலை நேற்று முதல் 10 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உள்நாட்டில் தயாரிக்கப்படும் சகல மது 23

## விமல் வீரவன்சவிடம் சி.ஐ.டி. விசாரணை

(கொழும்பு)

வாக்குமூலம் ஒன்றை வழங்கு வதற்காக பாராளுமன்ற உறுப் பினர் விமல் வீரவன்ச குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார்.

நேற்று திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் குற்றப்புல னாய்வு திணைக்களத் 24

## தமிழர்கள் சமமான குடிகள் என்பதை 32 ஆண்டுகளுக்கு பின் ஜனாதிபதி உணர்த்தியுள்ளார்

### ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

இலங்கை நாட்டில் தமிழர்கள் சமமான குடிகள் என்பதனை முப்பத்திரெண்டு ஆண்டுகளுக்கு பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா உணர்த்தியிருப்பதாக



வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி யில் வகுப்பறைக் கட்டடத் தொகுதி திறப்பு விழா நிகழ்வு நேற்று நடை பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் 24

## தேர்தலை நடத்தாவிடின் இராஜினாமா செய்வேன்

### மகிந்த தேசப்பிரிய



(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை நடத்தவில்லை என்றால் தான் இராஜினாமா செய்யவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணையகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் 24

## கூரையில் உலரவிடப்பட்டிருந்த 72 கிலோ கேரளக்கஞ்சா மீட்பு

### பருத்தித்துறை வியாபாரிமூலையில் சம்பவம்



24

## கேப்பாபிலவு போராட்டத்தில் ஈடுபட்ட மூவர் மீது வழக்கு

### போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை நீதிமன்றிற்கு இழுக்கும் பொலிஸார்

(பனிக்கன்குளம்)

கேப்பாபிலவு போராட்டத்தில் ஈடு பட்ட மூவர் மீது பொலிஸார் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் மீது பொலிஸார் வழக்கு தொடர்ந்து அலைக்கழிப்பதாக குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

கேப்பாபிலவு மக்கள் 26.01.2019 அன்று தங்கள் வாழ்இடங்களை விடுக்க கோரி கவனயீர்ப்பு போராட் டம் ஒன்றினை மேற் 23

## வாய்ப்புக்களை சாதனைகளாக மாற்ற இளைஞர்கள் முன்வர வேண்டும்

### இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் ஷில்பக் அம்புலே தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வாய்ப்புகளை சாதனைகளாக மாற்ற இளைஞர்களை முன்வர வேண்டும் என இலங்கைக்கான இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் டாக்



டர் ஷில்பக் அம்புலே தெரிவித்துள் ளார்.

இந்திய அரசின் நிதி உதவியில் பாடசாலை கட்டடம் அமைக்கப்பட்டு கையளிக்கப்படும் நிகழ்வு 23

## கடை உரிமையாளர் போல பாசாங்கு செய்து யாழ்.நகரில்

### வாடிக்கையாளர்களிடம் பணம் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர் பகுதியில் உள்ள கடை ஒன்றில் உரிமையாளர் போலவும் வாடிக்கையாளர் போலவும் பாசாங்கு செய்த நபர் ஒருவர் வாடிக்கையாளர்களிடம் இருந்து பணத்தை அபகரித்துச்சென்ற சம்பவம் நேற்று இடம்பெற் றுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக தெரிய வரு வதாவது. யாழ்ப்பாணம் ஸ்ரான்லி 24

## காணிப் பிணக்கு கைகலப்பாகியதில் முதியவர் அடித்து படுகொலை

### கொடிகாமத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

காணிப் பிணக்கு கைகலப்பாக மாறிய தால் இடம்பெற்ற தாக்குதலில் முதியவர் ஒருவர் அடித்துக்கொலை செய்யப்பட்டுள் ளார்.

கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கொடிகாமம் வடக்கு எழுதுமட்டு வாழைச் சேர்ந்த 78 வயதான செல்லன் சின்னத்துரை என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது. 24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்



## திருமதி தில்லைப்பிள்ளை தர்மலிங்கம்

கல்வயலைப் பிறப்பிடமாகவும் மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லைப்பிள்ளை தர்மலிங்கம் கடந்த 27.01.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேதவனம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் சந்திரசேகரம், நந்தினி ஆகியோரின் அன்பு மாமியும் நாகம்மா, சின்னத்தங்கம், முருகேசபிள்ளை, அன்னப்பிள்ளை, காசிப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை, வேலுப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கணேசலிங்கம், புனிதவதி, சிறீபரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் வினோதன், விகர்ணன், சீதா, விஸ்வரூபன், தஜீபன், லக்சி, தனோஜன், தர்மிலன், அகி, இராஜேஸ்வரன், கம்சா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வானவன், வராகவி, சாய்மித்ரா, அஞ்சனா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.01.2019) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-5338)

காளி கோவில் வீதி,
மீசாலை.

தகவல்:- குடும்பத்தினர்
0776846228, 0775311940

---

தோற்றம்
1985
-
01
-
12



மறைவு
2019
-
01
-
27

## திருமதி பிருந்தா குலதீபன்

(தாதி உத்தியோகஸ்தர் - பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை)

வரணியைப் பிறப்பிடமாகவும் கரணவாய் தெற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிருந்தா குலதீபன் (தாதி உத்தியோகஸ்தர் - மந்திகை) அவர்கள் நேற்று முன்தினம் (27.01.2019) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் ஐயாத்துரை குலதீபனின் பாசமிகு மனைவியும் குயின்சிகாவின் பாசமிகு தாயாரும் ஜெயராசா - உலகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி திரவியத்தின் அன்புப் பேர்த்தியும் மற்றும் ஐயாத்துரை - இந்திராணியின் பாசமிகு மருமகளும் திருமதி க.மீரா (ஆசிரியர் - யா/கரணவாய் தாமோதர வித்தியாலயம்), திருமதி ம.மதுராவின் (ஆசிரியர் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி) அன்புச் சகோதரியும் பிரதீபன் (லண்டன்), ஜெகதீப்ன் (லண்டன்), ஜெயப்பிரபா (லண்டன்), கஜேந்திரன் (சைவ மகா சபை கணக்காளர் - யாழ்ப்பாணம்), மதிகரன் (ஆசிரியர் - யா/வல்வை சிதம்பரக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் டர்வின், கவின்சா ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2019) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் பூவரசம்பிட்டியில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-5339)

வாரி வட்டம்,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

தகவல்:- ஐ.குலதீபன் (கணவர்)
077 722 9208

---

# யாழ். - வேம்படி மகளிர் கல்லூரி வீதியில் வாகன நெருக்கடி

## பல மணிநேரம் அசைய முடியாத அவலம்




யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி ஆரம்பமாகும்போதும் நிறைவடையும் போதும் வேம்படி வீதியில் மிகுந்த போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதனால் அப்பகுதியில் பல மணிநேரம் வாகனங்களும் மாணவர்களும் பெற்றோர்களும் நகரமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

நேற்றைய தினம் வேம்படி மகளிர் கல்லூரி நிறைவடைந்தபோது வேம்படி வீதியில் ஏற்பட்ட நெருக்கடியால் பல மணி நேரம் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பலரும் விசனம் தெரிவிக்கின்றபோதிலும் நிலைமையைச் சுமுகமாக்க எந்தவித நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ளவில்லை என பெற்றோர்கள் பலரும் குற்றம் சாட்டினர். (ம)


## வீடு வாடகைக்கு

வவுனியா Station Road இல் இரண்டு அறை வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு (C-5337)
077 772 9721

## வேலைக்கு ஆட்கள் தேவை

வடமராட்சியில் உள்ள வாகன சுத்திகரிப்பு நிலையம் ஒன்றுக்கு அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை. பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது.

(தங்குமிட வசதி உண்டு)

தொடர்புகளுக்கு: (C-5340)
077 619 2927



## வடக்கில் புலிகள் தோன்றும் சாத்தியம்

### - ரோஹித

வடக்கில் மீண்டும் விடுதலை புலிகள் அமைப்பு தோன்றுவதற்கான சாத்தியக்கூறுகளே காணப்படுகின்றது. கடந்த நான்கு வருட காலமாக அரசாங்கம் தீவிரவாத செயறபாடுகள் தோன்றுவதற்கு வழிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. வன்முறை சம்பவங்களின் பொழுது ஐக்கிய தேசிய கட்சி பல விடயங்களை தமக்கு சாதகமாக நிறைவேற்றிக் கொண்டது என பாராளுமன்ற உறுபபினர் ரோஹித அபே குணவர்தன தெரிவித்தார். (ம-3)

---

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
### பரமு மார்க்கண்டு
(காரைநகர்)

எமது பாடசாலைக்கு பல உதவிகள் செய்த கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் அன்புத் தந்தை அமரர் பரமு மார்க்கண்டு அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இழப்பால் துயருறும்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/அல்லைப்பிட்டி றோ.க.த.க.வித்தியாலயம்

(C-5332)
29.01.2019

---

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 02.01.2019 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
### வைரமுத்து காந்தன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (30.01.2019) புதன்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 01.02.2019 வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:- குடும்பத்தினர்
யாழ்.வீதி, இமையாணன்.

# கர்ப்பிணி ஆசிரியைகளின் ஆடைகளுக்கு அதிபர்கள் எதிர்ப்பு; கல்வியமைச்சு கவலை

(கொழும்பு)

கர்ப்பிணி ஆசிரியைகளுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ள ஆடைகளை பாடசாலைக்கு அணிந்து வருவதற்கு சில அதிபர்கள் தடை விதித்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசிரியர்களின் தொழில் கௌரவம்,சம்பிரதாயம் மற்றும் கலாசாரம் பாதுகாக்கப்படும் வகையில் வைத்தியர்களின் பரிந்துரைப்படியும் பாடசாலை ஆசிரியர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட குறித்த ஆடையை தடை செய்வது கவலைக்குரிய விடயம் எனவும் இதனால் கர்ப்பிணி ஆசிரியைகள் கஷ்டத்திற்குள்ளாவதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் எவ்வாறான விதத்திலும் குறித்த ஆடைகளுக்கு தடை விதிக்க அதிபர்களுக்கு எந்தவித உரிமையும் இல்லை எனவும் அவ்வாறான தடைகள் விதிக்கப்பட்டால் அதிபர்கள் தொடர்பில் கல்வி அமைச்சின் உடனடி தொடர்பு இலக்கமான 1988 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு அறியத்தருமாறும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




# எதிரணி அரசியல்வாதிகளை ஒடுக்கும் முயற்சியில் அரசு

## ரோஹித குற்றச்சாட்டு

(கொழும்பு)

**நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட குழப்பநிலையை முன்னிறுத்தி எதிர்க்கட்சி அரசியல்வாதிகளை ஒடுக்குவதற்கான முயற்சியில் ஐ.தே.க. அரசாங்கம் ஈடுபட்டு வருவதாக மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன குற்றம் சாட்டியுள்ளார்.**



பத்தரமுல்லை - நெலும் மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குற்றம்சாட்டியுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை மீறி, நாடாளுமன்றத்தில் அவர்களின் குரல்களை அமைதிப்படுத்த முயற்சிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சுதந்திர தினத்தன்று தேசிய கொடி ஏற்றுக

## அமைச்சர் வஜிர வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையின் 71 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியிலுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனக் கட்டடங்கள், இல்லங்கள் ஆகியவற்றில் தேசியக் கொடியை ஏற்றுமாறு, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபேவர்த்தன, நாட்டு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் 07 ஆம் திகதி வரையிலான ஒரு வார காலப் பகுதிக்குள், தேசியக் கொடியை ஏற்றிவைக்குமாறும் அமைச்சர் அனைவரிடமும் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரது தலைமையில், காலி முகத்திடலில், பெப்ரவரி 4 ஆம் திகதி காலை 9 மணி முதல் இடம்பெறவுள்ள 71 ஆவது சுதந்திர தின விழாவில், மாலைதீவு புதிய ஜனாதிபதி இப்றாஹீம் முஹம்மத் சாலிஹ், விசேட விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தீருவில் பூங்கா நினைவுத்தூபி விவகாரம் பிரேரணை ஒரு வாக்கால் தோற்கடிப்பு!

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை தீருவில் பூங்காவில் தமிழீழ விடுதலைப்புலிகளான குமரப்பா புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு வீரவேங்கைகளைத் தவிர்த்து வேறு மாற்றுக் குழு போராளிகளுக்கு நினைவுத் தூபிகள் எதுவும் அமைக்கப்படக் கூடாது என முன்வைக்கப்பட்ட பிரேரணை தவிசாளரின் ஒரு மேலதிக வாக்கால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் தீருவில் பூங்காவில் ஏற்கனவே இருந்து அழிக்கப்பட்ட நினைவுத் தூபியை மீண்டும் நிர்மாணிக்கவும், அங்கு வேறு தூபிகள் அமைக்க வேண்டாம்என்ற பிரேரணை சுயேட்சைக்குழு மற்றும் முன்னணி உறுப்பினர்களால் சபையில் முன்வைக்கப்பட்டது.

இந்தப் பிரேரணையால் சபையில் குழப்ப நிலைமை ஏற்பட்டதால் குறித்த பிரேரணை தவிசாளரால் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 8 பேரும், எதிராக 8 பேரும் வாக்களித்தனர்.

இந் நிலையில், தவிசாளர் பிரேரணைக்கு எதிராக தனது வாக்கைப் பதிவு செய்தார். அதனால் ஒரு வாக்கு வித்தியாசத்தில் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

குறித்த பூங்காவில் ஏற்கனவே குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 போராளிகளுக்கான நினைவுத் தூபி அமைக்கப்பட்டிருந்தது. அது அழிக்கப்பட்டிருந்த நிலையில் நினைவுத் தூபியை மீள அமைத்து வேறு சிலரது தூபிகளையும் அமைப்பதற்கு தமிழ்க் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

# சகல மாகாணங்களிலும் ஒரே தினத்தில் தேர்தல்

## முதலமைச்சர் இசுறு வலியுறுத்து



(கொழும்பு)

அனைத்து மாகாணங்களிலும் ஒரே தினத்தில் மாகாண சபை தேர்தல் நடத்தப்பட வேண்டும் என மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

பாதுக்க பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முக்கியமாக தென், ஊவா மற்றும் மேல் மாகாண ஆளுநர்கள் தேர்தலை ஒரே நேரத்தில் நடத்த இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்தவொரு தேர்தலுக்கும் தயார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## "அடிப்படைச்சம்பளம் 700 ரூபா"

# பிரதமர் முன்பு இரகசியமாக கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்து

### "1000 ரூபா இயக்கம்" போராட்டம்

(ஹற்றன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளமாக 700 ரூபாவை நிர்ணயித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் கூட்டுஒப்பந்தம் இரகசியமாக கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான ஆறுமுகன் தொண்டமான் மற்றும் வடிவேல் சுரேஸ் உள்ளிட்ட தொழிற்சங்க பிரதிநிதிகள், முதலாளிமார் சம்மேளன அதிகாரிகளுக்கும் இடையே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இரகசியமாக செய்து கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந் தத்தின் பிரதி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.



புதிய கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும், தொழிற்சங்கங்கள் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடக் கூடாது எனத் தெரிவித்தும் இராஜகிரியவில் அமைந்துள்ள முதலாளிமார் சம்மேளனத்திற்கு முன்பாக "1000 ரூபா இயக்கம்" நேற்று முற்பகல் 10 மணி முதல் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தது.

இதனை தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது மகஜர் ஒன்றை தொழிற்சங்கங்களிடம் ஒப்படைக்காமல் முதலாளிமார் சம்மேளனத்திடம் ஒப்படைத்தனர்.

இதன்போது 700 ரூபாவுக்காக கூட்டுஒப்பந்தம் தற்காலிகமாக பிற்போடப்பட்டுள்ளதாக முதலாளிமார் சம்மேளனத்தின் அதிகாரி ஒருவர் ஆர்ப்பாட்டக்காரர்களிடம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே கூட்டு ஒப்பந்தம் பிரதமர் முன்னிலையில் இரகசியமாக கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதன்படி, பெருந்தோட்டத்தொழிலாளர்களின் நாளொன்றுக்கான அடிப்படை சம்பளம் 700 ரூபாவும், தேயிலை விலைக்கான கொடுப்பனவு 50 ரூபாவுமாகும். அத்தோடு நாளொன்று மேலதிகமாக பறிக்கப்படும் கொழுந்து கிலோ ஒன்றுக்கு 40 ரூபாய் வழங்கப்படவுள்ளது. ஊழியர் சேமலாபநிதி (ஈ.பி.எப்) மற்றும் பரிமாற்ற வர்த்தக நிதி (ஈ.டி.எப்) 105 ரூபாவாக வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கடந்த ஒக்டோபர்மாதம் 15 ஆம் திகதி பழைய கூட்டு ஒப்பந்தம் காலாவதியானதிலிருந்து, புதிய கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் தினம்வரையான இடைப்பட்ட காலப்பகுதிக்கான சம்பள நிலுவைப்பணம் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதற்காக பெருந்தோட்டக் கைத்தொழில்அமைச்சு 10 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதோடு, கம்பனிகள் 5 கோடிரூபாவை ஒதுக்கவேண்டும் என பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒன்றரை கோடி ரூபா மூன்று மாத நிலு வைப் பணமாக தொழிலாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஹோலியும் ரோகித்தும் சேர்ந்தா 'மாசுடா' எதிர்த்து நின்ன நியூசிலாந்து 'தூசுடா'

## பத்து ஆண்டு சவால்: இந்தியா வெற்றி



பந்தை பெயின்ட் திசைக்கு தட்டிவிட்டு ஓட்டம் ஒன்றை பெற எத்தணிக்கும் ஹோலி

**47**

விராட் ஹோலி தலைமையிலான இந்திய அணி, 63 ஒருநாள் போட்டிகளில் 47 வெற்றி, 14 தோல்விகளை சந்தித்துள்ளது. ஒரு போட்டிக்கு முடிவு இல்லை. இதன்மூலம் ஒருநாள் போட்டி வரலாற்றில், முதல் 63 போட்டிகளில் அதிக வெற்றி தேடிக் கொடுத்த தலைவர்கள் பட்டியலில் மே.தீவுகளின் விவியன் ரிச்சர்ட்ஸ், தென்னாபிரிக்காவின் குரோன்சியை (தலா 46 வெற்றி) முந்தி 2ஆவது இடம்பிடித்தார் ஹோலி. முதலிடத்தில் மே.தீவுகளின் கிளைவ் லொய்ட், அவுஸ்திரேலியாவின் பொன்ரிங் (தலா 50 வெற்றி) உள்ளனர்.

**'பெஸ்ட்' ஆசிய தலைவர்**

தென்னாபிரிக்கா (5-1, 2018), அவுஸ்திரேலியா (2-1, 2019), நியூசிலாந்து (3-0) மண்ணில் ஒருநாள் தொடரை வென்ற ஒரே ஆசிய அணித் தலைவர் ஹோலி மட்டும் தான். இத்தொடர்களில் பங்கேற்ற 12 போட்டிகளில் 10 ல் இந்தியா வென்றது. 2ல் தோற்றது.

மொஹமட் ஷமியின் துல்லியமான பந்துவீச்சும் அணித் தலைவர் ஹோலி - ரோகித்தின் இணைப் பாட்டமும் இணை சேர நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன்மூலம் ஒருநாள் தொடரை 3-0 எனக் கைப் பற்றியது.

நியூசிலாந்து சென்றுள்ள இந்திய அணி. அங்கு ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டிகளில் வென்ற இந்தியா 2-0 என. முன்னிலையில் இருந்தது. இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டி நேற்று மவுண்ட் மவுன்கனுய் நகரில் நடந்தது.

**தோனி காயம்**

இந்திய விக்கெட் காப்பாளர் தோனி, தொடையின் பின்பகுதியில் ஏற்பட்ட காயத்தால் விலகினார். இவருக்கு பதிலாக தமிழக விக்கெட் காப்பாளர் தினேஷ் கார்த்திக் சேர்க்கப்பட்டார். தமிழக 'சகலதுறை வீரர்' விஜய் ஷங்கர் நீக்கப்பட்டு, தடையில் இருந்து மீண்ட 'சகலதுறை வீரர்' ஹர்திக் பாண்ட்யா தேர்வானார்.

நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணியின் தலைவர் வில்லியம்சன் 'துடுப்பாட்டத்தை' தேர்வு செய்தார்.



பந்தை பிளிக் செய்யும் ரோகித் சர்மா

போது சான்ட்னர் 'சுழலில்'

**ரெய்லர் அரைச்சதம்**

நியூசிலாந்து அணிக்கு மார்டின் கப்டில் (13), கொலின் முன்ரோ (7) ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. அணித் தலைவர் கேன் வில்லியம்சன் (28), சகாலிடம் சரணடைந்தார். பின் இணைந்த ரொஸ் ரெய்லர், ரொம் லெதம் ஜோடி விக்கெட் சரிவிலிருந்து அணியை மீட்டது. ரொஸ் ரெய்லர், ஒருநாள் அரங்கில்தனது46ஆவது அரைசதமடித்தார். சகால் பந்தை சிக்சருக்கு அனுப்பிய லெதம், தன்பங்கிற்கு அரைசதமடித்தார். சகால் 'சுழலில்' லெதம் (51) சிக்கினார்.

**பாண்ட்யா நம்பிக்கை**

ஹர்திக் பாண்ட்யா 'வேகத்தில்' நிக்கோல்ஸ் (6), மிட்சல் சான்ட்னர் (3) வெளியேறினர். ரொஸ் ரெய்லர் (93), ஷமி 'வேகத்தில்' சதமடிக்கும் வாய்ப்பை இழந்தார்.

49 ஓவர்களில் நியூசிலாந்து அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 243 ஓட்டங்களை எடுத்தது. பெர்குசன் (2) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் மொஹமட் ஷமி 3, புவனேஷ்வர், சகால், பாண்ட்யா தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றின்ர்.

**ரோகித் அபாரம்**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு ரோகித் சர்மா, ஷிகர் தவான் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. பிரேஸ்வெல் வீசிய 2ஆவது ஓவரில் 'ஹட்ரிக்' பவுண்டரி விளாசிய தவான் (28), போல்ட் பந்தில் வெளியேறினார். பின் இணைந்த ரோகித், அணித் தலைவர் விராட் ஹோலி, நியூசிலாந்து பந்துவீச்சை எளிதாக சமாளித்து ஓட்டங்கள் சேர்த்தனர்.

ரோகித் ஒருநாள் அரங்கில் தனது 39ஆவது அரைச்சதத்தை பதிவு செய்தார். இஷ் சோதி வீசிய 21ஆவது ஓவரில் 2 பவுண்டரிகள் அடித்த ஹோலி, பெர்குசன் பந்தில் ஒரு சிக்சர் பறக்கவிட்டார். இவர், ஒருநாள் அரங்கில் தனது 49ஆவது அரைச்சதத்தை பதிவு செய்தார். இரண்டாவது விக்கெட்டுக்காக 113 ஓட்டங்களை சேர்த்திருந்த ரோகித் (62) 'ஸ்ரம்பிங்' ஆனார். போல்ட் பந்தில் ஹோலி (60) 'பெவிலியன்' திரும்பினார்.

பின் இணைந்த தினேஷ் கார்த்திக், அம்பதி ராயுடு ஜோடி ஆட்டத்தை கையில் எடுத்துக் கொண்டது. சான்ட்னர் வீசிய 31ஆவது ஓவரில் 2 பவுண்டரிகள் அடித்த ராயுடு, பிரேஸ்வெல் பந்தில் ஒரு சிக்சர் விளாசினார். மறுமுனையில் அசத்திய கார்த்திக், இஷ் சோதி பந்தை சிக்ஸருக்கு அனுப்பினார்.

**'ஹட்ரிக்' வெற்றி**

இந்திய அணி 43 ஓவர்களில், 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (245 ஓட்.,) 7 விக்கெட்டுக்களால் அடைந்து 'ஹட்ரிக்' வெற்றி பெற்றதுடன் தொடரை கைப்பற்றி கிண்ணத்தை உறுதி செய்தது.

**16**

சர்வதேச ஒருநாள் அரங்கில் ஹோலி, ரோகித் ஜோடி 16வது முறையாக (70 இன்னிங்ஸ்) 100 அல்லது அதற்கும் மேல் ஓட்டங்கள் சேர்த்தது. நேற்று இவர்கள் 2வது விக்கெட்டுக்கு 113 ஓட்டங்கள் சேர்த்தனர். அதிகமுறை இதுபோல சேர்த்த இந்திய ஜோடி வரிசையில் சச்சின் - கங்குலிக்கு (26 முறை) அடுத்த இடம் பிடித்தனர்.

◈ சர்வதேச அளவில் ஹோலி - ரோகித் ஜோடி மூன்றாவது இடம் பிடித்தது. 2வது இடத்தில் டில்ஷான் - சங்கக்கார (20) உள்ளனர்.

# சிகரத்தில் ஜோகோவிச்... சறுக்கிய பெடரர்



ஆஸி., ஓபனில் சம்பியனான ஜோகோவிச் வெற்றிக் கிண்ணத்துடன்...

அவுஸ்திரேலிய ஓபனில் கிண்ணம் வென்ற செர்பியாவின் ஜோகோவிச் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் முடிந்த நிலையில் ஆண்கள் ஒற்றையருக்கான புதிய தரவரிசை பட்டியல் ('ராங்க்') வெளியானது. சம்பியன் பட்டம் வென்ற செர்பியாவின் ஜோகோவிச் 10,955 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். இறுதியில் வீழ்ந்த ஸ்பெயினின் நடால் (8,320) இடத்திலும் மாற்றம் இல்லை.

'நடப்பு சம்பியனாக' களமிறங்கி நான்காவது சுற்றில் வீழ்ந்த சுவிட்சர்லாந்தின் பெடரர் (4,600) மூன்றாவது இடத்தில் இருந்து ஆறாவது இடத்துக்கு தள்ளப்பட்டார். ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஜிவரேவ் (6,475) ஒரு இடம் முன்னேறி, 3ஆவது இடம் பிடித்தார். ஆர்ஜென்ரீனாவின் ஜுயன் மார்டின் (5,060), ரஷ்யாவின் கெவின் அண்டர்சன் (4,845) தலா ஒரு இடம் முந்தி, 4, 5ஆவது இடம்பிடித்தனர்.

# இந்தியாவின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட பாடசாலைக் கட்டடங்கள் நேற்றுத் திறப்பு














நாவற்குழி மகா வித்தியாலயத்திலும் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும் இந்தியாவின் நிதியுதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாடசாலைக் கட்டடங்கள், இலங்கைக்கான இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் டாக்டர் ஷில்பக் அம்புலே மற்றும் வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் ஆகியோரால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்.இந்திய துணைத்தூதுவர் சங்கர் பாலச்சந்திரன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், வடக்குமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண கல்வித்திணைக்கள அதிகாரிகள், பாடசாலைகளின் அதிபர்கள்,ஆசிரியர்கள்,மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தியாவின் நிதியுதவியில் வடக்கு மாகாணத்திலுள்ள 27 பாடசாலைகளில் புதிய வகுப்பறைக் கட்டடம் அமைப்பதற்கு 250 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் மேற்குறித்த பாடசாலைகள் உள்ளடங்கலாக 10 பாடசாலைகளில் கட்டட வேலைகள் முடிவடைந்துள்ளதாகவும் ஏனைய பாடசாலைகளுக்கான கட்டடப்பணிகள் நிறைவு செய்யப்பட்டு விரைவில் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-9-30)

## பரிசில் நாள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்ற சாவகச்சேரி, நுணாவில், மீசாலை பொது நூலகங்கள் இணைந்து நடத்தும் தேசிய வாசிப்புமாத பரிசில் நாள் நிகழ்வுகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சிமன்ற பொன் விழா மண்டபத்தில் இடம்பெறும்.

நகராட்சிமன்றத் தவிசாளர் திருமதி இ. சிவமங்கை தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி சுலோச்சனா முருகநேசன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (இ-29)


## தொண்டர்கள் தேவை

### தற்கொலைகளைத் தடுப்போம்!

**உங்கள் நேரத்தில் ஒரு துளியை, முன்பின் தெரியாத இன்னொருவருக்காகச் செலவிட நீங்கள் தயாரா?**

மற்றவர்களின் துயரக் கதைகளை நாம் அக்கறையாகவும், அன்பாகவும் கேட்கிறோம். மனதில் பாரத்தைச் சுமக்கும் எவருக்கும் ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகிறோம். நாம் ஊதியம் எதையும் பெறுவதில்லை. இப் புனித சேவையில் எம்முடன் இணையுங்கள். வாரத்தில் நான்கு மணித்தியாலங்கள் மட்டுமே.
அடுத்த பயிற்சி நெறி மிக விரைவில்.

**உடனே அழையுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (KKS வீதி அண்மையில்)
**077 900 8776** (மு.ப. 9.00 - பி.ப. 1.00)


## கண்ணீர் அஞ்சலி

### திரு. வேலுப்பிள்ளை சண்முகநாதன்

**மண்ணில்: 27.05.1927 விண்ணில்: 22.01.2019**



எமது பாடசாலை ஆசிரியை திருமதி பாமா கண்ணதாசன் அவர்களின் தந்தையான **திரு.வேலுப்பிள்ளை சண்முகநாதன்** அவர்கள் 22.01.2019 அன்று சிவபதமடைந்தார். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/ கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை.**
(7320)

## இராசி பலன்

**மீனம்:** சுணங்கிய காரியங்கள் மாலை நேரம் கைகூடும், தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், அன்பால் சாதித்துக் காட்டும் நாள்.

**மேடம்:** காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, உறவினர் வழியில் விரயங்கள் கூடலாம்.

**இடபம்:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், செய்தொழிலில் சிறப்புகள் கிடைக்கும், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நாள், உடல்நலன் சீராகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், தொழில் நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள், பெற்றோர் மீதான பாசம் கூடும்.

**மகரம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**சிம்மம்:** சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வாகன சுகமுண்டு, உறவினர்கள் வழியில் அனுகூலமுண்டு.

கிரகநிலை: செவ்; ராகு; சூரி.புத கேது; சனி; குரு.சுக்; சந்

சந்திராஷ்டமம்
அச்சுவினி, பரணி
பிற்பகல் 1.48 மணிக்கு
விருச்-சந்

**29.01.2019**
தை 15, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
நவமி முன்னிரவு 8.11 மணிவரை
விசாகம் முன்னிரவு 8.25 மணிவரை
சுபநேரம் 11.06-12.36 மணிவரை.
இராகுகாலம் 3.36-3.06 மணிவரை
வளவன்

**தனுசு:** திட்டமிட்ட காரியமொன்றில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், தொழில்நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், ஆழ்ந்த சிந்தனையுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்:** உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.

**கன்னி:** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள்.

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

வரணி - மாசேரி திருவருள்மிகு புராதன குருநாதர் கோவில் அலங்காரத்திருவிழாவை முன்னிட்டு நடத்தப்படும் சிறப்புச் சொற்பொழிவு ஆலய மண்டபத்தில் எதிர்வரும் 09.02.2019 சனிக்கிழமை தொடக்கம் 18.02.2019 திங்கட்கிழமை வரை இரவு 7 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

09.02.2019 சைவப்புலவர் கந்த.சத்தியதாசன் விடயம் "விநாயகர் தத்துவம்", 10.02.2019 இளஞ்சைவப்புலவர் ச.நவநீதன் விடயம் "கந்தபுராணம் உணர்த்தும் வாழ்வியல்", 11.02.2019 சைவப்புலவர் திருமாறக்குருக்கள் விடயம் "கந்தன் கருணை", 12.02.2019 இளஞ்சைவப்புலவர் ச.நவநீதன் விடயம் "வாழ்வும் வழிபாடும்", 13.02.2019 சைவப்புலவர் கந்த சத்தியதாசன் விடயம் "ஆறு முகமான பொருள்", 14.02.2019 சைவப்புலவர் பொன் சந்திரவேல் விடயம் "குரு வாய் வருவாய்", 15.02.2019 சிவநெறிச்செம்மல் நித்தியபாபுதரன் விடயம் "முருகனும் நக்கீரரும்", 16.02.2019 சைவப்புலவர் கந்த.சத்தியதாசன் விடயம் "நாலாயிரம் கண் படைத்திலனே", 17.02.2019 இளஞ்சைவப்புலவர் கைலைவாசன் விடயம் "தந்தைக்கு உபதேசம் செய்த தனயன்" 18.02.2019 இளஞ்சைவப் புலவர் த.மனோஜ்குமார் விடயம் "நாயன்மார்கள் காட்டிய நன்னெறிகள்" ஆகிய விடயங்களில் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன. (இ-7)

# இணுவில் மஞ்சத்தடி பகுதியை உடுவிலுக்கு மாற்ற எதிர்ப்பு தெரிவித்து வடக்கின் ஆளுநருக்கு மகஜர்

(இணுவில்)

இணுவில் மஞ்சத்தடி பகுதியை எல்லைப்பிரிப்பு என்ற ரீதியில் வேறு நிர்வாக கட்டமைப்புக்கு கொண்டு செல்லும் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த வாரம் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனிடம் அப்பகுதி மக்கள் மகஜர் ஒன்றைகையளித்துள்ளனர்.

அத்துடன் குறித்த பகுதிக்கான பெயரை "இணுவில் மஞ்சத்தடி" கிராம அலுவலகர் பிரிவு என மாற்றம் செய்யுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் கையளித்த மகஜரில்,

எமது இணுவில் கிராமம் தொன்மையும் வரலாற்றுச் சிறப்பும் கொண்ட சித்தர்கள் வாழ்ந்து வழிகாட்டிய சிவபூமியாகும். இப்பூமியின் பகுதியை பல துண்டங்களாகப் பிரிக்கப்பட்டு இப் பிரதேசத்தின் இணுவில் என்கின்ற பெயரும் எமது பகுதியாகிய மஞ்சத்தடி இணுவில் என்கின்ற பெயரின் அடையாளத்தையும் வரலாற்றையும் மாற்றுவதற்கு சிலர் முனைகின்றார்கள்.

எனவே எமது இணுவில் மஞ்சத்தடி பிரதேசமானது நல்லூர் பிரதேச செயலக ஆளுகைக்குள் காலாதிகாலம் இருந்து வந்ததோடு, மக்களின் சனசமூக நிலையங்கள், பொதுமண்டபம், ஆலயங்கள், முதியோர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கம் எனப் பல பொது அமைப்புக்கள் கொண்ட தனித்துவ கிராமமாகும். இதனை நாங்கள் நல்லூர் பிரதேச செயலக ஆளுகையை விட்டு பறிகொடுக்க எப்போதும் அனுமதிக்கப் போவதில்லை.

எமது கிராம அலுவலர் பிரிவின் பெயரான கோண்டாவில் வடமேற்கு எனக் குறிப்பிட்டுள்ள பெயரை இணுவில் மஞ்சத்தடி கிராம பிரிவு எனப் பெயர் மாற்றம் செய்து தருமாறும், இதன் நிர்வாகப் பிரிவை எந்த நோக்கத்திற்காகவும் மாற்றி அமைப்பதற்கு இக்கிராம மக்களாகிய நாங்கள் இடமளிக்க மாட்டோம் எனவும், இதன் நிர்வாக அலகாக நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அலகை நல்லூர் பிரதேச சபைக்குரிய நிர்வாக அலகாக உள்ளதனை எக்காரணம் கொண்டும் உடுவில் பகுதிக்கு மாற்றுவதற்கு கிராம மக்களாகிய நாம் அனுமதிக்கப் போவதில்லை என தங்களுக்கு பணிவுடன் சமர்ப்பிப்பதோடு எமது பிரிவிற்கான நிர்வாக அலகான நல்லூர் பிரதேச சபை, நல்லூர் பிரதேச செயலகத்தின் அலகுக்குட்பட்டதாக இருக்க வேண்டும் எனவும் கிராம அலுவலர் பிரிவின் பெயரை "இணுவில் மஞ்சத்தடி கிராம அலுவலர் பிரிவு" என பெயர் மாற்றி நல்லூர் பிரதேச செயலகத்தின் அலகுக்குட்பட்டு இருக்க வேண்டும்எனவும், இணுவில் மஞ்சத்தடி பகுதியின் அரைவாசிப் பகுதியை உடுவில் பகுதியுடனும் அரை வாசியை நல்லூர் பகுதியுடனும் பிரிப்பதற்கு ஒருபோதும் இக்கிராம மக்களாகிய நாம் உடன்பட முடியாது என்பதால் கிராம அலுவலரது பிரிவின் பெயரை மாத்திரம் மாற்றம் செய்து நிர்வாக அலகுக்குரிய அலகை மாற்ற முடியாது என்பதை தங்களுக் கு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஒட்டுமொத்த கிராம மக்களும் ஒப்பமிட்டு தங்களால் மேற்கொள்ளப்படும் எமது பகுதியின் பெயர் மாற்றத்திற்கு மாத்திரம் சம்மதிப்பதுடன் நிர்வாக அலகை எக்காரணம் கொண்டும் மாற்ற சம்மதிக்க முடியாது எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# புகையிலைச்செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள பல இடங்களில் பணப்பயிரான புகையிலை செய்கையை மேற்கொள்வதில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.

தீவகம், வடமராட்சி, மற்றும் வலிகாமம் பிரதேசத்தில் ஏழாலை.குப்பிளான், புன்னாலைக்கட்டுவன், மயிலங்காடு, ஈவினை, வயாவிளான்,குரும்பசிட்டி, அச்செழு, புத்தூர், நவக்கிரி, ஊரெழு, உரும்பிராய், கோப்பாய் சுன்னாகம், கந்தரோடை, மருதனார்மடம், இணுவில் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பல ஏக்கர் கணக்கில் புகையிலை செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் புகையிலை நாற்றுக்களின் விலைகள் அதிகரித்துக் காணப்பட்ட போதிலும் இந்த வருடம் புகையிலை நாற்றொன்றை ஒரு ரூபா முதல் இரண்டு ரூபா வரை கொள்வனவு செய்யக் கூடியதாக விருந்ததாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் புகையிலைச் செய்கை ஆரம்பித்திருக்கப்பட வேண்டிய போதிலும் சீரற்ற காலநிலை காரணமாக புகையிலைச் செய்கையில் இம்முறை காலதாமமேற்பட்டுள்ளதாகவும் காலம் பிந்திய புகையிலைச் செய்கையால் பாதிப்பு ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் அதற்கான ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை இருப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (இ-9)

# "அசுரர்களின் தோற்றம்" விரிவுரை

(யாழ்ப்பாணம்)

சுவாமி சிதாகாசானந்தாவால் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் கந்தபுராண விரிவுரை மாலை 6.30 மணி முதல் இரவு 7.30 மணி வரை சின்மயா மிஷன் ஞானவேல் ஆச்சிரமத்தில் (இல. 700, பருத்தித்துறை வீதி, நல்லூர் என்ற முகவரியில்) நடைபெறுகின்றது. இதில் இன்று, "அசுரர்களின் தோற்றம்" என்ற தலைப்பில் விரிவுரை இடம்பெறும். (இ-7)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி.யோகராணி தில்லைநாதன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எஸ்.மதி அழகன், சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவரின் செயலாளர் ஆர்.பேரின்பநாயகம், கௌரவ விருந்தினராக எந்திரமுறை வரைவாளர் எஸ்.நிருபன் ஆகியோர் கலந்துகொள்வர். (5)

(யாழ்ப்பாணம்)

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி நாளை 30 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் செ. இளங்கோ தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற இலங்கை வங்கி முகாமையாளரும் சுன்னாகம் எஸ். டி பி.வங்கி முகாமையாளருமான கே. லட்சுமணசர்மா (பழைய மாணவர்), சிறப்பு விருந்தினராக வடக்குப் பிராந்திய காணி சீர்திருத்த ஆணைக்குழுப் பணிப்பாளர் எஸ்.ரி.விமலன் (பழையமாணவர்) ஆகியோர் கலந்து கொள்வர். (இ.5)

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் 31 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் ம.மணிசேகரன் தலைமையில் நடைபெறும்.இதில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ, சிறப்பு விருந்தினராக வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், கௌரவ விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் இ.சசிகுமார், வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.கஜேந்திரன், அ,விமலநாசன் (பழையமாணவர் சங்கம்) ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.இதில் பிரதம விருந்தினராக மன்னார் பிராந்திய நீர்ப்பாசனத் திணைக்கள கணக்காளர் பே.குகனேசன் கலந்து கொள்வார். (5)

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் எம்.கனகலிங்கம் தலைமையில் நடைபெறும். (இ-60)

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் ஜி.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும்.இதில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளர் கே.ஜங்கரன் கலந்து கொள்வார். (இ-5)



யாழ்.நகுலேஸ்வர மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை மைதானத்தில் அதிபர் த.தயானந்தன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வலி.வடக்கு பிரதேச சபைத்தவிசாளர் சோ.சுகிர்தன் கலந்து கொண்டார்.



தென்மராட்சி மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வு அண்மையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. வித்தியாலய அதிபர் க.எழில்அழகன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக வட மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபனும் கௌரவ விருந்தினர்களாக உதவிப் பிரதேச செயலர் (கோப்பாய்) திருமதி சன்சீவன் ராதிகா மற்றும் தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.ஸ்ரீகாந்தாவும் கலந்து சிறப்பித்தனர். (படங்கள்:-விஜயவாசன்)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## ஸ்தபதி திரு. சின்னத்தம்பி கணேசலிங்கம்

(தலைவர், சில்லாலை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்)

கொழும்பு தாமரை தடாக மண்டபத்தில் 29.01.2019 இன்று நடைபெறும் 34 ஆவது அரச விருது வழங்கும் நிகழ்வில் அதிமேதகு இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் **சிற்பத்துறைக்கான கலாபூஷணம்** விருது வழங்கி கௌரவிக்கப்படும், அம்மன் வீதி பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஸ்தபதி திரு. **சின்னத்தம்பி கணேசலிங்கம்** அவர்கள் தனது வாழ்வில் சிற்பத்துறையில் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல முத்துமாரி அம்பாளை வேண்டி வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துவோர்:

**சில்லாலையூர் விஸ்வகுல உறவுகள்**

## கரைதுறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்(வ-து), முல்லைத்தீவு.

### கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு- கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் வடக்கு- கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கான விதிகளுக்கு அமைய முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2018.06.30 ஆம் திகதிய 2077/55 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 28 இற்கமைய சங்கத்தின் சகல கிளைகளுக்கும் கிளைக் குழு தெரிவிற்கான கிளைப்பொதுச்சபைக்கூட்டங்களை பின்வரும் கால அட்டவணையின்படி நடாத்துவதற்கும் இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராக கடமையாற்றுவதற்குமாக கீழ்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

1. கிளைக்குழு தெரிவு நடைபெறும் திகதி- 2019.02.02 சனிக்கிழமை
2. நேரம் - முற்பகல் 10.00மணி
3. கிளைப்பொதுச் சபைக்கூட்டம் நடைபெறும் இடங்கள்

| கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர்கள் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1. | சிலாவத்தை | திரு.வ.நிருபாகரன் | சிலாவத்தை பொதுநோக்கு மண்டபம் |
| 2. | முல்லைத்தீவு வடக்கு | திரு.ந.நாவேந்தன் | மு/முல்லைத்தீவு இந்து தமிழ் கலவன் பாடசாலை மண்டபம் |
| 3. | கள்ளப்பாடு தெற்கு | செல்வி.அ.மோகனகுமாரி | கள்ளப்பாடு கிராம அபிவிருத்தி சங்க மண்டபம் |
| 4. | முள்ளியவளை-B | திரு.சோ.கிருஸ்ணகுமார் | முள்ளியவளை மத்தி பொதுநோக்கு மண்டபம் |
| 5. | முள்ளியவளை-A | ஜனாப்.எஸ்.எம்.சாஜித் | முள்ளியவளை மேற்கு பொதுநோக்கு மண்டபம் |
| 6. | தண்ணீரூற்று | திரு.அ.சஞ்சயன் | தண்ணீரூற்று கிளை நிலைய மண்டபம் |
| 7. | கணுக்கேணி | திரு.இ.விஜயகுமார் | கணுக்கேணி கிழக்கு கிராம அபிவிருத்தி சங்க மண்டபம் |
| 8. | முள்ளிவாய்க்கால் | திரு.க.செல்வக்குமார் | முள்ளிவாய்க்கால் கிழக்கு பொதுநோக்கு மண்டபம் |
| 9. | மாத்தளன் | திரு.ச.ரதிகுலன் | அம்பலவன் பொக்கணை பொதுநோக்கு மண்டபம் |
| 10. | வற்றாப்பளை | திரு.இ.ஜெகதீபன் | வற்றாப்பாளை கிளை நிலைய மண்டபம் |
| 11. | கேப்பாபி லவு | திரு.கு.கஜந்தன் | மு/கேப்பாபிலவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மண்டபம் |
| 12. | அளம்பில் | திருமதி.ஞா.ஜெயாமேரிகொன்சி | அளம்பில் கிராம அபிவிருத்தி சங்க மண்டபம் |
| 13. | செம்மலை | திருமதி.சு.தர்சினி | செம்மலை கிராம அபிவிருத்தி சங்க மண்டபம் |
| 14. | குமுழமுனை-B | திரு.சி.பாலசுந்தரம் | குமுழமுனை மேற்கு பொது நோக்கு மண்டபம் |
| 15. | குமுழமுனை-A | திரு.வி.முகுந்தன் | மு/குமுழமுனை மகா வித்தியாலய மண்டபம் |
| 16. | கொக்குத்தொடுவாய் | திரு.கி.அ.டெனீசியஸ் | கொக்குத்தொடுவாய் மத்தி பொதுநோக்கு மண்டபம் |
| 17. | கொக்கிளாய் | திரு.பெ.பவளராஜ் | கொக்கிளாய் மேற்கு பொதுநோக்கு மண்டபம் |
| 18. | நீராவிப்பிட்டி | திரு.பொ.கோகுலன் | மு/நீராவிப்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலய மண்டபம் |

கிளைப் பொதுச்சபைக்கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவுறுத்தலுக்கமைய கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கிளைக்குழு தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச் சபைக்கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்களை சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களிலும் பார்வையிடலாம். கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களிற்கு சமுகமளித்து வாக்களிக்கத்தகைமையுடைய உறுப்பினர்கள் குறித்த அறிவிப்புக்களின் படி கிளைப்பொதுச் சபைக்கூட்டங்களிற்கு சமுகமளித்து தங்கள் ஜனநாயக உரிமையை பயன்படுத்திக் கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமை கொண்டதாக செயற்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்., முல்லைத்தீவு. (C-5316)

அ.சிங்கநாயகம்
மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.முல்லைத்தீவு.

உ
அம்பாள் துணை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

## மேற்கு வாசல் கோபுர கும்பாபிஷேகம்



**தை மாதம் 16 ஆம் நாள் 30.01.2019 புதன்கிழமை தசமி திதியும் அனுச நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் குரு கூடிய காலை 9.25 மணிமுதல் 10.50 மணி வரையான மீன லக்கின சுப முகூர்த்தத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மேற்குவாசற் கோபுரத்திற்கு மஹா கும்பாபிஷேகம் நிகழ திருவருள் கைகூடியுள்ளது.**

**அத் தருணம் அம்பாள் அடியார்கள் ஆசார சீலர்களாக வருகை தந்து அம்பாள் அனுக்கிரகத்தை பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்**

(C-5326)

நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
உயரம்: 5’5"
தகைமை/தொழில்:A/L,London PR
எதிர்பார்ப்பு:வெளிநாடு,பட்டதாரி,அரச தொழில்
தொ.இ: B/9173

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 33 செவ் 4 இல்
உயரம்: 5’9"
தகைமை/தொழில்:A/L, தனியார் தொழில்
தொ.இ: B/9147

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சுவாதி 4
தகைமை/தொழில்: நிதிஅமைச்சு
தொ.இ: B/9176

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 1 செவ் 1இல்
உயரம்: 5’
தகைமை/தொழில்: O/L ,UK
எதிர்பார்ப்பு:UK or வெளிநாடு
தொ.இ: B/9177

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 6 1/4 உயரம்: 5’6"
தகைமை/தொழில்:MD,Doctor
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும், (Doctor, Engineer, Accountant)
தொ.இ: G/2080

பிறப்பு: 1970 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா: 53 செவ் 1 இல்
தகைமை/தொழில்: A/L, Assistant Accountant
தொ.இ: G/2110

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா:18 1/4 செவ் 4 இல்
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/2115

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 4
கி.பா: 39 செவ் 8 இல்
உயரம்: 5’3"
தகைமை/தொழில்A/L,தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/2136

**கல்யாணமாலை**
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சகோதரர்களுக்கு இடையில் வாள்வெட்டு! ஒருவர் கைது

(பொகவந்தலாவ)

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெற்றெள சேர பிரிட்லேண்ட் பகுதியில் இரு சகோதரருக்கிடையே இடம்பெற்ற மோதலில் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி இருவருக்கிடையிலும் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதையடுத்தே ஒருவர் கூரிய வாளொன்றினால் மற்றைய நபரை தாக்க. அவரும் பதிலுக்கு வாளினை கைப்பற்றி பதில் தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதனால் படுகாயமடைந்த நபரின் வயிறு. கழுத்து. மற்றும் காது பகுதிகளில் கடுமையான வெட்டுக் காயங்களுக்குள்ளான நிலையில் பொகவந்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர். மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா. கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்த பொகவந்தலாவ பொலிஸார் இன்று அவரை ஹற்றன் நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தவுள்ளனர். (இ-7)

# தேசிய அரசை அமைப்பது குறித்து பேச்சுவார்த்தை இடம்பெறவில்லை

## மகிந்த அமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

மீண்டும் தனக்கு அமைச்சுப் பதவி கிடைக்கும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர மறைமுகமாக கருத்து தெரிவித்துள்ளார்.

தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக செயற்படுவதாகவும் இந்நிலை நாளை மாற முடியும் என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்து பேச்சுவார்த்தை இடம்பெறவில்லை. அவ்வாறானதொரு யோசனை முன்வைக்கப்படவில்லை. எவ்வாறான யோசனைகள் வந்தாலும் கட்சி என்ற அடிப்படையில் பேசி முடிவெடுக்கப்படும்.

இன்று நான் நாடாளுமன்ற உறுப்பினர். நாளை அது மாற முடியும். மீண்டும் நாம் இந்த அரசாங்கத்தில் இணைவோம் என்று நான் கூறவில்லை.

இந்த அரசாங்கத்தின் அதிகாரம் என்பதை உறுதியாக கூற முடியாது. வரவு -செலவுத் திட்டம் வருகிறது. அதனை நிறைவேற்ற முடியுமா? இல்லையா? என்று பார்க்கலாம்" என தெரிவித்தார். (இ-7)

# மெய்வல்லுநர் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நவரத்தினராஜா விளையாட்டு மைதானத்தில் அதிபர் எஸ்.வேலழகன் தலைமையில் நடைபெறும். (இ-5)

# கொழும்பு-ஹற்றன் பிரதான வீதியை மறித்து பாரிய ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் 700 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டு கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பு- ஹற்றன் பிரதான வீதியை மறித்து நேற்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (இ-7)

# அறநெறியை ஊக்குவிப்பது காலத்தின் கட்டாய தேவை

## அமைச்சர் இராதா தெரிவிப்பு

(நுவரெலியா)

ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புக்களை நடத்துவதை தடை செய்வதற்கான சட்ட மூலம் ஒன்று விரைவில் பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்படவுள்ளது. இந்த சட்ட மூலத்தை நிறைவேற்றுவதன் மூலம் அறநெறி பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அதிகளவில் கலந்து கொள்ள செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

காலத்தின் கட்டாயம் அறநெறி பாடசாலைகளை ஊக்குவிப்பது. அதன் மூலம் ஒரு சிறந்த மாணவ சமூகத்தை உருவாக்க முடியும் என விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சர் வேலுசாமி இராதா கிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா இந்து கலாசார பேரவையின் பொங்கல் விழா நுவரெலியா ஹாவேலியா ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# மகன் தாக்கி தாய் மரணம்

(கொழும்பு)

மீகஹாவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இசிகிலிகந்த - தெல்கொட பிரதேசத்தில் கல்லால் தாக்கப்பட்டு பெண்ணொருவர் நேற்று அதிகாலை கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட பெண்ணும் அவரது மகனுக்குமிடையில் காணி விவகாரம் தொடர்பாக கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதன்போது மகன் சீமெந்து கல்லால் தாய் மீது மேற்கொண்ட தாக்குதலாலேயே அவர் உயிரிழந்துள்ளதாக தாக்குதலை மேற்கொண்ட நபரிடம் மேற்கொண்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த பெண் 71 வயதுடைய. இசிகிலிகந்த பிரதேசத்தைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக ராகமை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-7)


# இல்ல மெய்வல்லுநர் போட்டியும் புதிய கட்டடத் திறப்பு விழாவும்


(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி முத்துதம்பி மகா வித்தியாலய இல்லமெய்வல்லுநர் போட்டியும் கட்டடத் திறப்பு விழாவும் இன்று 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிபர் ஆர்.பசுபதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இதில் கட்டடத் திறப்பு விழா முற்பகல் 10 மணியளவிலும் இல்ல மெய்வல்லுநர்போட்டி பிற்பகல்1.30 மணியாவிலும்நடைபெறும் (இ-7)

# சிறந்த சுற்றுலா நகரமாக கொழும்பு





(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் சிறந்த சுற்றுலா நகரமாக கொழும்பு பெயரிடப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டுக்கான தரப்படுத்தலில் சிறந்த சுற்றுலா நகரமாக கொழும்பு தெரிவு செய்யப்பட்டது.

கொழும்பில் நிர்மாணிக்கப்படும் பாரிய வீட்டுத் தொகுதிகள், கடைகள், பாரிய கட்டடங்கள் காரணமாக கொழும்பின் அழகு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

நிர்மாணிக்கப்பட்டு வரும் துறைமுக நகரம், கங்காராமைக்கு அருகிலுள்ள பேரே ஏரியிலுள்ள தீவு, எல்டயார் வீட்டுத்தொகுதி ஹில்டன் ரெசிடன்ஸ் வீட்டுத் தொகுதிக்கு பின்னால் கட்டப்பட்டுள்ள தாமரைக் கோபுரம் ஆகியன முக்கிய இடங்களாக பட்டியலிடப்பட்டுள்ளன.

நாளாந்தம் இலட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வந்து செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரணில் அரசிற்கு எதிரான 'டொப்-20' கோவையை கையளிக்க நடவடிக்கை

(கொழும்பு)

ஒன்றிணைந்த எதிரணி. "டொப்-20" எனும் கோவையை ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவிவகித்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதியிலிருந்து 2018 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற ஊழல், மோசடி, தொடர்பில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவிடமே இந்த அறிக்கையை ஒன்றிணைந்த எதிரணி கையளிக்கவுள்ளது.

இது தொடர்பிலான விபரங்களை ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்றக்குழுத்தலைவர் தினேஷ் குணவர்த்தன எம்.பி.விரைவில் அம்பலப்படுத்துவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்னவை தவிசாளராகக் கொண்டு நியமிக்கப்பட்டுள்ள மேற்படி ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்பிலான விசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த 14 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தது.


கடந்த மூன்றாண்டு காலப்பகுதியில் அரச நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல், மோசடி, குற்றவியல் ரீதியான மீறுகை உள்ளிட்ட அரச வருமானத்துக்குப் பாரதூரமான நட்டங்களை ஏற்படுத்திய சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கே இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.' (இ-7)



இலங்கை வங்கியின் வட்டுக்கோட்டை கிளையின் புதிய அமைவிடத்தின் ஆரம்ப நிகழ்வுகள் அண்மையில் நவாலி வீதி, வட்டுக்கோட்டையில் நடைபெற்றது. இந்த ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் எம்.ஜே. பிரபாகரன் கலந்து கொண்டார். இந் நிகழ்வில் செயற்பாட்டு முகாமையாளர் திருமதி எஸ்.பிரபாகரன், பிரதேச முகாமையாளர் எஸ். ஆனந்தராஜா ஆகியோருடன் மதகுருமார்கள், ஓய்வூதியர்கள், திணைக்களப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# மூன்று மாத போராட்டத்திற்கு 50 ரூபா வழங்கிய ஐ.தே.க.

## அரசு மீது திஸ்ஸ விசனம்



(கொழும்பு)

ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கேட்டுப் போராடிய மலையக மக்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஐம்பது ரூபாய் மட்டும் வழங்கி ஏமாற்றி விட்டதாக முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண குற்றம்சாட்டியுள்ளார்.

இலங்கையின் வருமானமார்க்கத்தில் கணிசமான பங்காற்றி வரும் தோட்டத் தொழிலாளர்கள் சம்பள அதிகரிப்பின்றி பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்தனர்.

இவர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பாக பல்வேறு பகுதி மக்களும் இன, மத, மொழி வேறுபாடின்றி ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தொழிற் சங்கங்களுடனும் முதலாளிமார் சம்மேளனத்துடனும் மூன்று மாதங்களாகப் பல சுற்றுப் பேச்சுவார்த்தை இடம்பெற்ற நிலையில் ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு கேட்ட மக்களுக்கு 855 ரூபா என நிர்ணயம் செய்தமை அம் மக்களை ஏமாற்றும் செயல் எனத் தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டு கூட்டு ஒப்பந்தத்தையும் இவ்வாண்டு (2019) கூட்டு ஒப்பந்தத்தையும் நோக்கும் போது.

| தோட்டத்தொழிலாளர்களின் | 2006 | 2019 |
|---|---|---|
| அடிப்படைச் சம்பளம் | 500 | 700 |
| வரவுத் தொகை | 60 | இல்லை |
| நிலையான தொகை | 30 | 50 |
| உற்பத்திக் கொடுப்பனவு | 140 | இல்லை |
| ஊழியர் சேமலாப நிதி | 75 | 105 |
| மொத்தம் | 805 | 855 |

மூன்று மாத காலமாக சம்பள அதிகரிப்பிற்காக போராடிய மலையக மக்களுக்கு ஐம்பது ரூபா சம்பள அதிகரிப்புடன் மாதம் 855 ரூபா மட்டுமே வழங்க ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் நடவடிக்கையெடுத்துள்ளதாகக் குற்றம் சாட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தனது கொள்கையை சரியாகவே திட்டமிட்டு மேற்கொள்வதாகவும் இவர்களின் கொள்கையின் பிரகாரம் முதலாளி வர்க்கத்தை வளர்ப்பதற்கு சாதாரண மக்களின் இரத்தத்தை உருஞ்சுகிறார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# குடாக்கனையில் கசிப்பு உற்பத்தியை நிறுத்த போதிய ஒத்துழைப்பு வழங்கவில்லை!

## அரச அதிகாரிகள், பொலிஸார் மீது மக்கள் புகார்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சுழிபுரம் - குடாக்கனை கிராமத்தில் கசிப்பு உற்பத்தி, விற்பனை நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில் அதை தடுத்து நிறுத்துவது தொடர்பில் ஆராய்வதற்காகக் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு அப்பகுதி கிராம உத்தியோகத்தர்களும் வலி. மேற்கு பிரதேச செயலாளரும் வருகை தரவில்லை என பிரதேச மட்ட அமைப்புக்கள் கவலை வெளியிட்டுள்ளன.

இதனால் அந்தக் கூட்டத்திற்கு வருகை தந்த வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் பொலிஸாரும் திரும்பிச் சென்றனர் எனவும் அதையடுத்து கூட்டம் நடத்தப்படாமலே நிறுத்தப்பட்டது எனவும் தெரிவித்தனர்.

மேற்படி பிரதேசத்தில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக கசிப்பு உற்பத்தி, விற்பனை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இதனால் அப்பிரதேச மக்களும் அயற் பிரதேச மக்களும் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றன.

மாணவர்களின் கல்வி நடவடிக்கையும் பாதிக்கப்பட்டு கிராமப்புறங்கள் கல்வியில் பெரும் பின்னடைவைக் கண்டுள்ளன. இக்கசிப்பு உற்பத்தியை நிறுத்துமாறு பல தடவைகள் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்ற போதிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வட்டுக்கோட்டை பொலிஸாரும் இதில் போதிய அக்கறை எடுக்கவில்லை என மக்கள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இந்நிலையில், கசிப்பு உற்பத்தியை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு குடாக்கனை மக்கள் இம்மாதம் 2 ஆம் திகதி வலி. மேற்கு பிரதேச செயலாளருக்கு கடிதம் ஒன்றைக் கையளித்தனர். கசிப்பு உற்பத்தியில் ஈடுபடும் 7 குடும்பங்களின் பெயர் விரபங்களும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தன. இதனால் பாதிக்கப்படுகின்ற கிராமங்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருந்தன.

இக்கடிதத்தின் பிரதிகள் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், வட்டுக்கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி, யாழ்.அரச அதிபர், வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி, மதுவரித் திணைக்கள் பொறுப்பதிகாரி, ஜே/172, 173 கிராம உத்தியோகத்தர்கள் போன்றோருக்கும் அனுப்பப்பட்டிருந்தன. இதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில், சுழிபுரம் மத்திய கிராம அபிவிருத்திச் சங்கமும் குடாக்கனை சமூகமட்ட அமைப்புக்களும் இணைந்து கடந்த 17 ஆம் திகதி கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தன.

இதற்கு வலி.மேற்கு பிரதேச செயலாளரும் மேற்படி கிராம உத்தியோகத்தர்களும் வருகை தருவார்கள் எனக் கூறிய போதிலும் அன்று அவர்கள் வருகை தரவில்லை.

இதனால் அவர்கள் இல்லாத நிலையில் கூட்டத்தை நடத்த முடியாது எனக் கூறிவிட்டு அங்கு வருகைதந்திருந்த பொலிஸ் பொறுப்பதிகாரி திரும்பிச் சென்றுள்ளார். கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு எவரும் ஒத்துழைப்பு வழங்காமை குறித்து மேற்படி பிரதேச மக்கள் ஏமாற்றமும் விரக்தியும் அடைந்துள்ளனர். இது தொடர்பாக அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாக ஆராய்ந்து வருகின்றார்கள் என குடாக்கனை சமூக மட்ட அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (இ-9)

## குறை'களை' பதிகம் 13



### கருவழிக்கும் மானிப்பாய் வீதி

பெருமைமிகு மருதடி விநாயகன்
பேர்புகழ் அந்தோனியார்
சைவத்தின் பெருவள்ளல்
சேர். பொன். இராமநாதப் பிரபு
சேர்ந்திருந்த மானிப்பாய் நகர்
சேர்த்த பெரும் புகழெல்லாம்
பாழாய்ப் போகுது மானிப்பாய் வீதியால்

குன்று குழியில் விழுந்தெழுந்து
வீதிவழி போபவர்கள்
என்ன பாவம் செய்தனரோ!
வந்த வாகனம் துள்ளிப் பாயும்
முச்சக்கரவண்டிகள் கரணம் அடிக்கும்
கனரக வாகனங்கள் தீக்குளிக்கும் ,
புதுமணத் தம்பதிகள் வரும்
மோட்டார் சைக்கிள்கள்
கருவுற்ற தாய்மையை நிலைகுலைக்கும்
ஐயகோ! தமிழினத்தின் பெருக்கம்
அறுக்கவோ இன்னமும்
மானிப்பாய் வீதியை விட்டு வைத்தார்

பொங்கி வழியும் வாகனங்கள்
மானிப்பாய் வீதியால் போகமறுத்து
கே.கே.எஸ். வீதி வழி செல்ல
அந்தோ வாகன நெருக்கடியால்
கே.கே.எஸ்.வீதி கொண்ட கடும் கோபத்தில்
வந்த வாகனங்களை வீழ்த்தி
வழியனுப்பி வைக்கின்ற துயரம் காணீரோ!

அன்னவரே பதவியில் இருக்கும் பெரியோரே!
குண்டு குழியாய் கிடக்கும்
மானிப்பாய் வீதியை
காப்பெற் வீதியாய் திருத்தித் தருகவென்று
குறை'களை' பதிகம் பாடினோம் பரவினோம்

-கூத்தனார்-

**அன்பு வாசகர்களே!**

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# மாலியில் தாக்குதல்-உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு ஜனாதிபதி அனுதாபம்

(கொழும்பு)

மாலியில் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குத லில் உயிரிழந்த இலங்கை இராணுவத்தினர்களின் உறவினர்களுக்கு . ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தத் தாக்குத லில் படுகாயமடைந்த ஏனைய வர்களும் விரைவில் குணமடைய வேண்டுமென தாம் பிரார்த்திப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.





ஜனாதிபதி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு இதனை தெரிவித்துள் ளார். கடந்த 25ஆம் திகதி வெள் ளிக்கிழமை மாலியில் இடம் பெற்ற கண்ணிவெடி தாக்குதலில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், அறுவர் காயமடைந்திருந்தனர். அவர்க ளில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும், இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் ஆகியோர் தமது கண்டனங்களையும் அனுதாபத்தையும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வரலாற்றில் முதல் தடவையாக

# முழங்கால் மீள் மாற்றீட்டு அறுவை சிகிச்சையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலை சாதனை

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் வரலாற்றில் முதல் தடவையாக முழுமையான முழங்கால் மீள் மாற்றீட்டு அறுவை சிகிச்சை (Total Knee replacement surgery) கடந்த 26 ஆம் திகதி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தனியான எலும்பு முறிவு சிகிச்சை நிலையம் இன்றிய நிலையிலும் மன்னார் வைத்தியசாலையில் பெறப்பட்ட மருத்துவ உபகரணங்களைக் கொண்டும் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



மத்திய சுகாதார அமைச்சினால் அண்மையில் கிளிநொச்சிக்கு நியமிக்கப்பட்ட முடநீங்க சத்திரசிகிச்சையியல் நிபுணர் மருத்துவர் எஸ். சசிகரன் தலைமையிலான சத்திர சிகிச்சைக் குழுவினர் மூத்த மயக்க மருந்தியல் மருத்துவர் உட்பட மருத்துவர்கள், தாதியர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள் உள்ளிட்ட பத்து பேர் கொண்ட அணியினர் இணைந்து இந்தச் சாதனையைப் புரிந்துள்ளனர்.

மூட்டுவாதம் காரணமாக நடக்க முடியாது சிரமப்பட்ட மன்னார் பள்ளிமுனையைச் சேர்ந்த 63 வயதான ஒருவருக்கே இச்சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் முழங்கால் மீள் மாற்றீட்டு அறுவைச் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கே செல்ல வேண்டிய நிலை இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.(2-312-315)


## நிலமீட்பு முற்றுகைப் போராட்ட களத்தில்

# தென்னிலங்கையிலிருந்து அருட்சகோதரிகள், பொது அமைப்புக்கள், பொதுமக்கள் இணைவு

(கண்டாவளை)

முல்லைத்தீவு - கேப்பாபிலவில், இராணுவத்தினர் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி, படைமுகாம் வாயிலில் ஆரம்பிக்கப்பட்ட முற்றுகைப் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக தென்னிலங்கையைச் சேர்ந்த பொதுமக்கள், அருட்சகோதரிகள், பொது அமைப்புக்கள் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

காணி விடுவிப்பை வலியுறுத்தி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த கேப்பாபிலவு மக்கள், கடந்த 26 ஆம் திகதி முதல் படைமுகாம் வாயிலில் முற்றுகைப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.



முல்லைத்தீவு நீதிமன்ற உத்தரவிற்கமைவாக படைமுகாம் வாயிலில் இருந்து 75 மீற்றர் தொலைவில் சென்று போராட்டக்காரர்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவ முகாமுக்கு முன்பாக பெண்களும் குழந்தைகளும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

படைமுகாம் வாயிலில் மக்கள் தமது போராட்டத்தை தீவிரப்படுத்தியுள்ளனர். (2-315)

# வவுனியா மாவட்டத்திலும் படைப்புழு தாக்கம்

## கமநல அபிவிருத்தி திணைக்கள உதவிப்பணிப்பாளர் தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்திலும் சோளப் பயிர்ச் செய்கையில் படைப் புழுக்களின் தாக்கம் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் படைப் புழுக்களின் தாக்கம் ஏற்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்திலும் சோளப் பயிர்ச் செய்கையில் ஏற்பட்ட படைப் புழுக்களின் தாக்கம் தற்போது ஏனைய பயிர்கள் மீதும் தாக்கியுள்ளது. இதனால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் விவசாய திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் என்பன இணைந்து மேற்கொண்டு வருகின்றது.

அந்தவகையில் வவுனியா நெடுக்கேணி மற்றும் பம்பைமடு கமக்கார அமைப்பு பிரிவில் 40.5 ஏக்கர் நெற்பயிர்ச்செய்கையும் உலுக்குளம் மற்றும் மடுகந்த கமக்கார அமைப்பு பிரிவில் 72.5 ஏக்கர் சோளப் பயிர்ச் செய்கையும், உலுக்குளம் கமக்கார அமைப்பு பிரிவில் 0.5 ஏக்கர் குரக்கன் பயிர்ச் செய்கையும், கோவில்குளம் கமக்கார அமைப்பு பிரிவில் 10 ஏக்கர் உளுந்து பயிர்ச் செய்கையும் படைப்புழுக்களின் தாக்கம் காரணமாக பாதிப்படைந்துள்ளது.

இதனை கட்டுப்படுத்தும் வகையில் மாகாண விவசாய திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், விவசாய பயிற்சிக் கல்லூரி என்பன இணைந்து பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளனர் எனத் தெரிவித்தார். (2-250)




# வணிக வேளாண் ஒன்றிய பிரதிநிதிகள் இந்தோ.தூதுவருடன் கலந்துரையாடல்

## சர்வதேச வர்த்தக கண்காட்சியில் கலந்து கொள்ளவும் ஏற்பாடு





(பரந்தன்)

கிளிநொச்சி வணிக வேளாண் கைத்தொழில் ஒன்றிய பிரதிநிதிகள் இந்தோனேசியத் தூதுவரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இச் சந்திப்பு நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது கிளிநொச்சி மாவட்ட வர்த்தகர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், சவால்கள் உள்ளிட்டவற்றை கேட்டறிந்து கொண்ட இந்தோனேசியத் தூதுவர் ஐ.குஸ்தி நகுருக் ஆர்தியச, இந்தோனேசியா இந்த வர்த்தகர்களுடன் பரஸ்பர வணிக தொடர்புகளை மேற்கொள்வது பற்றியும், வணிகம் தொடர்பான பயிற்சிகள் தொடர்பிலும் கவனம் செலுத்துவதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு, இவ் வருடம் ஒக்டோபர் மாதம் இந்தோனேசியாவில் இடம்பெறவுள்ள சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் கிளிநொச்சியில் இருந்து கலந்துகொள்ள விரும்பம் உள்ள வர்த்தகர்கள் சிலருக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை தங்களின் வணிக வேளாண் கைத்தொழில் ஒன்றியத்திற்கு ஒரு கட்டடம் ஒன்றை அமைத்துத் தருமாறு ஒன்றிய பிரதிநிதிகள் கோரிக்கை ஒன்றை முன்வைத்தனர்.

இச்சந்திப்பில் வணிக வேளாண் கைத்தொழில் ஒன்றியத்தின் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் மற்றும் இந்தோனேசிய தூதரக அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (2-312-315)

# இலவச கற்றாக் சத்திர சிகிச்சை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நியு சென்சரிகழகத்தின் ஏற்பாட்டில் ஜாஎல பமுனுகம லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் இலவச கண் கற்றாக் சத்திர சிகிச்சை செய்வதற்கான வைத்தியப் பரிசோதனை அண்மையில் லயன்ஸ் கழகத்தினரால் கிளிநொச்சி சிட்டி மெடிக்கல் கிளினிக்கில் ஆரம்ப நிகழ்வாக நடைபெற்றது.

இதில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதன்போது சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டியவர்கள் இனம் காணப்பட்டு தொடர் நடவடிக்கை தொடர்பில் வைத்தியர்களால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இதற்கமைய எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதியளவில் சத்திர சிகிச்சை மேற்கொள் ளப்பட உள்ளவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு இலவச சத்திர சிகிச்சை மேற்கொள் ளப்படவுள்ளனர். (2-254)

# பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடுவில் வெள்ளத்தினால் பாதிக் கப்பட்ட கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 200 மாணவர்களுக்கு கடந்த 17 ஆம் திகதி யாழ்.இந்துவின் பயனியஸ் (86) அமைப்பின் ஊடாக கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அமைப்பின் தலைவர் சி. ஞானகரன் தலைமையில் இடம்பெற்றது.

தமிழர் சங்கமம் வேல்ஸ் பிரித்தானியா அமைப்பின் அனுசரணையுடன் இடம்பெற்ற இந் நிகழ்வில் கிளி/ சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலை, கிளி/ தர்மபுரம் மத்தி கல்லூரி, கிளி/ கலவெட்டித்திடல் நாகேஸ்வரி வித்தியாலயம், கிளி/ இராமநாதபுரம் அ.த.க. பாடசாலை, கிளி/ கல்மடு நகர் அ.த.க. பாடசாலை, கிளி/ கட்டைக்காடு இ.த.க. பாடசாலை மற்றும் கிளி/ முருகானந்தா பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் இருநூறு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (2-10)

# ஆனையிறவு பாலம் புனரமைப்பு; 4 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

## வடக்கு ஆளுநருக்கு மகஜர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆனையிறவு ஏ-9 வீதியில் முன்னர் அமைக்கப்பட்டிருந்த பாலம் வீதிப் புனரமைப்பின் பின்னர் மீண்டும் அமைக்கப்பட்டுள்ளதனால் ஆனையிறவு, பூநகரி, கிளாலி, கச்சாய், கரைச்சி, கண்டாவளை உட்பட 41 கிராமங்களைச் சேர்ந்த 4 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக அவர்களின் வாழ்வாதார மீன்பிடி, விவசாயம் ஆகிய வற்றை செய்ய முடியாமல் முற்றாக வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

இதற்கான தீர்வினை பெற்றுத்தர கோரி நேற்றையதினம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

அவர்கள் கையளித்த மகஜரில் குறிப்பிட்டுள்ளதாவது.

தற்போது வடமாகாணத்தில் ஏற்பட்டுள்ள வரட்சி, மற்றும் வெள்ளம் காரணமாக மீண்டும் இப் பாலம் தொடர்பான பிரச்சினை எழுந்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப் பள்ளி, கரைச்சி, கண்டாவளை பூநகரி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட கிட்டத்தட்ட 41 கிராமங்களை சேர்ந்த 3ஆயிரத்து 500 தொடக்கம் 4 ஆயிரம் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் தமது வாழ்வாதார ரீதியில் பெரும் பாதிப்புகளையும், பிரச்சினைகளையும் எதிர் நோக்கியுள்ளனர்.

இதன்படி சிறுகடல் நீரில் உப்புத்தன்மை அதிகரித்துள்ளமை, இப்பகுதிக் கிணறுகளிலிருந்து பாவிக்கப்பட்டு வந்த குடிநீர் உவர்தன்மையாகியதுடன் சிவப் புக்காவி படிந்துள்ளமை, பெரும்கடல் மீனினம் இப்பகுதிக்கு வர முடியாத நிலை, கடல் தாவரங்கள், சங்கினங்கள், சிப்பியினங்கள் அழிந்துள்ளமை, கோடை காலங்களில் கடல்நீரின் நிலை வற்றும் வேளையில் வெப்ப அதிகரிப்புடன் தரவையும் உருவாகின்றது.

மேற்கூறப்பட்ட இயற்கைச் சூழல் பாதிப்புக்களையும், மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளையும் தங்களது மேலான கவனத்திலெடுத்து ஆவன செய்துதவுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-285)

# புதிய விவசாயக் காப்புறுதி தொடர்பில் கவனம் செலுத்தப்படும்

## இரணைமடு விவசாய சம்மேளனத்தினருக்கு ஆளுநர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

**இரணைமடுக்குளத்தில் நீர் வற்றிப்போகும் காலப்பகுதியில் விவசாயம் மேற்கொள்ள முடியாமற் போகும் மக்களின் பொருளாதார நிலைமையைத் தொடர்ந்து பேண்தகு நிலையிலேயே வைத்துக்கொள்ள சாத்தியமான வழிமுறைகள் தொடர்பில் ஆராய்வதோடு இது தொடர்பில் காப்புறுதி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதனூடாக புதிய விவசாயக் காப்புறுதியொன்றை உருவாக்குவது தொடர்பில் ஆராயப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.**



கிளிநொச்சிக்கு நேற்று முன்தினம் நண்பகல் விஜயம் மேற்கொண்ட ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் இரணைமடுக்குள விவசாய சம்மேளனத்தின் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

கடந்த வாரம் கலந்துரையாடிய விடயங்களின் முன்னேற்றம் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டதுடன் வடக்கு மாகாணங்களின் ஐந்து மாவட்டங்களினதும் விவசாயிகள்,பொறியியலாளர்கள்,அரச அதிகாரிகள் ஆகியோரை பிரதிநிதித்துவப்படுத்தி அமையப்பேரகும்குழு தொடர்பிலும்விவசாயிகளுடன் இதன்போது ஆராயப்பட்டது.

கிளிநொச்சி, இரணைமடு மற்றும் இரணைமடு குளத்திற்கு நீர் வரும் பகுதிகள் போன்றவற்றில் கடந்த ஐம்பது வருடங்களில் இடம்பெற்ற மழைவீழ்ச்சி மற்றும் குளத்தின் நீர் சேமிப்பு தொடர்பான முழுமையான அறிக்கையை பெற்று விரிவாக ஆராய்ந்து அதனடிப்படையிலேயே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தினையும் ஆளுநர் இதன்போது வலியுறுத்தினார்.

கடந்த பருவத்தில் அதிகளவான மழைவீழ்ச்சி கிடைத்திருப்பதன் காரணமாக குளத்தின் நீர் கொள்ளளவு அதிகமாகக் காணப்படுவதால் அதனை சரியான ரீதியில் முகாமைத்துவம் செய்வது தொடர்பில் தமக்கு பயிற்சிகள் வேண்டுமென்ற விவசாயிகளின் கோரிக்கையை பாராட்டிய ஆளுநர் விவசாயிகளுக்கும் இதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பயிற்சிகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

இரணைமடு குளத்தில் முதல் ஐந்து வருடங்கள் நீர் நிரம்புவதுடன் அடுத்த இரு வருடங்கள் நீர் குறைவதோடு அதற்கு அடுத்த வருடத்திலிருந்து ஐந்து வருடங்களுக்கு மீண்டும் நிரம்பி வரும் சுழற்சி நடைமுறையே ஆரம்பம் தொட்டு காணப்படுவதாக விவசாயிகள் ஆளுநருக்கு தெரிவித்ததோடு குளத்தில் நீர் வற்றிப்போகும் காலத்தில் தாம் பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டனர்.

விவசாயிகளின் இந்தக் கருத்துக்களை செவிமடுத்த ஆளுநர் இரணைமடுக் குளத்தில் நீர் வற்றிப்போகும் காலப்பகுதியில் விவசாயம் மேற்கொள்ள முடியாமற்போகும் மக்களின் பொருளாதரா நிலைமையினை தொடர்ந்தும் பேண்தகு நிலையிலேயே வைத்துக் கொள்ள சாத்தியமான வழிமுறைகள் தொடர்பில் ஆராய்வதோடு இது தொடர்பில் காப்புறுதி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதனூடாக புதிய விவசாயக் காப்புறுதியொன்றை உருவாக்குவது தொடர்பில் ஆராய்வதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

இதன்போது ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் விவசாயிகளுடனான இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தார். (2)

# அம்மாச்சி உணவகம் விரைவில் மல்லாவியில் திறக்கப்படும்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவிப் பிரதேசத்தில் உள்ளக உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழான 4.25 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட பாரம்பரியஉணவு வகைகளை விற்பனை செய்யும் அம்மாச்சி உணவகம் திறந்து வைக்கப்படவுள்ளது.

மல்லாவி வைத்தியசாலையில் விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சைபெறுபவர்களின் தேவை கருதி வருபவர்களுக்கு இந்தப்பிரதேசத்தில் உணவகம் ஒன்றை அமைக்கவேண்டுமென்று கடந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பிரதேச மக்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கையினையடுத்து மல்லாவி வைத்தியசாலைக்கு முன்பாக பாரம்பரிய உணவு வகைகளை விற்பனை செய்யும் மேற்படி விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது.

நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த உணவகம் மிக விரைவில் திறந்து வைக்கப்பட்டு மக்களுக்கான தேவைகளை நிறைவேற்றுவதற்கும் பெண் தலைமைத்துவக்குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்கும் இது பெரிதும் உதவியாக இருக்குமென்று முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (2-315)

வன்னி வலம்

# தொழில் பயிற்சி நிலையம் விவசாயிகளுக்கு அமைப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேசத்தில் விவசாயிகளுக்கான பயிற்சிகளை வழங்கும் விதத்தில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் ஏழு மில்லியன் ரூபா செலவில் தொழில் பயற்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

விவசாய மாவட்டமாக காணப்படுகின்ற முல்லைத்தீவு மாவட்டத்தின் விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்ப விவசாய முறைகளையும் பாரம்பரிய விவசாய முறைகளையும் அறிமுகப்படுத்துதல்,பயிற்சி வகுப்புக்களை அறிமுகப்படுத்துதல் போன்ற செயற்பாடுகளுக்கு பொருத்தமான கட்டட வசதிகள் மல்லாவிப்பிரதேசத்தில் இல்லாது காணப்பட்டது.

இந்தப் பிரதேசத்திலுள்ள விவசாய அமைப்புக்கள் விடுத்த கோரிக்கைகளுக்கு அமைவாக மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் சுமார் ஏழு மில்லியன் ரூபா செலவில் குறித்த தொழில் பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. (2-315)

# விவசாயிகளின் தேவை கருதி நிர்மாணிக்கப்பட்ட நெற்களஞ்சியம் சொந்த தேவைகளுக்கு பயன்பாடு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு நிதியீட்டங்கள் ஊடாக பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நெற்களஞ்சியங்கள் தனிநபர்களின் பயன்பாட்டுக்கும் சட்டவிரோதச் செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தின்பின்னரான மீள்குடியமர்வைத் தொடர்ந்து விவசாயிகளின் தேவை கருதி முன்னுரிமை அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட பல கட்டடங்கள் கமக்கார அமைப்புக்களைச் சேர்ந்த குறிப்பிட்ட சிலரால் தமது சொந்தத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக கண்டாவளைப் பிரதேசத்தில் தேவை கருதி அமைக்கப்பட்ட நெற்களஞ்சியம் ஒன்றை குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த அமைப்பின் தலைவர் தனது சொந்தத் தேவைகளுக்காக கடந்த இரண்டு வருடங்களிற்கு மேலாக பயன்படுத்தி வருகின்றார்.

குறித்த களஞ்சியத்துடன் காணப்படுகின்ற நெல் உலர விடும்தளம் ஒன்றினையும் தனிநபரே பயன்படுத்தி வரும் அதேநேரம் குறித்த களஞ்சியத்தில் வேலையாட்கள் ஒன்று கூடி மதுஅருந்துதல்,அயலவர்களுக்கு இடையூறு விளைவித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொதுச்சந்தை, கிராம அலுவலர் அலுவலகம், ஆலயம் என்பவற்றிற்கு அருகில் இது அமைந்திருப்பதனாலும் இங்கே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (2-315)

# வவுனியா ஆலயத்தில் திருட்டு முயற்சி; மணியோசையயடுத்து தப்பியோட்டம்

(வவுனியா)

வவுனியா கோவில் புதுக்குளம் மகாவிஷ்ணு ஆலயத்தில் இடம்பெறவிருந்த திருட்டுச்சம்பவம் பொதுமக்களால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

"குறித்த ஆலயத்தில்நேற்று முன்தினம்அதிகாலை வேளை ஒரு மணியளவில் நான்கு பேரை கொண்ட குழுவினர் ஆலயத்தின் வாசல் பகுதியூடாக உள்நுழைந்துள்ளனர்.

அதனை அவதானித்த ஆலயத்தின் காவலாளி ஓடிச் சென்று ஆலயத்தின் மணியை அடித்துள்ளார். இதனால் அருகில் இருந்த பொதுமக்கள் ஆலயத்திற்குள் ஒன்றுகூடினர்.

இதனால் செய்வதறியாது திகைத்த திருடர்கள் தப்பியோடியுள்ளனர். சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவில் ஆலயத்தின் நிர்வாகத்தினரால் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள சிவன் ஆலயத்திலும் அண்மையில்உண்டியல்கள் உடைக்கப்பட்டு திருடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# காணிகளின் முறைப்பாடுகள் தொடர்பில் மத்தியஸ்த சபையின் விசாரணைகள் ஆரம்பம்

## அடுத்த கலந்துரையாடல் 10 ஆம் திகதி

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் உள்ள காணிப் பிரச்சினைகள் தொடர்பாக விசேட காணி மத்தியஸ்த சபையிடம் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில் விசேட காணி மத்தியஸ்தர் சபை· தவிசாளர் இ.நவரட்ணம் தலைமையில் காலை 9 மணியில் இருந்து ஒரு மணிவரை முறைப்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல்கள், விசாரணைகள் என்பன இடம்பெற்றன.

வவுனியா மாவட்டத்தில் உள்ள காணிப் பிணக்குகள் தொடர்பாக விசேட காணி மத்தியஸ்தர் சபையிடம் இது வரை 370 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதன் அடிப்படையில் முதல்கட்டமாக நேற்று முன்தினம் 10 காணிப் பிணக்குகளுக்கான கலந்துரையாடல்கள் ஆரம்பமாகியுள்ளன.


இதன்போது முறைப்பாட்டாளர்கள் மற்றும் எதிர்த்தரப்பினர் ஆகியோருக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்த நிலையில் அவர்கள் வருகை தந்திருந்தனர்.

ஒவ்வொரு முறைப்பாடுகளும் மூவர் கொண்ட மத்தியஸ்தர் குழாம் மூலம் கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன், அடுத்த கட்ட கலந்துரையாடல்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ் ஆரம்ப நிகழ்வில் விசேட காணி மத்தியஸ் சபை ஆணைக்குழுவின் ஆலோசகர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.திருநாவுக்கரசு, ஆசியான் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் எம்.ஜயந்த, நீதி அமைச்சின் மாவட்ட உத்தியோகத்தர் எஸ்.விமலராஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# பாரதம்

## அசாம் தொடர் குண்டுவெடிப்பு வழக்கு; 15 பேர் குற்றவாளிகளாக அறிவிப்பு





(கவுகாத்தி)

அசாம் மாநிலத்தில் 2008ஆம் ஆண்டு நடந்த தொடர் குண்டுவெடிப்பு வழக்கில் போடோலாந்து இயக்கத்தலைவர் உட்பட 15 பேரை குற்றவாளிகளாக சிபிஐ நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

அசாம் மாநிலத்தின் தலைநகரான கவுகாத்தி மற்றும் கோக்ரஜார், பான் கைகவ்ன், பார்பேட்டா ஆகிய பகுதிகளில் கடந்த 30-10-2008 அன்று அடுத் தடுத்து குண்டுகள் வெடித் தன.

இச்சம்பவத்தில் 88 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

இந்த தொடர் குண்டு வெடிப்பு தொடர்பான வழக்கில் பலர்மீது குற்றம்சாட்டி கவுகாத்தி நகரில் உள்ள சி.பி.ஐ. நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்தது. சுமார் பத்தாண்டுகளுக்கும் மேலாக நடைபெற்றுவந்த இவ்வழக்கின் விசாரணை முடிவடைந்து சி.பி.ஐ. நீதிமன்ற சிறப்பு நீதிபதி அபரேஷ் சக்ரபர்த்தி நேற்று தீர்ப்பளித்தார்.

போடோலாந்து தேசிய ஜனநாயக முன்னணி இயக்கத்தின் தலைவர் ரஞ்சன் டைமரி உட்பட 15 பேரை இவ்வழக்கில் குற்றவாளிகள் என அறிவித்த நீதிபதி, இவர்களுக்கான தண்டனை விபரம் நாளை 30ஆம் திகதி தெரிவிக்கப்படும் என மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

## நவாஸிற்கு உடல் நலக்குறைவு பிணைவழங்க மனுத்தாக்கல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் செரீப்பின் உடல்நிலை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளமையினால் சிகிச்சை பெறுவதற்காக தனக்கு பிணை வழங்க வேண்டும் என இஸ்லாமாபாத் உச்ச நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

அல்-அஜீதா இரும்பாலை முறைகேடு வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் செரீப்புக்கு 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அவர் லாகூரில் உள்ள கோட்லக்பத் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அங்கு அவருக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டது. எனவே வைத்தியர் குழு அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு இருதயநோய், நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் இருப்பது தெரியவந்தது.

அதைத் தொடர்ந்து சிறையில் வைத்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் குணமாகாமல் தொடர்ந்து அவர் அவதிப்பட்டு வருகிறார். எனவே அவரை வைத்தியசாலையில் அனுமதித்து உயர்தர சிகிச்சை அளிக்க வைத்திய குழு பரிந்துரை செய்தது.

இந்நிலையில் நவாஸ் செரீப் சட்டத்தரணி கவாஜா ஹாரீஸ் இஸ்லாமாபாத் உச்ச நீதிமன்றில் பிணை கேட்டு மனுத்தாக்கல் செய்துள்ளார். அதில், முன்னாள் பிரதமர் நவாஸ் செரீப்புக்கு விதிக்கப்பட்டுள்ள சிறைத் தண்டனையை நிறுத்தி வைக்குமாறு ஏற்கனவே மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் குறித்த மனு மீதான விசாரணை அடுத்த மாதம் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

எனினும் "நவாஸ் செரீப்பின் உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளதால் அவருக்கு உடனடியாக சிகிச்சை தேவைப்படுகிறது. எனவே அவருக்கு பிணை வழங்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## பிரேசிலில் அணை

## பலி எண்ணிக்




(பிரேசிலியா)

பிரேசில் நாட்டில் இரும்புத் தாது சுரங்கத்தில் உள்ள அணை உடைந்த விபத்தில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 60 ஆக அதிகரித்துள்ளது.

பிரேசில் நாட்டின் தென் கிழக்கு பகுதியில் உள்ள புருமாடின்கோ நகரம் அருகே தனியாருக்கு சொந்தமான இரும்புத்தாது சுரங்கம் உள்ளது. சுரங்கத்தின் அருகில் பயன்படுத்தப்படாமல் இருந்த ஒரு அணை கடந்த 25ஆம் திகதி திடீரென உடைந்தது. அணையில் இருந்த தண்ணீரும், சேறும் சகதியுமாக பெருக்கெடுத்து வெளியேறியது. இதில் ஏராளமான தொழிலாளர்கள் சிக்கிக்கொண்டனர். அணை வளாகத்தில் இருந்த உணவகம் சகதியில் முழுவதும் புதைந்தது. அங்கு தொழிலாளர்கள் மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்த போது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

இதுதவிர அணையை ஒட்டியுள்ள பகுதியில் இருந்த நிறுவனங்கள், தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிகளில் பெருமளவிலான சகதி நிரம்

## பெருவில் பனிப்புயல் 15 பேர் உயிரிழப்பு



(லிமா)

பெரு நாட்டின் வட கிழக்கு பகுதியில் வீசிய பனிப்புயல்ஹோட்டல்சுவரை தாக்கி உடைத்த விபத்தில் 15 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பெரு நாட்டின் வடகிழக்கு பகுதியில் பலத்த பனிப்புயல் வீசி வருகிறது. இந்நிலையில் அபுரிமாக் பகுதிக்குட்பட்ட அபன்கே நகரில் உள்ள ஒரு பிரபல ஹோட்டலில் நேற்று ஒரு திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் நூற்றுக்கும் அதிகமான விருந்தினர்கள் பங்கேற்றனர்.

அப்போது, பனிப்புயலின் வேகத்தால் அருகாமையில் இருந்த பாறைகள் மற்றும் மணல்கட்டிகள் அந்த ஹோட்டல் சுவற்றின் மீது பலமாக மோதின.

இதனால் ஹோட்டலின் ஒருபக்க சுவர் இடிந்து விழுந்தது. இந்த விபத்தில் 15 பேர் உயிரிழந்ததாகவும் 30-க்கும் அதிகமானவர்கள் காயமடைந்ததாகவும் அபன்கே நகர மேயர் எவரிஸ்ட்டோ ரமோஸ் தெரிவித்துள்ளார். (4-7)

## போராட்டக்காரர்கள் மீது தாக்குதல்; விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

(பரிஸ்)

பிரான்ஸில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட யெலோ வெட்ஸ் அமைப்பினர் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் பொருளாதார சீர்திருத்த கொள்கைகளுக்கு எதிராக கடந்த சனிக்கிழமை 11 ஆவது வாரமாக போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தலைநகர் பாரிஸ் உள்ளிட்ட பகுதிகளில் இடம்பெற்ற இந்த போராட்டத்தில் சுமார் 69 ஆயிரம் பேர் பங்கேற்றதாக அந்த நாட்டு உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

குறிப்பாக பாரிசில் மாத்திரம் நான்காயிரம் பேர் ஒன்று திரண்டு ஜனாதிபதிக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர் புகை பிரயோகத்தையும், தடியடி பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கையால் பல ஆர்ப்பாட்டகாரர்கள் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, ஆர்ப்பாட்டத்தை முன்னின்று நடத்திய ஜேரோமி ரொட்ரிக்கர்ஸ் என்பவர் பலத்த காயமடைந்த நிலையில் அவர் கண் பார்வையை இழக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் பொதுச் சொத்துகளுக்கு ஏற்படும் சேதத்தை கட்டுப்படுத்தவும், நாட்டின் அமைதியை கருத்தில் கொண்டுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பிரான்ஸ் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அதேபோல், ஆர்ப்பாட்டக்காரர்கள் அத்துமீறி செயற்பட்டதன் காணமாகவே தடியடி பிரயோகத்தை நடத்த வேண்டி ஏற்பட்டதாக பிரான்ஸ் உள்துறை அமைச்சர் கிறிஸ்டோப் காஸ்டனர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், மேற்கொள்ளப்பட்ட தடியடி பிரயோகம் தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் உள்துறை அமைச்சர் அதிகாரிகளை பணித்துள்ளார்.

மேலும் ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்கும் போது ரியோட் பொலிஸார் தங்கள் சீருடைகளில் கண்காணிப்பு கமராக்களை பொருத்திக்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (4-7)

## விமானம்-

## ஏழு பேர் ச

(ஆல்ப்ஸ்)

ஹெலிகொப்டரும் பயிற்சி விமானமும் நேருக்கு நேர் மோதிக் கொண்ட கோர விபத்தில் 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இத்தாலியின் ஆல்ப்ஸ் மலைப் பகுதியில் பிரான்ஸ், சுவிட்சர்லாந்து நாடுகளின் எல்லைக்கு அருகே அஸ்டா பள்ளத்தாக்கு அமைந்துள்ளது.

அங்கு உள்ள மலையில் ஏறுவதற்காக 4 பேர் ஹெலிகொப்டரில் சென்றனர். விமானி மற்றும் மலையேற்ற பயிற்சியாளர் ஒருவர் ஹெலி

## எகிப்தில்

## இரு முக்

(கெய்ரோ)

எகிப்தின் சினாய் பகுதியில் இராணுவம் நடத்திய விமான தாக்குதலில் பயங்கரவாத இயக்கத்தின் இரண்டு முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டனர்.

நேற்றைய தினம் எகிப்தில் அரசுக்கு எதிராக வன்முறைத் தாக்குதல்களில் ஈடுபட்டு வரும் பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்காக இராணுவத்தினர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெளிநாடு

## ...ண உடைந்து விபத்து ...கை 60 ஆக உயர்வு!

### ...5 பேர் மாயம்



...பியதால், அவர்களின் வீடுகள் மற்றும் வாகனங்கள் சேதமடைந்தன.

இந்த விபத்து பற்றி தகவல் அறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்குச் சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். வீதிகள் சேதமடைந்ததால், அப்பகுதியில் சகதியில் சிக்கிய பொதுமக்கள் ஹெலிகொப்டர் மூலம் மீட்கப்பட்டனர். பாதுகாப்பு காரணமாக அங்கு வசிக்கும் பலர் வெளியேற்றப்பட்டனர். அருகில் உள்ள மற்றொரு அணையும் மோசமான நிலையில் இருந்ததால், நேற்று முன்தினம் மீட்புப் பணி நிறுத்தப்பட்டது. நேற்று மீட்புப் பணி மீண்டும் தொடங்கியது.

நேற்று முன்தினம் நிலவரப்படி இந்த விபத்தில் 40 பேரின் உடல்கள் மீட்கப்பட்டிருந்தன. அதன் பின்னர் மேலும் 20 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், உயிரிழப்பு 60 ஆக உயர்ந்துள்ளதாக மீட்புக்குழு அறிவித்துள்ளது. தொழிலாளர்கள், ஒப்பந்ததாரர்கள், பொதுமக்கள் என 305 பேரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 192 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். அவர்களில், 23 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காணாமல் போனவர்களில் பெரும்பாலானோர் சகதிக்குள் சிக்கியிருக்கலாம் என்பதால் உயிர் பிழைக்க வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகிறது. தொடர்ந்து மீட்புப் பணி நடைபெறுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## ஆப்கானில் வான்வழித் தாக்குதல்; எட்டு பயங்கரவாதிகள் உயிரிழப்பு



(காபுல்)

ஆப்கானிஸ்தான் நாட்டின் நங்கர்ஹார் மாகாணத்தில் இராணுவத்தினர் நடத்திய வான்வழி தாக்குதலில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் 8 பேர் கொல்லப்பட்டனர்.

ஈராக், சிரியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் சில முக்கிய நகரங்களை கைப்பற்றியுள்ள ஐ.எஸ். பயங்கரவாதிகள் அங்கு பொதுமக்களை கொடுமைப்படுத்துவதுடன் அங்கிருந்தவாறு பிறபகுதிகளில் வன்முறை தாக்குதல்களை நடத்தி அப்பாவி மக்களை கொத்துக் கொத்தாக கொன்று வருகின்றனர்.

இந்த பயங்கரவாதிகளை ஒழித்துக் கட்டும் பணியில் உள்நாட்டு இராணுவ வீரர்களுடன் அமெரிக்கப் படையினரும் கூட்டாக தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் பல பகுதிகளில் சுமார் ஆயிரத்து ஐநூறு ஐ.எஸ். பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக நம்பப்படுகிறது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் நாட்டின் கிழக்கு பகுதியில் உள்ள நங்கர்ஹார் மாகாணத்தில் ஆப்கன் இராணுவத்தினர் நேற்று முன்தினம் வான்வழி தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் 8 பேர் கொல்லப்பட்டனர் என இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். (4-7)

## பிரேசில் அணை உடைந்து விபத்து ஐ.நா.பொதுச்செயலாளர் இரங்கல்

(பிரேசிலியா)

பிரேசில் நாட்டில் இரும்புத்தாது சுரங்கத்தின் அருகே அணை உடைந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 60 ஆக உயர்ந்துள்ளது. காணாமல்போன 305 பேரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

பிரேசில் நாட்டில் புருமாடின்கோ நகரம் அருகே தனியாருக்கு சொந்தமான இரும்புத்தாது சுரங்கம் உள்ளது.

அங்கு ஒரு அணைக் கட்டு பயன்படுத்தப்படாமல் இருந்தது. கடந்த சனிக்கிழமை இரவு அந்த சுரங்கத்தில் நூற்றுக்கணக்கான ஊழியர்கள் வேலை பார்த்துக் கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென அந்த அணை உடைந்தது. உடனே அணையில் இருந்த தண்ணீரும், சேறும் வெள்ளமாக பெருக்கெடுத்து வெளியேறியது.

இச்சம்பவத்தில் இரும்புத்தாது சுரங்கத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த 35 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்ததாக முதல் கட்ட தகவல் வெளியானது.

சுரங்கத்துக்குள் சிக்கியிருந்த மற்ற பணியாளர்களை மீட்கும் பணி நடைபெற்றுவரும் நிலையில் மீட்புப் பணிகளில் உதவி செய்வதற்காக இஸ்ரேல் நாட்டில் இருந்து நூற்றுக்கணக்கான வீரர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பிரேசில் ஜனாதிபதி ஜைர் மோல்சோனாரோ ஹெலிகொப்டர் மூலம் சென்று விபத்துக்குள்ளான பகுதியை பார்வையிட்டார்.

நேற்று முன்தினம் மாலை நிலவரப்படி இந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 60 ஆக உயர்ந்துள்ளது. காணாமல் போன சுமார் 305 பேரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

இந்தக் கோர விபத்தில் பலியானவர்கள் குடும்பத்தாருக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அந்தோனியோ குற்றேரஸ், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். (4-7)

## ...ம்-ஹெலிகொப்டர் விபத்து ... சம்பவ இடத்திலேயே பலி



...கொப்டரில் இருந்தனர்.

இதற்கிடையே பயிற்சி விமானிகள் 3 சிறிய ரக விமானத்தில் அங்கு பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்களுடன் பயிற்சியாளர் விமானத்தில் இருந்தார். சற்றும் எதிர்பாராத விதமாக ஹெலிகொப்டரும் பயிற்சி விமானமும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இந்த கோர விபத்தில் 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 2 பேர் மாயமாகினர்.

விமான பயிற்சியாளர் மட்டும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். இந்த விபத்து தொடர்பாக பொலிஸார் அவரை கைது செய்து விசாரித்து வருகிறார்கள். (4-7)

## ...ல் விமானத்தாக்குதல் ...க்கிய தலைவர்கள் பலி

இந்நிலையில் வடக்கு சினாய் மாகாணத்தில் பயங்கரவாதிகள் ஊடுருவி இருப்பதாக தகவல் கிடைத்தது. இதனையடுத்து பயங்கரவாதிகள் இருந்த பகுதியில் இராணுவத்தினர் விமான தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் 2 பயங்கரவாத தலைவர்கள் உயிரிழந்ததாக எகிப்தின் ஆயுதப் படை செய்தித் தொடர்பாளர் டாமர் அல்-ரெஃபி தெரிவித்தார்.

ஏற்கனவே கடந்த வாரம் எகிப்தின் இராணுவத்தினர் நாடு முழு வதும் நடத்திய தாக்குதல் களில், 64 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக தெரிவித்திருந்தனர்.

எகிப்தில் ஜனாதிபதி முகமது மோர்சியின் ஆட்சியை 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இராணுவம் அகற்றியதையடுத்து பயங்கரவாத தாக்குதல் அதிகரிகத் தொடங்கியது.

இந்த பயங்கரவாத தாக்குதல்கள் வடக்கு சினாயில் இருந்து தலைநகர் கெய்ரோ உள்ளிட்ட பிற மாகாணங்களுக்கும் பரவின.

காப்டிக் சிறுபான் மையினரை குறிவைத்து, தேவாலய குண்டுவெடிப்பு மற்றும் துப்பாக்கிச் சூடு சம்பவங்களும் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (4-7)

## வெனிசுவெலாவின் அச்சுறுத்தல்கள் பாரதூரமான விளைவை ஏற்படுத்தும்

### அமெரிக்கா எச்சரிக்கை



(வோஷிங்டன்)

அமெரிக்க இராஜதந்திரிகள் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ஜுவான் கெய்டோ ஆகியோருக்கு எதிரான அச்சுறுத்தல்கள் வெனிசுவெலாவிற்கு பாரதூரமான விளைவை ஏற்படுத்தும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

மேலும், இவ்வாறான அச்சுறுத்தல்கள் சட்டத்தின் மீதான பாரிய தாக்குதலாக அமையும் என அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் போல்டன் தெரிவித்துள்ளார்.

கெய்டோவை வெனிசுவேலாவின் இடைக்கால ஜனாதிபதியாக அமெரிக்கா உள்ளிட்ட 20 நாடுகள் அங்கீகரித்துள்ளன.

இதனை வெனிசுவெலா ஜனாதிபதி நிக்கலோஸ் மதுரோ கண்டித்ததுடன், அமெரிக்காவுடனான இராஜதந்திர உறவை முறித்துக் கொள்வதாகவும் அறிவித்தார்.

இவ்வாறான சர்ச்சைகள் தொடர்ந்து வருகின்ற நிலையிலேயே பாதுகாப்பு ஆலோசகரின் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதன்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய இரு தினங்களில் அரச எதிர்ப்பு போராட்டமொன்றுக்கு எதிர்க்கட்சி தலைவர் அழைப்பு விடுத்துள்ளார். வெனிசுவெலா ஜனாதிபதியின் பதவி விலகலுக்கான எதிர்க்கட்சியின் அழுத்தங்கள் தொடர்ந்து வருகின்ற நிலையில், வெனிசுவெலாவில் அரசியல் நெருக்கடி நிலை தீவிரமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு பேரணிகளை முன்னெடுக்க வேண்டும்

## அரசிற்கு எதிராக மக்களைத் தூண்டிவிடுகிறார் தயாசிறி



(குருநாகல்)

மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்துமாறு கோரி அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க, அனைவரும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகளை முன்னெடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தின் கல்கமுவ தேர்தல் தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் சட்ட ரீதியாகவும் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# இசைக் கருவிகளைக் கொண்டு செல்ல தடை

(மஸ்கெலியா)

சிவனொளிபாத மலைக்கு செல்லும் 'யாத்திரிகளிடமிருந்து இசைக் கருவிகள் அனைத்தையும் மவுசாகலை நீர்த்தேக்கப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மஸ்கெலியா பொலிஸார் பொறுப்பேற்றுக் கொள்கின்றனர்.

அவர்கள் அவ்விடத்திலிருந்து செல்லும் போது மிக புனிதமாக இறைபக்தியோடு செல்லவேண்டும் என்பதற்காக மீள பெற்று மீண்டும் திரும்பி செல்லும் போது அவர்களிடம் ஒப்படைக்கின்றனர்.

இது கடந்த பல ஆண்டுகளாக இடம் பெற்று வருகின்றது. இருந்த போதும் நல்லதண்ணி நகரில் இவ்வாறான இசைக் கருவிகள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று இம்முறை திறக்கப்பட்டுள்ளதால் அவ்விடத்தில் இப்பொருட்களை பெற்று அங்குள்ள புனிதத்தை இல்லாது செய்வதாக முறைப்பாடு கிடைத்துள்ளது.

இது விடயமாக மஸ்கெலியா பிரதேச சபை தாங்கள் அனுமதி வழங்கவில்லை என தெரிவித்துள்ளதால் அந்த வர்த்தக நிலையத்தை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனப்பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# மகிந்த மீதான சர்வதேச அழுத்தங்களை ஐ.தே.கவே இல்லாமல் செய்தது-ஹாசிம்



(கொழும்பு)

எம்மை பிரிவினைவாதிகளாக சித்திரித்து ராஜபக்ஷவினர் ஆட்சி செய்ய பார்க்கின்றனர். எனினும் ஐக்கிய தேசிய கட்சியின் மீதான நம்பிக்கையில் தான் தமிழர் தலைமைகள் ஒருமித்த நாட்டுக்குள் தீர்வு கேட் கின்றனர் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரும் அமைச்சருமான கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நாம் ஆட்சிக்கு வந்தவுடன் தமிழர்களுக்கு எம் மீதான நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. ஒருமித்த நாட்டுக்குள் அனைவரும் ஐக்கியமாக வாழ முடியும் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. யுத்தத்தை வெற்றி கொண்ட தலைவர்களால் மக்களை ஒன்றிணைக்க முடியாது போன போதும் நாம் மக்களை ஒன்றிணைத்துள்ளோம்.

நாம் ஆட்சிக்கு வந்த பின்னரே மகிந்த ராஜபக்ஷவிற்கு சமூகத்திடம் இருந்த அழுத்தங்களை இல்லாது செய்தோம். எமது தலையீட்டால் தான் சர்வதேச அழுத்தங்களை நீக்கி நாட்டை கட்டியெழுப்பும் சர்வதேச ஒத்துழைப்பை உருவாக்கிக்கொண்டோம்.

இராணுவத்தை தண்டிக்கும் சர்வதேச நோக்கத்தை இல்லாது செய்தோம்.

எனினும் இவர்கள் இப்போதும் அதே கதைகளை கூறிக் கொண்டுள்ளனர். இவர்களுக்கு இனவாதம் மட்டுமே ஆயுதம். இவர்கள் தைரியமான தேசியவாதிகள் என்றால் தூய்மையான அரசியல் கொள்கை உள்ளவர்கள் என்றால் இவர்களுக்கென்ற தேசிய கொள்கை ஒன்றை உருவாக்கி சகல மக்களையும் உள்வாங்கிய கொள்கை ஒன்றை உருவாக்கி எம்முடன் நேரடியாக அரசியல் போட்டிக்கு வரவேண்டும் எனவும் அவர் சவால் விடுத்தார். (இ-7)

# உண்மைக்குப் புறம்பான தகவல்

## 18 பேருந்துகள் குறித்து வெல்கம மறுப்பு



(கொழும்பு)

போக்குவரத்து அமைச்சராக தான் பொறுப்பிலிருந்த காலகட்டத்தில் இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகளை பெற்றுக் கொண்ட முறைமையில் முறைகேடுகள் இடம் பெற்றிருந்தால் கோப் குழுவினர் ஆதாரத்துடன் முன்னிலைப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, சுயாதீன விசாரணைகள் இடம் பெறுமாயின் முழுமையான ஒத்துழைப்புக்கள் வழங்கத் தயார் எனவும் தெரிவித்தார்.

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் இலங்கை போக்குவரத்து சபையில் பேருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பில் கோப் குழுவினர் குறிப்பிட்டுள்ள விடயம் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சர் பொறுப்பிலிருந்த போது இலங்கை போக்குவரத்து சபைக்கு பேருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டன. இதன்போது எவ்விதமான நிதியுதவியும் எத்தரப்பில் இருந்தும் வழங்கப்படவில்லை. மாதாந்த கொடுப்பனவுகளின் ஊடாகவே பேருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டன.

இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரமும் கிடைக்கப் பெற்றன.

இக்காலகட்டத்தில் 18 பேருந்துகள் இலவசமாக கிடைக்கப் பெற்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளமையானது உண்மைக்கு புறம்பானது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## முதலைக்கண்ணீர்

ஒரு ஆள் இருந்தான்... அவனுக்கு பலபேரிடம் பழக்கவழக்கம் அதிகம். திடீர் என்று ஒரு நாள் அவன் செத்துப் போய்விட்டான். எல்லோருக்கும் ரொம்பக் கஷ்டமாகப் போச்சு! சொந்தக்காரர்கள் எல்லாம் அழுதார்கள்.. சிநேகிதர்கள் எல்லாம் அழுதார்கள்... கொஞ்ச நாளில் எல்லோரும் அந்தக் கவலையை மெல்ல மெல்ல மறந்துவிட்டார்கள்.

ஒரு வருடம் ஆகிவிட்டது... அதற்குப் பின்னரும் ஒரு ஆள் இவனை நினைத்து அழுதுகொண்டிருந்தார். இவ்வளவுக்கும் அவர் சொந்தக்காரர் இல்லை! தெரிந்த ஒருத்தர் அவ்வளவுதான்...

ரொம்பவும் நெருக்கமான சிநேகிதர் போல இருக்கிறது. "ஐயோ இப்படி மோசம் செய்துவிட்டுப் போய்விட்டியே" என்று ஒரு வருடமாக இவர் தினமும் அழுதுகொண்டிருந்தார். பக்கத்தில் இருந்தவர்கள் ஆறுதல் சொன்னார்கள். "கவலைப்படாதீர்கள்... விதியை யாராலே மாற்ற முடியும்? மனதைத் தேர்த்திக் கொள்ளுங்கள்..." என்றார்கள்!

"அது எப்படி முடியும்? அந்த ஆள் என்னிடம் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தான்... அப்படியே மோசம் செய்துவிட்டுப் போய்விட்டானே... இனிமேல் யாரிடம் அதை வாங்க முடியும்!" என்று சொல்லி இவர் மறுபடியும் "ஓ! என்று அழ ஆரம்பித்துவிட்டார்!"

இந்த அழுகைக்கு அர்த்தம் என்ன? பாசத்தினால் வந்த அழுகை இல்லை இது! அழுகை வித்தியாசப்படுவது போல் கண்ணீரும் வித்தியாசப்படும்! ஆனந்தக் கண்ணீர் இருக்கிறது! அழுகைக் கண்ணீர் இருக்கிறது! அதுபோல் "முதலைக் கண்ணீர்" இருக்கிறது! பொய்யான அழுகை அழுபவர்களை "முதலைக் கண்ணீர் வடிக்கிறார்" என்று சொல்லுவார்கள்!

முதலை ஏன் கண்ணீர் வடிக்கிறது தெரியுமா? அதுதான் இன்றைக்குத் தகவல். கடல்தண்ணி உப்பு என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம் தான். ஒரு லீற்றர் கடல்நீரில் சுமாராக 35 கிராம் உப்புக் கரைந்து இருக்கிறது. மெட்ராஸ்காரர் ஒருத்தர் வேறு வழியில்லாமல் கடல் தண்ணியையே குடித்துக்கொண்டிருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள்! என்ன ஆகும்?

கடல் வற்றிப்போய் விடுமா? அது ஒன்றும் ஆகாது! இவர் உடம்பு வீணாகப் போய்விடும். கணிசமான அளவுக்கு சோடியம், பொற்றாசியம், கல்சியம் இது மாதிரியான உப்புகள் அவர் உடம்புக்குள்ளே போய்விடும்! உள்ளே போய் சும்மாவா இருக்கும்? இரத்தத்தில் கலக்கும்! கடைசியில் ரொம்பவும் ஆபத்தில் போய் முடியும்!

நமது நிலைமை அப்படி! கடலில் கிடைக்கும் முதலையினுடைய நிலைமை எப்படித் தெரியுமா? முதலை மட்டுமில்லை... கடலிலேயே வாழுகிற உயிரினங்கள் நிறைய உள்ளே இருக்கிறது.

அதெல்லாம் ஆகாரத்தைச் சாப்பிடும்போடும் உணவோடு சேர்ந்து நிறைய கடல் தண்ணியும் உள்ளே போகிறது. அதனால் கடல் தண்ணியில் கரைந்திருக்கும் உப்புகளும் நிறைய உள்ளே போய்விடுகிறது.

இந்த உப்புக்களை எப்படி மறுபடியும் வெளியேற்றுகிறது? அதிகப்படியான உப்பை வடிகட்டுவதற்கு அதனிடம் ஒரு வசதி இருக்கிறது! இதற்காக அதன் உடம்பில் ஒரு உறுப்பே இருக்கிறது!

அதற்குப் பெயர் சால்ட் கிளாண்டு (Salt gland) முதலைக்கு இந்த Salt gland இன் துவாரம் எங்கேயிருக்குத் தெரியுமா? அதனுடைய கண் ஓரத்தில் இருக்கிறது! அதன் வழியாக அதிகப்படியான உப்பு வெளியே வந்து விடுகிறது! இது ஒரு திரவமாக வெளியே வருகிறது!

பார்ப்பதற்கு இது கண்ணீர் மாதிரி இருக்கும்! ஆனால் அதில் இருப்பது முழுவதும் உப்பு! இது முதலைக் கண்ணீரைக் கொஞ்சம் எடுத்து அதில் எவ்வளவு உப்பு இருக்கிறது என்று சோதனை செய்து பார்த்தார்கள்.

முதலைக் கண்ணீரில் உள்ள சோடியம் உப்பு கடல் தண்ணியில் இருப்பதைவிட இரண்டு மூன்று மடங்கு அதிகமாக இருக்குதாம். முதலை இரத்தத்தில் இருக்கும் உப்பைவிட முதலைக் கண்ணீரில் இருக்கும் உப்பு 5 மடங்கு அதிகமாக இருக்குதாம்.

அதனால் முதலை அழுகிறது எதற்காகவென்றால் அதிகப்படியான உப்பை வெளியேற்றுவதற்காக! அது கவலையினால் அப்படி அழவில்லை! சிலபேர் அதைப் பார்த்து விட்டு என்ன சொல்லுவார்கள் தெரியுமா? "முதலை பிரார்த்தனை செய்கிறது... மனம் கசிந்து கண்ணீராக வெளியே விடுகிறது" என்று சொல்லுவார்கள்! அப்படிச் சொல்வது தவறு. அதனால் தான் பொய்யான அழுகை அழு பவர்களை "முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள்" என்று சொல்வது!

ஜப்பானில் ஒரு கதை உண்டு...

ஒரு மாமியார் செத்துப் போனார்... மருமகள் அழுதுகொண்டிருக்கிறாள்! துக்கம் தாள முடியவில்லை! கேவிக்கேவி அழுகிறாள்! பக்கத்து வீட்டுக்காரர்கள் பார்த்தார்கள்! "ஐயோ பாவம்" என்று நினைத் தார்கள்! "மாமியார் போனதில் உனக்கு இவ்வளவு வருத்தமா அம்மா?" என்று கேட்டார்கள்! அதற்கு அந்தப் பெண் "அவர் செத்துப் போனதை நினைத்து அழவில்லை... மறுபடியும் பிழைத்துவிடுவார்களோ என்று நினைத்து அழுகிறேன்!" என்றாள். இந்தக் கண்ணீரை எந்த இரகத்தில் சேர்ப்பது?

# வடக்கு மாகாண கல்வியின் தற்கால போக்கு

## தேசிய மட்டப்போட்டிகளில் வடக்கு மாகாணத்தின் சாதனைகள்.

வடக்கு மாகாண மாணவர்கள் தங்களது பாடசாலை மற்றும் கல்விச் சமூகத்தின் ஊக்குவிப்புக்கள் வழிகாட்டல்களுடன் பல்வேறுபட்ட தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் பங்கு பற்றுவதுடன் வெற்றிகளையும் பெற்று இருக்கிறார்கள்.

தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் ஒரு மாகாணத்தினால் அதிகபட்சம் பெறக்கூடிய 50 பதக்கங்களில் 36 பதக்கங்களை தம்வசமாக்கி எமது மாகாண மாணவர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

அத்துடன் தேசிய மட்ட விளையாட்டு போட்டிகளில் குழு விளையாட்டுகளில் 10 முதலாம் இடத்தினையும் 04 இரண்டாம் இடத்தினையும் 06 மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டதுடன் அந்த வகையில் போட்டிகளில் எமது மாணவர்கள் நிலைநாட்டிய சாதனைகளின் விபரங்களை

| தேசிய மட்டப் போட்டிகள் - 2018 | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| தமிழ்த்தினப் போட்டி | 26 | 05 | 05 |
| ஆங்கிலதினப் போட்டி | 04 | 06 | 09 |
| விளையாட்டு | 11 | 20 | 19 |
| அழகியல் | 21 | 10 | 03 |
| சமூக விஞ்ஞானப் போட்டி– 2017* | 18 | 16 | 33 |
| தகவல் அறியும் உரிமைச் சட்டம் | 02 | - | - |
| மீலாத் | - | 2 | 2 |
| இரண்டாம் மொழி – சிங்களம் | 02 | - | - |
| இரண்டாம் மொழி – தமிழ் | - | 01 | - |

*சமூக விஞ்ஞானப் போட்டி 2018 இன் முடிவுகள் இன்னமும் வெளியிடப்படவில்லை

அட்டவணையில் காணலாம்.

### ஒலிம்பியாட் போட்டிகள்

கணித,விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிகளில் எமது மாகாண மாணவர்கள் ஆசிரியர், அதிபர் மற்றும் குறித்த பாடத்துறைக்கு பொறுப்பான கல்விப் பணிப்பாளர்களில் உற்சாகமான வழிகாட்டல்களுடன் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

அந்த வகையில் 2018 விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிகளில் தேசிய குழாமிற்கு 06 மாணவர்களும் சர்வதேச குழாமிற்கு ஒரு மாணவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் கணித ஒலிம்பியாட் போட்டிகளில் தேசிய குழாமிற்கு 44 மாணவர்களும் சர்வதேச குழாமிற்கு ஒரு மாணவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### வடக்கு மாகாணத்தின் ஆசிரிய பரம்பல்

கல்வி வலயங்கள் 12 இணை கொண்டமைந்த வடக்கு மாகாணத்தில் ஆசிரிய பரம்பலை சீரமைக்கின்ற பாரிய சவாலான பணியினை வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் வினைத்திறனாக ஆற்றி வருவதுடன் மாகாணப் பாடசாலைக்கென அனு மதிக்கப்பட்ட மொத்த ஆசிரிய ஆளணி 18438 காணப்படுவதுடன் இன்றைய திகதியில் 16220 ஆசிரியர்கள் பணியாற்றுவதுடன் மொத்தமாக 2218 ஆசிரிய ஆளணி வெற்றிடமாகவே காணப்படுகின்றது.

பாட ரீதியாக ஆசிரிய ஆளணியினை பகுப்பாய்வு செய்கையில், சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும் பாடங்களிலும் சமயப் பாடங்களிலும் மேலதிக ஆசிரியர்கள் காணப்படுவதுடன் ஆரம்பக் கல்வி, ஆரம்பக் கல்விக்கான ஆங்கிலம், இடைநிலை பிரிவு விஞ்ஞானம், கணிதம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் ஆய்வுகூட முகாமைத்துவம், இரண்டாம்மொழி சிங்களம், விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும், மனைப்பொருளியல், சுகாதாரமும் உடற்கல்வியும், வழிகாட்டல் ஆலோசனை மற்றும் விசேட கல்வி போன்ற பாடங்களுக்கு ஆசிரிய ஆளணி வெற்றிடம் காணப்படுகின்றது.

வெற்றிடமாக காணப்படுகின்ற அநேக பாடங்களுக்கு பலமுறை விண்ணப்பங்கள் கோரப்பட்டும் உரிய தகைமையுடைய பட்டதாரிகள் வடக்கு மாகாணத்தில் பற்றாக்குறையாகக் காணப்படுவதால் குறித்த வெற்றிடங்களை பூரணமாக நிரப்ப முடியாதுள்ளதுடன் டிப்ளோமா தகைமையுடையவர்களை நியமிக்கின்ற அதிகாரமுடைய மத்திய கல்வி அமைச்சுக்கும் மேற்படி வெற்றிட விபரங்கள் காலத்துக்கு காலம் அறிக்கையிடப்படுகின்றது.

கல்வியியற் கல்லூரி டிப்ளோமா

| வடக்த மாகாணத்தின் தற்போதைய ஆசிரிய ஆளணி – வலய ரீதியாக | | | |
|---|---|---|---|
| வலயம் | அனுமதிக்கப்பட்டது | தற்போதுள்ளது | வெற்றிடம் |
| யாழ்ப்பாணம் | 2404 | 2235 | 169 |
| வலிகாமம் | 2681 | 2408 | 273 |
| வடமராட்சி | 1661 | 1617 | 44 |
| தென்மராட்சி | 1095 | 972 | 123 |
| தீவகம் | 998 | 825 | 173 |
| கிளிநொச்சி | 2294 | 2069 | 225 |
| மன்னார் | 1555 | 1250 | 305 |
| மடு | 703 | 550 | 153 |
| வவுனியா வடக்கு | 1071 | 808 | 263 |
| வவுனியா தெற்கு | 1699 | 1646 | 53 |
| முல்லைத்தீவு | 1403 | 1245 | 158 |
| துணுக்காய் | 874 | 595 | 279 |
| மாகாணம் | 18438 | 16220 | 2218 |

Source: http://www.edudept.np.gov.lk/sqlteachercadreSubwiseZoneWithADEISA.php - Accessed on 04.01.2019

தாரிகளை வெற்றிடமுள்ள இடங்களுக்கு நியமிப்பதற்காக அதிகளவானவர்களை வடக்கு மாகாணத்

| ஆசிரியர், மாணவர் எண்ணிக்கை, விகிதாசாரம் - வலய ரீதியாக | | | |
|---|---|---|---|
| வலயம் | ஆசிரியர் தொகை | மாணவர் தொகை | ஒரு ஆசிரியருக்கான மாணவர் தொகை |
| யாழ்ப்பாணம் | 2235 | 28309 | 13 |
| வலிகாமம் | 2408 | 32256 | 13 |
| வடமராட்சி | 1617 | 19818 | 12 |
| தென்மராட்சி | 972 | 9916 | 10 |
| தீவகம் | 825 | 8348 | 10 |
| கிளிநொச்சி | 2069 | 29437 | 14 |
| மன்னார் | 1250 | 17555 | 14 |
| மடு | 550 | 6194 | 11 |
| வவுனியா வடக்கு | 808 | 7777 | 10 |
| வவுனியா தெற்கு | 1646 | 22126 | 13 |
| முல்லைத்தீவு | 1245 | 17755 | 14 |
| துணுக்காய் | 595 | 7742 | 13 |
| மாகாணம் | 16220 | 207233 | 13 |

Source: http://www.edudept.np.gov.lk/zoneschdata.php - Accessed on 04.01.2019

திற்கு விடுவிக்குமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இந்நிலையில் 13 வருட உத்தரவாதக் கல்வி செயற்றிட்டத்திற்கான ஆசிரிய நியமனங்களில் உரிய தகைமைகளையுடைய தமிழ்மொழி விண்ணப்பதாரிகள் பற்றாக்குறையாக இருந்தமையினால் குறித்த பாடங்களுக்கும் ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுகின்றது. வடக்கு மாகாணத்திற்குட்பட்ட 12 கல்வி வலயங்களிலும் காணப்படுகின்ற தற்போதைய ஆசிரிய பரம்பல் கீழ் வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

வலயங்களுக்கிடையிலான ஆசிரியர் மாணவர் எண்ணிக்கை மற்றும் ஒரு ஆசிரியருக்கான மாணவர் வீதம் என்பனவற்றினை பகுப்பாய்வு செய்தே ஆசிரியப் பரம்பலானது மேற்கொள்ளப்பட வேண்டிய நியாயமான காரணங்களும் கருத்தில் கொள்ளப்படவேண்டியதாக காணப்படுகின்ற நிலையில் கீழ்வரும் அட்டவணையானது வலயங்களுக்கிடையேயான மாகாணப் பாடசாலை மாணவர்,ஆசிரியர் எண்ணிக்கை மற்றும் விகிதாசாரம் தொடர்பான தரவினைக் கொண்டுள்ளது.

ஆசிரிய பரம்பலினை ஆய்வு செய்கையில் ஆசிரியர்களது வயது ரீதியாகவும் பால் ரீதியாகவும் பகுப்பாய்வு மிகவும் முக்கியமானதாகும்.

வடக்கு மாகாணத்தில் ஆசிரிய ஆளணியில் ஏறக்குறைய 75வீதம் பெண் ஆசிரியர்களாக இருப்பதுடன் தற்போதுள்ள ஆசிரியர்களில் 46 வயதுக்கு மேற்பட்டவர்களை மாவட்ட ரீதியாக பிரித்துப்பார்க்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதுள்ள ஆசிரிய ஆளணியில் 46.32 வீதமானவர்கள் 46 வயதுக்கு மேற்பட்டவர்களாக காணப்படுவதுடன் பிற மாவட்டங்களில் காணப்படும் வயது ரீதியான பகுப்பாய்வு கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| வயதடிப்படையில் ஆசிரியப் பரம்பல் - மாவட்ட ரீதியாக | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | ஆசிரியர் தொகை | 46 வயதுக்கு மேற்பட்டோர் தொகை | % |
| யாழ்ப்பாணம் | 8057 | 3732 | 46.32 |
| கிளிநொச்சி | 2069 | 463 | 22.38 |
| மன்னார் | 1800 | 579 | 32.17 |
| வவுனியா | 2454 | 842 | 34.31 |
| முல்லைத்தீவு | 1840 | 420 | 22.83 |

Source:https://www.nemis.moe.gov.lk - Accessed on 04.01.2019

## வடக்கு மாகாணத்தின் குடித்தொகையும் பல்கலைக்கழக அனுமதியும்

வடக்கு மாகாண மாணவர்களது பல்கலைக்கழக வாய்ப்புக்கள் தொடர்பாக விமர்சன ரீதியாக ஆய்வு செய்கையில் வடக்கு மாகாணக் குடித்தொகை மற்றும் அதனது வளர்ச்சி என்பவற்றினை நோக்குதல் வேண்டும் என்பதுடன், மற்றைய மாகாணங்களின் குடித்தொகை வளர்ச்சியினை விட எமது மாகாணத்தின் வளர்ச்சி குறைவாக காணப்படுவதுடன் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களின் குடித்தொகையானது சடுதியான வீழ்ச்சியைக் வெளிக்காட்டுவதுடன் இவ் வீழ்ச்சியானது கோட்டா அடிப்படையிலான பல்கலைக்கழக அனுமதி எண்ணிக்கையில் நேரடியாக தாக்கத்தினைச் செலுத்தும் காரணியாக காணப்படுகின்றது.

| வடக்கு மாகாணத்தின் சனத்தொகை மற்றும் சனத்தொகை வளர்ச்சி வீதம் | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | 1981 | 2012 | வளர்ச்சி வீதம் |
| யாழ்ப்பாணம் | 734734 | 583071 | -0.74 |
| கிளிநொச்சி | 90778 | 112872 | 0.70 |
| மன்னார் | 105276 | 99063 | -0.20 |
| வவுனியா | 93694 | 172789 | 1.97 |
| முல்லைத்தீவு | 73886 | 92228 | 0.71 |

Source:http://www.statistics.gov.lk/PopHouSat/CPH2011/Pages/sm/CPH%202011_R1.pdf - Accessed on 09.01.2019

ஆண்டுதோறும் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படுகின்ற எண்ணிக்கை அதிகரிக்கப்படுகின்ற நிலையில் காணப்படுகின்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிக்கைப்படி பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் விபரம் வருமாறு.

| கல்வியாண்டு | மாணவர் தொகை |
|---|---|
| 2014/2015 | 25676 |
| 2015/2016 | 29083 |
| 2016/2017 | 30668 |

Source: http://www.ugc.ac.lk/downloads/statistics/stat_2017/Chapter%202.pdf - Accessed on 14.01.2019

பல்கலைக்கழக அனுமதியினைப் பெற்ற மாணவர் தொடர்பான புள்ளிவிபரத்தின்படி 2017ஆம் ஆண்டில் வடக்கு மாகாண மாணவர்களில் பல்கலைக்கழக அனுமதியினைப் பெற்ற வீதம் அகில இலங்கை ரீதியாக முதல் நிலையில் காணப்படுவதுடன் ஏறத்தாழ 15 சதவீதமான மாணவர்கள் வட்க்கு மாகாணத்தில் இருந்து பல்கலைக்கழக அனுமதியினை பெறுகின்றனர்.

| 2017ம் ஆண்டில் மாகாண ரீதியாக பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர் எண்ணிக்கை மற்றும் சதவீதம் | | | |
|---|---|---|---|
| மாகாணம் | பரீட்சைக்கு தோற்றிய மாணவர் எண்ணிக்கை | பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர் எண்ணிக்கை | சதவீதம் |
| வடக்கு மாகாணம் | 13643 | 2039 | 14.95 |
| மேல் மாகாணம் | 65672 | 8248 | 12.56 |
| தென் மாகாணம் | 36474 | 4525 | 12.41 |
| கிழக்கு மாகாணம் | 19396 | 2307 | 11.89 |
| சப்ரகமுவ மாகாணம் | 24726 | 2887 | 11.68 |
| வடமேல் மாகாணம் | 28396 | 3142 | 11.06 |
| ஊவா மாகாணம் | 17301 | 1770 | 10.23 |
| மத்திய மாகாணம் | 32151 | 3224 | 10.03 |
| வட மத்திய மாகாணம் | 15571 | 1554 | 9.98 |

Source: http://www.ugc.ac.lk/downloads/statistics/stat_2017/Chapter%202.pdf - Accessed on 21.01.2019

கடந்த நான்கு ஆண்டுகளில் வடக்கு மாகாணத்தில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறும் மாணவர்களது எண்ணிக்கை சீரான வகையில் அதிகரித்து செல்வதனை அவதானிக்க முடிகின்றது.

| அண்மைய ஆண்டுகளில் வடக்கு மாகாணத்தில் இருந்து பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | 2014 | 2015 | 2016 | 2017 |
| யாழ்ப்பாணம் | 902 | 950 | 1121 | 1190 |
| கிளிநொச்சி | 165 | 146 | 164 | 209 |
| மன்னார் | 151 | 143 | 171 | 198 |
| முல்லைத்தீவு | 150 | 139 | 157 | 179 |
| வவுனியா | 198 | 211 | 238 | 263 |
| வடக்கு மாகாணம் | 1566 | 1589 | 1851 | 2039 |

Source: http://www.ugc.ac.lk/downloads/statistics/stat_....../Chapter%202.pdf - Accessed on 21.01.2019

பட்டியற்படுத்தப்பட்ட புள்ளிவிபரங்கள் மற்றும் கல்வியில் தாக்கம் செலுத்தும் காரணிகளையும் தெளிவான அடிப்படைகளின் கீழ் பகுப்பாய்வு செய்கையில், வடக்கு மாகாணத்தினது கல்வி நிலை மற்றும் கல்வித்துறைசார் பெறுபேறுகள் உட்பட்ட அடைவுகளின் இன்றைய நிலையினை உணர்ந்து கொள்ளக்கூடியதாக உள்ளதுடன் புள்ளிவிபர ரீதியான ஆக்கபூர்வமான விமர்சனங்கள் முன்வைக்கப்படல் ஆரோக்கியமானதாகவே காணப்படும். (முற்றும்)

திருச்செல்வம் ஆயவன்.
உதவிக் கல்விப் பணிப்பாளர்
வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்

# மீண்டுமொரு இன அழிப்பு யுத்தத்திற்கு முஸ்தீபு

# முதலாளிமார் சம்மேளனத்திற்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டம்- பொலிஸார் குவிப்பு!




(ராஜகிரிய)

**புதிய கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தொழிற்சங்கங்கள் கூட்டு ஒப்பந்தத்தில்கைச்சாத்திடக்கூடாது எனத்தெரிவித்தும்ராஜகிரியவில் அமைந்துள்ள முதலாளிமார் சம்மேளனத்திற்கு முன்பாக "1000 ரூபா இயக்கம்" பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நேற்று முன்னெடுத்துள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளியிட்டனர். மேலும் முதலாளிமார் சம்மேளனத்தின் கட்டடத்திற்கு முன்பாக பொலிஸார் பாதுகாப்பிற்காக குவிக்கப்பட்டுள்ளனர்.**

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த அருட்தந்தை சக்திவேல், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க ஆகியோர் இணைந்து வட, கிழக்கில் இடம்பெற்றதைப் போன்று மீண்டுமொரு இன அழிப்பை மேற்கொள்ளவே திட்டமிட்டு செயற்படுகின்றனர்.

இதன்மூலம் மீண்டுமொரு யுத்தத்தை உருவாக்குவதோடு, பெருந்தோட்ட மக்களை அவர்களது சொந்த இடங்களிலிருந்து விரட்டியடிப்பதே இவர்களது நோக்கமாகக் காணப்படுகின்றது.

தொழிலாளர்கள் காலாதிகாலமாக நம்பிக்கை வைத்திருந்த தொழிற்சங்கங்களும் அவர்களுக்கு துரோகம் இழைத்துள்ளன.

2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இம்முறை வெறும் 20 ரூபாய் மாத்திரமே அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதாவது 2016 ஆம் ஆண்டு கூட்டு ஒப்பந்தத்தில் அடிப்படைச் சம்பளம் 500 ரூபாவும் உற்பத்திக் கொடுப்பனவு 140 ரூபாவும் விலைக்கான கொடுப்பனவு 30 ரூபாவும் வருகைக்கான கொடுப்பனவு 60 ரூபாவுமாக மொத்தச் சம்பளம் 730 ரூபா வழங்கப்பட்டது.

இவ்வாறிருக்க இம்முறை உற்பத்திக் கொடுப்பனவு மற்றும் வருகைக்கான கொடுப்பனவு என்பன வழங்கப்படாமல் விலைக்கொடுப்பனவு 50 ரூபாவும் அடிப்படை சம்பளம்700 ரூபாவுமாக மொத்தச் சம்பளம் 750 ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது கடந்த முறை வழங்கப்பட்ட உற்பத்தி மற்றும் வருகைக்கான கொடுப்பனவு ஆகிய இரண்டையும் சேர்த்து இம்முறை 200 ரூபாய் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது என மக்களை திட்டமிட்டு ஏமாற்ற முற்படுகின்றனர்.

பெருந்தோட்டத்தொழிலாளர்களுடைய சந்தாப் பணத்தில் தொழிற்சங்கங்களை நடத்துபவர்கள் உண்மையில் உணர்விருந்தால் புதிய ஒப்பந்தத்தில் கைசாத்திடக் கூடாது என்பதே எமது கோரிக்கையாகும்.

அத்தோடு இவ்வாறு 700 ரூபாய் அடிப்படை சம்பளத்திற்கு புதிய கூட்டு ஒப்பந்தத்தில் கைசாத்திட்டு தொடர்ந்தும் பெருந்தோட்ட மக்களை வறுமை கோட்டுக்கு கீழ் வைத்திருக்க வேண்டும் என்பதே தொழிற்சங்கங்களின் கீழ்த்தரமான நோக்கமாகும்.

அவ்வாறு இருக்கும் பட்சத்தில் தான் தொழிலாளர்கள் தம்மையே நம்பியிருப்பார்கள் என்ற நிலைப்பாடும் தொழிற்சங்கங்களுக்கு காணப்படுகின்றன. எனினும் இன்று பெருந்தோட்ட தொழிலாளர்களை அவ்வாறு ஏமாற்ற முடியாது. அவர்கள் விழிப்படைந்துவிட்டனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## "ஞானசாரரை விடுதலை செய்யக்கோருவது சிறுபான்மையினரை கொச்சைப்படுத்தும் செயல்"

(கொழும்பு)

ஞானசார தேரரை விடுதலை செய்யக் கோரி ஶ்ரீலங்கா இந்து சம்மேளனம்கோருவது ஒட்டுமொத்த சிறுபான்மையினரையும் கொச்சைப் படுத்தும் செயலாகும் என சிறிரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் ஜனாதிபதியிடம் ஞானசார தேரரை விடுதலை செய்வதற்கு ஶ்ரீலங்கா இந்து சம்மேளனத்தினர் கோரியிருந்த நிலையில் உதயராசா ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

4 கடந்த காலங்களில் ஞானசார தேரரின் செயற்பாடானது சிறுபான்மை மக்களை அச்சுறுத்தும் வகையில் இருந்ததுடன், அமைச்சர் மனோகணேசனின் அமைச்சுக்குள் சென்று அமைச்சரையும் சிறுபான்மை இனத்தினரையும் அச்சுறுத்துவது போல் செயற்பட்டிருந்தார்.

அதேபோன்று கடந்த சில நாட்களுக்கு முன் மட்டக்களப்பில் உள்ள தேரர் ஒருவர் ஒட்டுமொத்த தமிழர்களையும் விடுதலை போராளிகளையும் அரச உத்தியோகத்தர்களையும் அச்சுறுத்தியிருந்தார்.

குறித்த தேரருக்கு ஆதரவாக கொழும்பில் இருந்து மட்டக்களப்பிற்கு படையெடுத்துச் சென்ற ஞானசார தேரர், அத்தேரருக்கு ஆதரவாக செயற்பட்டிருந்தார்.

எனவே இவ்வாறான தேரரை விடுவிக்கக் கோரி ஶ்ரீலங்கா இந்து சம்மேளனம் போராட்டம் நடத்துவது வேதனைக்குரிய விடயம் என்பதுடன், நீண்டகாலமாக சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கூறியும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்திற்கும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்காக ஜனாதிபதியிடம் எந்த அழுத்தத்தையும் கொடுக்காத ஶ்ரீலங்கா இந்து சம்மேளனம் ஞானசாரரின் விடுதலைக்கு குரல் கொடுப்பது என்பது எமக்குள் இருக்கும் ஒற்றுமையை நாமே சீரழிப்பது போல் உள்ளது.

தமிழர்களுக்கு நடக்கும் அநீதிகளை தட்டிக் கேட்க யாரும் இல்லாத நிலையில், வெடுக்குநாறி சிவன் கோவிலுக்கு மக்கள் சென்று வழிபாடு நடத்த தடுத்து நிறுத்தியும் அதேவேளை முல்லை. செம்மலை நீராவியடி பிள்ளையார் கோவில் வளாகத்தில் அத்துமீறி புத்தர்சிலை வைத்ததற்கும் இதே இந்து சம்மேளனம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்ற கேள்வியையும் தனது ஊடக அறிக்கையில் எழுப்பியுள்ளார். (இ-7)

## "வடக்கு மக்களுக்கு புதிய தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும்"

(கொழும்பு)



காங்கேசன்துறை துறைமுகப் பணிகள் 2021ஆம் ஆண்டு நிறைவடையும் போது, சரக்குப் போக்குவரத்து கப்பல்கள் வந்து செல்லுமளவுக்கு விரைவு அபிவிருத்தி திட்டமொன்று முன்னெடுக்கப்படுமென, அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த துறைமுகத்துக்கு சரக்குக் கப்பல்கள் வந்து செல்வதால் நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி துறைகளுக்கு அதிகம் வாய்ப்புக்கள் கிடைப்பதுடன், வடக்கு மக்களுக்கு புதிய தொழில் வாய்ப்புக்களும் கிடைக்குமென்றும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் கடனுதவியின் 45.27 மில்லியன் டொலர்கள் நிதியுதவியின் கீழ் இத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் இத்திட்டத்தை விரைவுபடுத்துவதற்காக,பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் , அரசின் உயர் அதிகாரிகள் இணைந்து அடுத்த மாதம் 15ஆம் திகதி காங்கேசன்துறைக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)




**யாழ்.பத்தமேனி இலத்தினேஸ்வரி வித்தியாலய கால்கோள் விழா வித்தியாலய முதல்வர் ப.சுதர்சன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முதல்வர் கு.சதாசிவமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக்கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி.இ.ஏ.செல்வதயா, கௌரவ விருந்தினராக மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர் பொ.லயன் சிறிபவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

156




பத்தொன்பதாவது நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத் தீபகற்பத்திலும் கிறிஸ்தவ எதிர்ப்புச் செயல்கள், மிஷனரிமாரின் மதம் பரப்பும் முயற்சிகளை முறியடிப்பதற்காகத் தோன்ற ஆரம்பித்திருந்தன.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சைவச் செயற்பாடுகள் பத் தொன்பதாவது நூற்றாண்டின் நடுப்பகுதியிலும் இறுதியிலும் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களுக்குப் பரவியபோது அவற்றுக்கு எதிராகச் செயலாற்றும் பொருட்டு கிறிஸ்தவ மிஷனரிமார் வன்னியிலும் கிழக்கு மாகாணத்திலும் கவனஞ்செலுத்த ஆரம்பித்தனர்.

வன்னியிலும் குறிப்பாக கிழக்கு மாகாணத்திலும் கிறிஸ்தவ மிஷனரி முயற்சிகள் சாதகமற்ற விளைவுகளை ஏற்படுத்தியதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

இவ்விடயத்தை நாம் இப்போது விரிவாக ஆராய்வோம்.

### யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் கிறிஸ்தவ மிஷனரிமாரும் தமிழரும்

நாம் ஏற்கனவே பார்த்தவாறு பத்தொன்பதாவது நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து யாழ்ப்பாணத் தீபகற்பம் மிஷனரிமாரின் கல்விச் செயற்பாடுகளினால் பெருமளவு நலன் பெற்றிருந்தது.

ஆயினும் கிறிஸ்தவ மதமாற்று முயற்சிகள் வேகம் பெற்றபோது (இடை நிலைப் பாடசாலைகள், விடுதிப் பாடசாலைகள் என்பவற்றை நிறுவியமை மற்றும் அவர்களது பல்வகைச் செயற்பாடுகள் என்பவற்றினூடாக) கிறிஸ்தவர்களுக்கும் அவர்களுடைய கிறிஸ்தவ மதத்திற்கும் எதிரான வெளிப்படையான பகைமையும் விரோதமும் வளர்ந்தன.

இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலுள்ள மக்களை மதம்மாற்றுவதில் மிஷனரிமார் எவ்வளவுதூரம் வெற்றி பெற்றனர் என்பதை இச்சந்தர்ப்பத்தில் ஆராய்வது பயனுள்ளதாகும்.

இவ் ஆய்வு சைவ விழிப்புணர்வு இவர்களுடைய முயற்சிக்கு எவ்வகையில் தடையாய் இருந்தது என்பதைக் கணிக்க உதவுவதோடு ஒரு தீர்க்கமான

> “1892 ஆம் ஆண்டு வெஸ்லியன் மிஷன் அறிக்கை வடக்கு- கிழக்கின் மொத்த அங்கத்தவர் தொகை 1070 எனவும் பரீட்சார்த்த அங்கத்தவர் தொகை 537 எனவும் பதிவு செய்துள்ளது.அமெரிக்கன் சிலோன் மிஷனைப் பொறுத்தவரை உடுவிலில் இருந்த மகளிர் பாடசாலையும் வட்டுக்கோட்டை செமினரியும் மதமாற்றத்திற்கு முக்கிய காரணிகளாக இருந்தன.”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

தமிழ் அடையாள உணர்வு தோற்றம் பெற்றதை மேலும் சிறப்பாக விளங்கிக்கொள்ளவும் உதவும்.

நாம் முன்னர் கூறியது போன்று பத்தொன்பதாவது நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் நிதிவசதியும் ஆட்பலமும் இல்லாத காரணத்தினால் புரட்டஸ்தாந்து மதத்திற்கோ சைவத்துக்கோ முகங்கொடுத்துச் சமாளிக்க முடியாமையினால் கத்தோலிக்கம் அநேகமாகச் செயலிழந்திருந்தது.

ஆயினும் பத்தொன்பதாவது நூற்றாண்டின் அரையிறுதிப் பகுதியிலிருந்து கத்தோலிக்கத் திருச்சபை தனது பணியை விருத்தி செய்யவும் விரிவாக்கவும் முயன்றது.

மதமாற்றங்கள் சிறிய அளவிலேயே மேற்கொள்ளப்பட்டபோதும் இந்துக்களுடன் ஒப்பிடுகையில் கத்தோலிக்கர்கள் மிகச்சிறிய சமூகமாக இருந்தபோதும் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலும் வன்னி, கிழக்கு மாகாணத்திலும் கூட சமுதாயத்தின் தாழ்ந்த மட்டத்திலேயே மதமாற்றங்கள் ஏற்பட்டன என்பதை இங்கு கருத்திற்கொள்ளவேண்டும்.

நல்லூர், சுண்டுக்குளி, கோப்பாய், பளை ஆகிய நிலையங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த திருச்சபை மிஷனரிச் சங்கத்தின் முயற்சிகளே புரட்டஸ்தாந்து மிஷனரிமாரின் மதமாற்று முயற்சிகளில் அதிக வெற்றியளித்தமையாகும்.

1868 இல் திருச்சபையைச் சேர்ந்திருந்த பிள்ளைகளின் தொகை 677 ஆகவிருந்தது. 1880 இல் இத்தொகை 770 ஆக உயர்ந்தது. 1897 இல் இந்த மிஷனுடன் இணைந்திருந்த உள்ளூர் கிறிஸ்தவ சமூக அங்கத்தினர் தொகை 1423 ஆகக் காணப்பட்டது.

1871 இல் யாழ்ப்பாண மாவட்டத்தின் மக்கள் தொகையான 241,898 இல் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவரின் எண்ணிக்கை 1491 ஆகவிருந்தது.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் வெற்றிகரமான மதமாற்றப் பணிகளில் அமெரிக்கன் சிலோன் மிஷனை விடப் பின்தங்கியிருந்த வெஸ்லியன் மிஷன் பத்தொன்பதாவது நூற்றாண்டின் அரையிறுதிப் பகுதியில் குறிப்பிடத்தக்க வெற்றிகளை ஈட்டியிருந்தது.

1838 முதல் 1866 வரையிலான இருபத்தெட்டு வருட காலத்தில் மும்மடங்குக்குச் சற்று அதிகமானவர்கள் திருச்சபை அங்கத்தவராக இருந்தனர் (1865 இல் 469 பேர்). 1887 அளவில் யாழ்ப்பாணத் தீபகற்பத்தினுள் மொத்தமாக 463 அங்கத்தவர்கள் மட்டுமே இருந்தனர்.

இவர்கள் கிழக்கு மாகாணத்திலேயே அதிக கவனம் செலுத்தியதன் காரணமாக இருந்திருக்கலாம். அங்கு 1871 இல் 457 ஆக இருந்த திருச்சபை அங்கத்தவர் தொகை 1892 இல் 600 இற்கும் அதிகமாக இருந்தது.

1892 ஆம் ஆண்டு வெஸ்லியன் மிஷன் அறிக்கை வடக்கு- கிழக்கின் மொத்த அங்கத்தவர் தொகை 1070 எனவும் பரீட்சார்த்த அங்கத்தவர் தொகை 537 எனவும் பதிவு செய்துள்ளது.

அமெரிக்கன் சிலோன் மிஷனைப் பொறுத்தவரை உடுவிலில் இருந்த மகளிர் பாடசாலையும் வட்டுக்கோட்டை செமினரியும் மதமாற்றத்திற்கு முக்கிய காரணிகளாக இருந்தன.

(தொடரும்)

## பிரிகேடியர் பிரியங்க விவகாரம்

# பிரிட்டனின் நடவடிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது

## இனப்படுகொலை தடுப்பு அமைப்பு அறிக்கை

(லண்டன்)

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை உத்தரவை விலக்கிக்கொள்ள எடுக்கப்பட்ட தீர்மானத்தை கண்டிப்பதாக பிரித்தானியாவை மையமாகக்கொண்ட சர்வதேச இனப்படுகொலையை தடுப்பது. தண்டிப்பது தொடர்பான நிலையம் தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவில் புலம்பெயர்ந்த தமிழர்களை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் அவருக்கு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் பிரித்தானிய அரசாங்கத்துக்கு அதிகரித்து வரும் அரசியல் அழுத்தம் காரணமாக குறித்த உத்தரவை பெப்ரவரி மாதம் முதலாம் திகதி தளர்த்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்நிலையில் இது முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாதது என்று சர்வதேச இனப்படுகொலையை தடுப்பது, தண்டிப்பது தொடர்பான நிலையம் அறிக்கை ஒன்றின் மூலம் குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. "2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கை அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்டது. இது 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் திகதிக்குப் பின்னர் எங்கள் கவனத்திற்கு வந்துள்ளது.

மேலும் இலங்கை அரசாங்கமானது பிரித்தானிய நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து சமர்ப்பித்தல்களை பொதுநலவாய மற்றும் வெளி விவகார அலுவலகங்களுக்கு முன் வைத்துள்ளது என இலங்கை வெளியுறவு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் சரோஜா சிறிசேன தெரிவித்தார்.

இருப்பினும், இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர், இராணுவப் பேச்சாளர் மற்றும் ஜனாதிபதியின் ஆலோசகர் ஆகியோர், பிரியங்க பெர்னாண்டோவிற்கு எதிரான பிடியாணை உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை என்ற தவறான கருத்தை மக்கள் மத்தியில் முன்வைத்துள்ளனர். இந்த செயற்பாடானது முழுக்க முழுக்க வெட்கக்கேடானது.

அத்தோடு குறித்த உத்தரவு தொடர்பில் பொதுநலவாய மற்றும் வெளிவிவகார அலுவலகங்கள் நீதிமன்றத்துடன் தொடர்பு கொண்டதாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கூறியிருந்தார். (இ-7)

# தேசிய அரசை மீண்டும் அமைக்க நான் ஒருபோதும் இணையமாட்டேன்

## சந்திரசேன திட்டவட்டம்




(அநுராதபுரம்)

யார் என்ன சொன்னாலும், தேசிய அரசாங்கத்தை மீண்டும் அமைப்பதற்காக, தான் ஒருபோதும் இணையமாட்டேன் எனத் தெரிவித்த அநுராதபுர நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன, அவ்வாறான ஆட்சியொன்றின் ஆயுட்காலம் நான்கு வருடங்களில் நிறைவடைந்துவிட்டன என்றும் தெரிவித்தார்.

அநுராதபுரம் குருந்தன் குளம் பகுதியிலுள்ள தன்னுடைய வாசஸ்தலத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அவர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஏற்படுத்திய நல்லாட்சி, தோல்வியடைந்ததன் காரணமாகவே, சுதந்திரக் கட்சியிலிருந்து தான் விலகி, குறைபாடுகளை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியிடம் மட்டுமன்றி, பிரதமரிடமும் முகத்துக்கு முகம் தெரிவித்தேன், பிணைமுறிகள் தொடர்பில் தெரிவித்தேன், ஏற்பட்டிருந்த சகல பிரச்சினைகளையும் எடுத்துரைத்தேன் என்று தெரிவித்த அவர், ஊடகங்கள் என்னசொன்னாலும் இவர்களுடன்இணைந்து, தேசிய அரசாங்கமொன்றை உருவாக்கமுடியுமென நான் நினைக்கவில்லை எனவும் தெரிவிததார். அவ்வாறு செய்தால், அது மக்களுக்குச் செய்கின்ற மிகமோசமான துரோகம் எனவும் தெரிவித்தார். (இ-7)



# பிரபல நடிகர் விபத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதி

பிரபல நடிகர் மற்றும் மேல் மாகாண சபை உறுப்பினர் ரவீந்திர யசஸ் விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பண்டாரகமபகுதியில்வைத்து அவர் பயணித்த கார் மரம் ஒன்றுடன் மோதி யதில் குறித்த விபத்து இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1628

### சதா

அனைவரையும் நம்பு... ஆனால் அனைத்துச் சூழ்நிலைகளையும் நம்பாதே இங்கு வீரமாக வீழ்த்தப்பட்டவர்களை விடச் சூழ்ச்சியினால் ஏமாற்றப்பட்டவர்களே அதிகம்



### நர்மதா

வயது முதிர்ந்தவர்களை தனிமையில் விடாதீர்கள்... ஒருவராவது இருங்கள் இல்லையேல் அதே நிலைமை நமக்கும் நேரிடலாம்



### கவிதா

நான் வசதியில்லாமல் வறுமையில் வாழ்கிறேன் ஆனால் வறுமையோ என்னிடம் வசதியாய் வாழ்கிறது




### ரதி

ஆண்களுக்கு ஆணவம் இருந்தாலும் சரி பெண்களுக்கு ஆணவம் இருந்தாலும் சரி அழிவது என்னவோ பிள்ளைகளின் எதிர்காலம் தான்



### சுஜாதா

தெருவில் கிடக்கும் காகிதமாக யாரையும் நினைக்காதே நாளை அது பட்டமாகப் பறந்தால் நீயும் சற்று நிமிர்ந்து தான் பார்க்க வேண்டும்



### சித்ரா

அடிமையாக வாழ்வதைக் காட்டிலும் கேவலமானது அடுத்தவர்களின் யோசனைகளுக்கெல்லாம் ஆமாம் போடுவதுதான்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சமூக அழிவுக்கு உந்துசக்தியாக விளங்கும் போதைப்பொருள் பாவனையிலிருந்து மாணவ சமூகத்தைப் பாதுகாப்போம்

வளர்ந்து வரும் உலகின் இன்று காணப்படும் பல்வேறுபட்ட பிரச்சினைகளில் இளம் சந்ததியினர் அதிலும் குறிப்பாக மாணவ சமூகத்தினர் போதைக்கு அடிமையாதல் பலராலும் பேசப்பட்டுரும் முக்கிய பிரச்சினை யாகும். பாடசாலை மாணவர்கள் தொடக்கம் பல்கலைக்கழக மாணவர் வரை பெரும்பாலானோர் போதைக்கு அடிமையாகி தமது கல்வியையும் வாழ்வையும் சீரழிக்கும் காட்சி இன்றுவேதனைதரும்உண்மையாகும் இவ்விளம் சந்ததியினர் தங்களது இளமைப்பருவ உணர்வுகளையும் அவற்றின் திருப்தியையும் மட்டும் சிந்திக்கிறார்களே தவிர அவற்றினால் ஏற்படும் விபரீதங்களைப் பற்றி சிறிதேனும் சிந்திப்பதாயில்லை. அவர்கள் திடகாத்திரமாக, ஆரோக்கியமாக,ஆளுமை மிக்கவர்களாக வளர்வதற்கு போதை மற்றும் அது உருவாக்கும் தீயநடத்தைகள் தடையாக இருப்பதோடு அவர்களின் வாழ்வையும் சிதைத்து விடுகின்றன.

1987ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி ஒவ்வொரு வருடமும் ஜூன்மாதம் 26ஆம் திகதிபோதைப்பொருள்ஒழிப்பு தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

இருப்பினும் ஜனாதிபதி செயலகமும் கல்வி அமைச்சும் இணைந்து மாணவ சமூகத்திற்கு தெளிவூட்டும் வகையில் ஜனவரி மாதம் 21ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை போதைப் பொருள் ஒழிப்புவாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

"போதைப் பொருள் ஒழிப்பை மாணவர்களின் மூலம் கற்றுக் கொள்வோம்"என்ற தொனிப் பொருளின் கீழ் முன்னெடுக்கப்பட்டுள்ள இவ்வேலைத் திட்டத்தின் ஓர் விழிப்பூட்டும் செயற்பாடகவே இக் கட்டுரை பிரசுரமாகிறது.

இன்று மக்கள் சமுதாயத்திற்கும் அதன் ஆரோக்கியத்திற்கும் எதிராக உலகளாவிய ரீதியில் எழுந்திருக்கும் பிரச்சினைதான் இந்த போதைப்பொருள் பிரச்சினை. போதை என்பது தன்நிலை மறக்கச்செய்து உடல், உள பாதிப்புக்களை ஏற்படுத்தலாகும். இதன் மிகச்சரியான அர்த்தத்தை புரிந்து கொள்வதாயின்சொற்பளவில் உடலை சென்றடைந்தாலும் கணிசமான அளவு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய இரசாயன பண்டம் அல்லது அபாய கரமான மருந்து எனக் குறிப்பிட முடியும். இவற்றுள் மது, ஹெரோயின், கஞ்சா, புகையிலை, பான்மசாலா, போதை தரும் இன்ஹேலர்கள், புகை ப்பிடிக்கும் சாதனங்கள்போன்றன போதைப் பொருள்வகை யைச் சார்ந்தனவாகும்.




தனது சிந்தனையை போதையில் புதைத்து மயக்கத்தையும் குழப்பத்தினையும் தனக்குத் தானே வருவித்துக் கொள்ளும் இப்பழக்கத்திற்கு பல்வேறு காரணிகளும் தூண்டிகளாக விளங்குவதே இப்பிரச்சினைக்கான முக்கிய முக்கிய காரணமாகும். உலக சுகாதார திணைக்களத்தின் அறிக்கையின் படி இலங்கையில் இன்று 13-15 வயதிற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களில் பெரும்பாலானோர் புகைத்தல் பழக்கத்திற்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அபாயகர மருந்துக் கட்டுப்பாட்டுத் தேசிய சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படிஇலங்கையில் உள்ள ஹெரோயின் பாவனையாளர்களில் 99வீதமானோர் ஆரம்பத் தில் புகைப்பிடித்துள்ளனர் என்பது புலனாகின்றது. எனவே புகைத்தல் சாதனங்கள் போதைப் பொருளுக்கான வாயில்கள் என அழைக் கப்படுகின்றன.

ஒருவர் போதைக்கு அடிமையாகி விட்டால் அவரது குடும்ப வாழ்க்கை சமுதாய அந்தஸ்து, அவரது நட்புவட்டம், உறவினர் தொடர்புகள் என்று எல்லாவற்றிலுமே விரிசல் ஏற்பட்டு விடுகின்றது. ஒரு குடும்பஸ்தர் இளம் வயதில் போதைக்கு அடிமையாவாராயின் அவர் இளமையிலே இறந்து விடவும் அவரது குடும்பம் சிதைந்து சீரழிந்து விடுவதற்கும் வாய்ப்புக்கள் அதிகம். அவரது குழந்தைகள் தந்தையின் அன்பு, அரவணைப்பு மற்றும் வழிகாட் டல் இன்றி அவர்களது எதிர் காலமும் இதேபோன்ற தொரு கேள்விக்குறியான வாழ்க்கையாக மாறுகின்றது.

எனவே இன்று எமது சமுதாயத்தில் போதைப் பொருள் பாவனையானது ஒரு தொடர் செயற்பாடாகவே கருத வேண்டியுள்ளது.

இன்று பாடசாலை மாணவர்கள் இப்போதைப் பழக்கத்திற்கு உட்படுத்தப்படுவதற்கு பல்வேறு விடயங்களும்காரணிகளாக அமைந்துள்ளன. இன்றைய குடும்பக் கட்டமைப்பு, சமுதாயத்தின் மாறுபட்ட தோற்றம், ஊடகங்கள் மூலம் காட்டப்படும்சமூக நிலைமை போன்றன போதைப் பழக்கங்களை ஏற்படுத்தும் யதார்த்தமான தூண்டிகளாகும்.

ஆரோக்கியமான இளமைப் பருவத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் ஆரோக்கியமான குடும்ப கட்டமைப்பை பேணுவது அவசியமாகும்.சிறுவயதில் குழந்தைகள் மீது செலுத்திய அதே கவனம் அவர்கள் வளர்ந்த பின்னரும் தேவை என்பதை பெற்றோர் உணர்ந்து கொள்ள வேண்டும். சிறு வயதில் பிள்ளைகளை அதிகாரத்துடன் அடக்கியது போலல்லாது அவர்கள் வளர்ந்ததும் பெற்றோர்கள் பிள்ளைகளுடன் சுமுகமாகவும், ஒத்துழைப்புடனும் நடந்து கொள்ளுதல் அவசியமாகின்றது. பிள்ளைகளின் பிரச்சினைகளில் உதவக் கூடிய முதல் நபர் தாயும், தந்தையும் என்ற எண்ணம் பிள்ளைகள் மனதில் தோன்ற வேண்டும்.

இந்த வகையில் பெற்றோர்கள் பொருத்தமான நேரத்தில் நல்லன்பை வழங்குதல், எப்பொழுதும் கவனமாயிருத்தல், நண்பர்களை அறிந்து வைத்திருத்தல், தேவைக்கு அதிகமாக பணம் கொடுக்காதிருத்தல், நல்ல பொழுது போக்குகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பாராட்ட வேண்டிய விடயங்களில் பாராட்டுதல். தேவையான பொழுது வழிகாட்டுதல், உரிய பழக்கவழக்கங்களில் பயிற்சியை ஏற்படுத்துதல் போன்ற செயற்பாட்டுகள் மூலம் போதைப் பழக்கங்களைத் தவிர்த்து மாணவர்களை கற்றலில் மன நலத்துடன் ஈடுபடுத்த முடியும்.

சமூகக் காரணிகளாகக் குறிப்பிட்டுக் கூறக் கூடியவை இன்று எல்லா நகரங்களிலும் அனுமதிக்கப்பட்ட பல மதுபான நிலையங்கள் இருப்பதோடு அவற்றுள் சில சட்டவிரோத மதுபான நிலையங்களாகவும் இயங்குவதற்கு சாதகமான நிலைமைகள் கிடைத்துள்ளன. பாடசாலைகளுக்கு அருகில் உள்ள சிறிய கடைகளிலும் பல்வேறுபட்ட போதைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் சமூக சூழலில் போதைப் பொருட்களை பணம் கொடுத்து எளிதாகப் பெற்றுக்கொள்ள முடிவதால் சிறுவர்களும் இலகுவில் இப்பழக்கத்திற்கு அடிமையாகக் கூடிய நிலை காணப்படுகின்றது. எனவே இவற்றில் இருந்து பெற்றோர்கள் முடிந்தளவு பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டுமாயின் தாம் முன்மாதிரியாக நடப்பதோடு பிள்ளை மகிழ்ச்சியாகவும் உல்லாசமாகவும் இருக்கும் சூழலைவீட்டில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

ஊடகங்கள் மூலம் காட்டப்படும் சமூக நிலைமைகளை எடுத்துக் கொள்வோமாயின் பாடசாலை மாணவர்களும் இளம் பராயத்தினரும் தொலைக்காட்சிகளில் காணும் தமது மனதைக் கவர்ந்த சில பாத்திரங்களின் கவர்ச்சிகளினால் கவரப்பட்டு அவர்களின் நடை உடை பாவனைகளை தாமும் மேற்கொள்வது இன்று காணக்கூடிய யதார்த்த நிலையாகும். அடுத்தவரைப் பார்த்து பின்பற்ற ஆசை வரும் போது அவ்விடயத்தை செய்யமுடியுமா? அது தேவையானதா? பொருத்தமானதா? என சிந்தித்துப் பார்க்க பிள்ளைகளைப் பழக்கப்படுத்த வேண்டும். தொலைக்காட்சியில் காணும் காட்சிகளும் சம்பவங்களும் பல தடவைகள் திருத்தம் செய்யப்பட்ட காட்சிகளே என்பதையும் நமது யதார்த்த வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்கள் ஒரு போதும் திருத்தம் செய்ய முடியாதவை என்பதையும் பிள்ளைகளுக்கு உணரச் செய்ய வேண்டும். இவற்றின் மூலம் ஊடகங்கள் தொடர்பான சமூக நிலைமைகளிலிருந்து மாணவ சமுதாயத்தை பாதுகாக்க முடியும்.

ஒரு தேசத்தை அல்லது ஒரு சமுதாயத்தை அல்லது ஒரு தனிநபரை திட்டமிட்டு நசுக்கிவிட வேண்டும் என்ற நோக்கில் போதைப் பொருளை ஓர் ஆயுதமாக பயன்படுத்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் எம்மத்தியில் பரவலாக நிலவுகின்றமை, கண்கூடு. தினமும் போதைப் பொருள் கடத்தல் சம்பவங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி போதைப்பொருள் கடத்தல் நாடகம் ஆங்காங்கே அரங்கேற்றப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

ஆகவே போதை வஸ்துக்கு அடிமையானவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கி மறுவாழ்வு அளிக்கவேண்டும். அத்தோடு போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு உரிய தண்டனைகளை வழங்க வேண்டும். அத்தோடு போதைப் பொருட்களின் விற்பனையை தடை செய்து அதன் பாவனையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும்.

ஜனாதிபதி செயலகமும் கல்வி அமைச்சும் இணைந்து மேற்கொள்ளும் இந்த ஒருவார செயற்றிட்டத்தின் மூலம் மட்டும் மாற்றங்களை கொண்டுவந்து விட முடியாது என்பதை கருத்தில் கொண்டவர்களாக மாண்வர்கள் மத்தியில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் போதைப் பொருளுக்கு எதிரான உறுதியுரை எடுத்தல் பாடசாலையின் ஆரம்பத்தில் மாணவர்களால் மேற்கொள்ளப்படும் யோகாசனப் பயிற்சியினை தொடர்ந்தும் கடைப்பிடித்தல், ஆன்மீகச் சிந்தனைகளை விதைத்தல் மூலம் போதையற்ற ஆரோக்கியமான மாணவ சமுதாயத்தை கட்டியெழுப்ப அனைவரும் அணிதிரள்வோம்.

மலரும் மொட்டுக்களை வாடவிடாதுமுட்கள் நடுவிலும் சுகந்தமாக மலர அனைவரும் மன உறுதி எடுப்போம்.

திருமதி.
கி.ஜெ.று.ரெறின் டெஸ்மன்
ஆசிரியை, யா/
புனித சாள்ஸ் ம.வித்தி.

# 'மகிந்த அணிக்கு தகுந்த பதில் வழங்கப்படும்'-நளிந்த



மக்கள் விடுதலை முன்னணியினரை கூட்டணியமைக்குமாறு பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவம் உத்தியோகபூர்வமாக அறிவித்தல் விடுத்தால் அதற்கு தகுந்த பதிலை வழங்கவுள்ளதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பொதுஜனபெரமுன அமைக்கவுள்ள புதிய கூட்டணியில் மக்கள் விடுதலை முன்னணியையும் இணைந்து கொள்ளுமாறு அக்கட்சியின் உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டுள்ள விடயம் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு பதலளித்தார்.

பொதுஜன பெரமுனவினர் முதலில் தாங்கள் எக் கட்சி உறுப்பினர்கள் என்பதை முறையாக நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும். அதன் பின்னரே பிற கட்சியினரை தங்களுடன் கூட்டணியமைத்துக் கொள்ளுமாறு அழைப்பு விடுக்க வேண்டும்.

அத்துடன் மக்கள் விடுதலை முன்னணி பல சவாலான நிலைகளிலும் எவருடனும் கூட்டணியமைத்துக் கொள்ளாது தனித்தே அரசியலில் செல்வாக்கு செலுத்தியது. இதுரையில் நாங்கள் ஊழல்வாதிகளுடனும் குற்றவாளிகளுடனும் கைகோர்த்ததில்லை எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 90 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 180 | 200 |
| தக்காளி | 100 | 80 | 180 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 40 | 60 |
| கோவா | 80 | 70 | 60 | 80 |
| கரட் | 100 | 100 | 90 | 140 |
| பூசணி | 50 | 20 | 40 | 40 |
| புடோல் | 60 | 70 | 60 | 80 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 150 | 100 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 80 | 100 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 70 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 90 | 120 |
| பீற்றூட் | 40 | 100 | 60 | 80 |
| கறிமிளகாய் | 150 | 240 | 80 | 160 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 500 | 600 |
| போஞ்சி | 60 | 80 | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 80 | 80 |
| கீரை -1பிடி | 30 | 20 | 20 | 40 |
| தேசிக்காய் | 100 | 120 | 60 | .80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 30 | 30-50 |
| இராசவள்ளி | 120 | 120 | 130 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 120 | 70 | 120 |
| முள்ளங்கி | 30 | 80 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 15 | 50 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 |
| ஈரப்பலா | — | 50 | 120 | 60 |

# சிறுவர் அரங்கம்

## மாட்டிக்கிச்சு நரி



ஒரு கிராமத்தின் ஒதுக்குப்புறமாக இருந்த மடத்தில் ஒரு சந்நியாசி இருந்தான். அவன் பெயர் தேவசன்மா. அவன் பிச்சை எடுத்துச் சேர்த்த காசையெல்லாம் கந்தையில் முடித்துத் தன் அக்குளில் வைத்துக் கொண்டு திரிந்தான். இரவும் பகலும் அந்தக் கந்தை அவனை விட்டு நீங்காமல் இருந்தது.

சந்நியாசி பணமுடிப்பை எப்போதும் அக்குளில் வைத்துக் கொண்டு திரிவதை திருடன் ஒருவன் கவனித்துப் பார்த்தான். அந்தப் பணப்பையை எப்படித் திருடலாம் என்று யோசித்தான். இதற்கு அவன் ஒரு சூழ்ச்சி செய்தான். ஒரு நாள் சந்நியாசியிடம் சென்று, சந்நியாசியின் கால்களில் விழுந்து வணங்கினான்.

"சுவாமிகளே! இந்த உலகமே ஒரு மாயை! காலை மலர்ந்து மாலை உதிரும் மலருக்கு ஒப்பானது. வாழ்க்கையோ காய்ந்த புல்லில் பற்றிக் கொண்ட நெருப்புப் போன்றது. வாலிபப் பருவமோ அருவியின் வேகத்தைப் போன்றது. இவை அனைத்தையும் நான் நன்றாக உணர்ந்தவன். தங்களிடம் உபதேசம் கேட்க வந்திருக்கிறேன். என்னைச் சீடனாக ஏற்றுக் கொண்டு நல்வழி காட்ட வேண்டும்!" என்று வேண்டினான்.

தேவசன்மாவும் அவனைத் தன் சீடனாக ஏற்றுக் கொண்டான். அந்தத் திருடனும் மிகவும் நல்லவன் போல் சந்நியாசிக்குப் பணிவிடைகள் செய்து வந்தான்.

ஒருநாள் ஓர் அந்தணன் இவர்களுக்கு விருந்து வைத்தான். விருந்துண்டு சென்ற பிறகு, சீடன் தன் தலையில் கிடந்த ஒரு துரும்பைக் காட்டி, "சுவாமி! நமக்குச் சோறு போட்ட அந்தணன் வீட்டிலிருந்த இந்தத் துரும்பு என்னையும் அறியாமல் ஒட்டிக் கொண்டு வந்து விட்டது. உணவளித்தவன் வீட்டுப் பொருளை ஒரு துரும்பானாலும் எடுத்து வரலாமா? இதோ நான் ஓடிப்போய் இதைத் திருப்பிக் கொடுத்து விட்டு வந்து விடுகிறேன்!" என்று கூறி ஓடினான்.

சிறிது தூரம் சென்று ஒரு மறைவான இடத்தில் நெடு நேரம் உட்கார்ந்திருந்து விட்டு அவன் திரும்பி வந்தான். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு தேவசன்மாவுக்குத் தன் சீடன் மேல் நம்பிக்கை அதிகமானது.

ஒருநாள் சந்நியாசியும் சீடனும் ஒரு குளக்கரையை அடைந்தனர். குளத்தில் இறங்கிக் கைகால் கழுவிக் கொண்டு வருவதாக சந்நியாசி போகும்போது கரையில் இருந்த சீடனிடம் என்றும் விட்டுப் பிரியாத கந்தை முடிப்பைக் கொடுத்து, வைத்திருக்கும் படி கூறிவிட்டுப் போனார்.

சந்நியாசி கைகால் கழுவிக் கொண்டு திரும்பும் போது குளத்தின் எதிர்க்கரையில் இரண்டு செம்மறி ஆடுகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. ஆடுகள் இரண்டும் ஆங்காரத்தோடு விலகிப் பின் வாங்குவதும் மீண்டும் ஓடிவந்து ஒன்றையொன்று முட்டி மோதிக் கொள்வதுமாக இருந்தன. மண்டையில் இருந்து இரத்தம் பெருக்கெடுத்து ஓடியது.

தூரத்திலிருந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்த குள்ளநரி ஒன்று கீழே சொட்டும் இரத்தத்தை நக்கிச் சாப்பிட எண்ணி அங்கு வந்தது. ஆடுகள் விலகிப் பின்னடையும் போது புகுந்து இரத்தத் துளிகளை நக்கிச் சுவைத்தது. ஆடுகள் முட்டிக் கொள்ள முன்னே வரும் போது நரி தந்திரமாக பின்னே சென்று விடும். இவ்வாறு நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார் சந்நியாசி.

"அடப்பாவமே! இந்தக் குள்ள நரியின் முட்டாள்தனத்தை என்னவென்று சொல்வது? ஆட்டுச் சண்டையின் மத்தியில் அது சிக்கிக் கொண்டால் நிச்சயமாக அது செத்துப்போகுமே வேறு எதுவும் நடக்கப் போகிற மாதிரி எனக்குத் தோன்றவில்லை!" என்று எண்ணிச் சிரித்தார்.

மறுபடியும் ஆடுகள் முட்டிச் சண்டையிட நெருங்கின. இரத்தத்தைச் சுவைத்து ருசி கண்ட நரி ஆவலோடு இப்போது நெருங்கி வந்து கொண்டே இருந்தது. ஆடுகளின் மத்தியில் வசமாக மாட்டிக் கொண்ட நரி கீழே தள்ளப்பட்டு உயிரைவிட்டது. ஆட்டுச் சண்டையில் குள்ளநரி செத்தது. இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்த சந்நியாசி தன்னை மறந்து நின்று கொண்டிருந்தார்.

இதுதான் சரியான சந்தர்ப்பம் என எண்ணிய சீடன் பணமுடிப்பை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டான்.

நரி சாகப்போகிறதே என நினைத்து, அதை வேடிக்கை பார்த்துக் கொண்டே தன்னுடைய பணமூட்டையை இழந்தார் அறிவுகெட்ட தேவசன்மா.

## எரிமலைகளாலும் நன்மையுண்டு

எரிமலை சீறும்போது எரிமலைக் குழம்போடு கந்தக ஆவி வெளிவருகிறது. அந்தக் கந்தக ஆவியானது அனல்போன்ற பாறைக் குழம்பு குளிர்ந்து இறுகும்போது கட்டியாக மாறி, எரிமலைப் பள்ளங்களில் படிந்து விடுகிறது.

இம்மாதிரியான எரிமலைப் படிவுகள் உள்ள எரிமலைப் பகுதிகள் தென் அமெரிக்கா, நியூசிலாந்து, ஜப்பான், மெக்சிக்கோ, சிசிலி முதலிய இடங்களில் காணப்படுகின்றன.

அப்பகுதிகளில் 500 முதல் ஆயிரம் அடிக்கு சுரங்கம் தோண்டி கந்தகம் வெட்டி எடுக்கிறார்கள்.

அவ்வாறு கிடைக்கும் கந்தகத்தைத்தான் தீக்குச்சிகள் செய்வதற்கும், துப்பாக்கி மருந்து தயாரிப்பதற்கும் ரப்பர் பதனிடுவதற்கும் நமது நோய் தீர்க்கும் சல்பா மருந்து தயாரிக்கவும் பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்றவை தயாரிப்பதற்கும் பயன்படுத்துகிறார்கள்.

அனல் குழம்பு குளிரும்போது மேலிருந்து கீழே பாறையாக இறுகிக்கொண்டே போவதால் தங்கம், வெள்ளி, ஈயம், துத்தநாகம், பாதரசம் போன்ற பல உருகிய உலோகப் பொருட்களும் கட்டியாக மாறிப் பாறைகளோடு கலந்து விடுகின்றன. அவ்வாறு பூமிக்குக் கீழே சில அடி ஆழத்துக்குள்ளாகவே உலோகக் குழம்புகள் பாறைக் குழம்போடு வந்து படிவதால்தான் சுரங்கங்கள் மூலம் அவை நமக்கு எளிதில் கிட்டுகின்றன.

## சிந்தனைக்கு விருந்து

- சாதனை படைக்கப் பிறந்தவர்கள் ஜாதகம் பார்ப்பதில்லை.
- ஊக்குவிக்க ஆள் இருந்தால் இன்று ஊக்குவிற்பவன் கூட நாளை தேக்கு விற்பான்.
- வாழ்க்கை என்பது ஒரு மெழுகுவர்த்தி அல்ல, அது ஒரு அற்புதமான தீபம். பிரகாசமாக அதை எரியச் செய்து அடுத்த தலைமுறையிடம் ஒப்படைக்க வேண்டும்.
- திறமையானவர்கள் சந்தர்ப்பத்திற்கு காத்திருப்பதில்லை. அவர்களே சந்தர்ப்பதை உருவாக்குகிறார்கள். ஒரு முயற்சி நிறுத்தப்படும்போது தோல்வியாகிறது, தொடரப் படும்போது வெற்றியாகிறது.
- நான்தான் செய்து முடித்தேன் என்று மார்தட்டிக் கொள்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் நம்மை அறியாமல் வேறொருவர் உந்து சக்தியாகவும் மூலகாரணமாகவும் இருக்கிறார்.
- விதியை நம்புபவன் எதையும் சாதிக்க மாட்டான்.
- தனியாக இருக்கும்பொழுது சிந்தனையிலும் கூட்டத்தில் இருக்கும்பொழுது வார்த்தையிலும் கவனமாக இருக்க வேண்டும்.
- பிறரைச் சீர்திருத்தும் முயற்சியைவிட, தன்னை சீர்திருத்திக் கொள்வதே முதற்கடமை.
- ஒழுங்கு தவறிய இடத்தில் பயன் இருந்தாலும் மதிப்பில்லை.
- பணத்தின் மிகப்பெரிய பயன் அதை இல்லாதவர்களுக்கு கொடுத்து மகிழ்வதுதான்.
- மற்றவர்கள் முடியாது என்று நினைக்கிற ஒரு விடயத்தை முடித்துக் காட்டுவதுதான் நல்ல தலைமைப் பண்பின் அடையாளம்.
- உயர் பதவி என்பது நிரந்தர சிம்மாசனம் அல்ல. அது நமக்குச் சரிப்படாவிட்டால் மற்றவர்களுக்கு இடம் தந்து விலகிவிடவேண்டும்.
- உங்களிடம் பணி புரிகிறவர்களை மரியாதையோடும் கண்ணியத்தோடும் நடத்துங்கள். அவர்கள்தான் உங்களின் மிகப்பெரிய சொத்து.
- நாளை என்பது மிக தாமதமாகும். இன்று முதலே வாழ்க்கையைச் சிறப்பாக நடத்திக் காட்டுங்கள்.
- இயன்றால் மரங்களை வளர்த்து இயற்கையை அழியாமல் காப்பாற்றுங்கள். இயலாவிட்டால் இருக்கும் மரங்களை வெட்டாமல் உங்களை நீங்களே காப்பாற்றிக் கொள்ளுங்கள்!

மனிதனை உருவாக்குபவை மருந்தோ உணவோ அல்ல. சிந்தனைகள்தான்.

– ஜெயகாந்தன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அரசியலமைப்பை நிறைவேற்ற பிரதமர் எடுக்கும் நடவடிக்கை என்ன?

புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் அமுலாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பிக் கொண்டிருக்கிறது.

ஆனால் அதற்கான அறிகுறிகள் ஏதேனும் தெரிவதாக இல்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை அமுல்படுத்துவார் எனக் கூட்டமைப்பு இப்போதும் எதிர்பார்க்கிறதாயினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுகின்ற அறிக்கைகளைப் பார்க்கும்போது நடந்தால் நடக்கட்டும், இல்லையென்றால் அதுபற்றி நமக்குக் கவலையில்லை என்பதுபோலக் கூறி வருகிறார்.

பொதுவில் ஆட்சியில் இருப்பவர்கள் தீர்வுத்திட்டமொன்றைக் கொண்டு வருவர். அதனை எதிர்க்கட்சி எதிர்க்கும். ஆளுங்கட்சியும் இதுதான் சந்தர்ப்பம் என்று நினைத்து குறித்த தீர்வுத் திட்டத்தை கைவிடும்.

இலவுகாத்த கிளிபோல இருந்த தமிழ்த் தரப்புகள் மீண்டும் இலவங்காய் பழுக்கும் என்ற நம்பிக்கையோடு காத்திருப்பிற்காகக் காத்திருக்கும்.

இந்த ஒழுங்குமுறையில்தான் புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தமும் பழுக்கும் என்று கூட்டமைப்பு நம்புகிறது.

உண்மையில் புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் அமுலாக வேண்டுமாயின் அது தொடர்பான பிரசாரக்கூட்டங்களை அரசு நாடு முழுமையிலும் நடத்த வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதை சிங்கள மக்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

அதேபோல் வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழ் மக்கள் கொல்லப்பட்ட நெட்டூரத்தை தென்பகுதி மக்களுக்குத் தெரியப்படுத்துவதுடன் அந்தக் கொடூர சம்பவத்தின் காணொளிகளைக் காண்பிக்க வேண்டும்.

காலாகாலமாக தமிழ் மக்கள் பேரினவாதத்தால் அழிக்கப்படுகின்றனர் என்ற செய்தியை அறியாத சிங்கள மக்கள் ஏராளமாக உள்ளனர்.

அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் சிங்கள மக்களை தமிழ் மக்கள் எதிர்க்கின்றனர் என்பதுதான்.

எனவே உண்மை நிலையைத் தெரியப்படுத்தாதவரை தென்பகுதியில் இருக்கக்கூடிய பேரினவாத ஊடகங்கள் தெரிவிக்கின்ற உண்மைக்குப் ப்றம்பான செய்திகளையும் திரிபுபடுத்தப்பட்ட செய்திகளையுமே நிஜமானவை என்று சிங்கள மக்கள் நம்புகின்ற நிலைமை நீடிக்கும்.

எனவே சிங்கள மக்களின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். ஆனால் ஆட்சியாளர்கள் எவரும் அங்ஙனம் செய்வதாக இல்லை.

மாறாக இராணுவத்தின் வெற்றியைக் காட்டுவதற்கும் போரில் உயிரிழந்த இராணுவத்துக்காக அமைக்கப்பட்ட நினைவிடங்களில் அஞ்சலி செலுத்துவதற்குமாக சிங்கள மக்கள் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

ஆக, இந்நிலைமை மாறாதவரை புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தமல்ல எதுவுமே சாத்தியமாகாதென்பது சர்வநிச்சயம்.

# மகிந்த - மைத்திரி கூட்டணியை அமைத்து அரசியல் அமைப்பினை தோற்கடிக்க வேண்டும்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

மகிந்த - மைத்திரி கூட்டணியை அமைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மையை இல்லாதொழித்தால் மட்டுமே அரசியல் அமைப்பினை தோற்கடிக்க முடியும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டணி அமைக்க இடமளிக்கக்கூடாது.

அதற்கு முன்னர் மகிந்த - மைத்திரி கூட்டணியை அமைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மையை இல்லாதொழித்தால் மட்டுமே அரசியல் அமைப்பினை தோற்கடிக்க முடியும்.

மீண்டும்மைத்திரி-ரணில கூட்டணியை அமைக்க சர்வதேச அழுத்தங்கள் எழுந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நிகழ்கால அரசியல் நகர்வுகள் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி இவ்வாறு தெரிவித்தார். (ம-3)

## தைப்பொங்கல் தினத்தன்று இருவர் மீது வாள்வெட்டு

# வாள்வெட்டு சந்தேகநபர்கள் மூவரையும் இனங்காட்ட சாட்சி ஒருவர் பின்னடிப்பு

(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் தினத்தன்று இருவர் மீது வாளால் வெட்டிக்காயப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கைது செய்யப்பட்டவர்கள் மூவரையும் இனங்காட்ட இரண் டாவது சாட்சி மறுப்புத் தெரிவித்தார்.

எனினும் முதலாவது சாட்சி நீதிமன்றில் முன்னிலையாகாததால் சந்தேக நபர்கள் மூவரையும் வரும் 8ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ்.பி. போல் உத்தரவிட்டார்.

தைப்பொங்கல் தினமான கடந்த 15ஆம் திகதி யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை நாச்சிமார் கோவிலடியில் இளைஞர்கள் இருவரை துரத்தி வந்து வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றது. சம்பவத்தில் இளைஞர்ஒருவரின்கைவிரல் துண்டாடப்பட் டது.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில்மூன்று இளைஞர்கள் யாழ்ப்பாணம் சிறப்புப் பொலிஸ் பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

மானிப்பாய் கட்டுடையைச் சேர்ந்த ஒருவரும் ஓட்டுமடத்தைச் சேர்ந்த இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மூவரும் ஆவா குழுவைச் சேர்ந்த 19,23 மற்றும் 25 வயதுடையவர்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருந்தார்.

சந்தேகநபர்களிடமிருந்து இரண்டு வாள்களும் கைப்பற்றப்பட்டன.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் மூவரும் யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் நேற்று முன்தினம் மாலை முற்படுத்தப்பட்டனர்.

சநதேகநபர்களை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்ட மேலதிக நீதிவான், சாட்சிகளை ஒழுங்குபடுத்தி அடையாள அணி வகுப்பை நடத்துமாறு அறி வுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் அந்தோனி சாமி பீற்றர் போல் முன்னிலையில் சந்தேகநபர்கள் மூவரும் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டனர். முதலாவது சாட்சி மனறில் தோன்றத் தவறிய நிலையில் இரண்டாவது சாட்சி முன்னிலையானார்.

சந்தேகநபர்கள் அடையாள அணிவகுப்புக் குட்படுத்தப்பட்டனர். எனினும் அவர்களை இனங் காட்ட தன்னால் முடியாது என்று இரண டாவது சாட்சி மன்றுரைத்தார.

இந்த நிலையில் சந்தேக நபர்களை வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (ம-3)

## தோல்வியைக் கண்டு...

- தோல்வி என்பது நல்ல பாடம். நல்ல அனுப வம். இன்றுவரை பல சாதனைகளைப் படைத்தவர்கள் தோல்வியைச் சந்தித்திருக்கமாட்டார்கள் என்று சொல்லமுடியாது. 100 இற்கு 90 பேர் ஏதாவது ஒரு வகையில் அல்லது ஒருமுறையாவது தோல்வியைச் சந்தித்திருக்கக்கூடும். அவர்கள் சோர்வு அடைந்திருந்தால் எப்படி சாதனைகளைப் படைத்திருக்க முடியும்.
- தோல்வியைக் கண்டு பயப்படாதவர்கள்தான் வெற்றி அடைகிறார்கள். தொடர்ந்து வெற்றியைப் பெறுவதன் மூலம் சாதனை படைத்திருக்கின்றனர்.
- தோல்வியைக் கண்டு துவண்டு விடக்கூடாது. முழு மனதோடும் ஈடுபாடுகளுடனும் முயற்சி செய்தால் வெற்றி என்பது விரல் நுனியில் என்பதை உணர்ந்திட வேண்டும். தோல்விக்கு அஞ்சுபவன் கோழை. எனவே தோல்வி என்பது வெற்றிக்கு முன்மாதிரி என்று நினைத்து வென்றிட வேண்டும். கோடைக்காலத்தில் உதிர்ந்த சருகுகள், வசந்த காலத்தில் மீண்டும் துளிர்க்குமென்று கருதி வாழ்ந்தால் தோல்வியே இல்லாது வாழலாம்.

# இராணுவத்தை காட்டிக் கொடுக்க ஐக்கிய தேசியக் கட்சி சூழ்ச்சி

## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் இராணுவத்தினரை காட்டிக் கொடுக்க முன்வந்துள்ளது என பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவைக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள் என்று சர்வதேசங்கள் அரசாங்கத்திற்கு அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றன.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பில் இடம்பெறவுள்ள விவாதத்தின்போது சர்வதேசத்தை திருப்திப்படுத்த ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான அரசாங்கம் இராணுவத்தினரை காட்டிக் கொடுக்க முன்வந்துள்ளது.

பொதுஜன பெரமுன முன்னணியின் தலைமை காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-3)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- இரக்கம் உள்ள இதயம், சிந்தனை நிறைந்த மூளை, வேலைசெய்யும் கைகள் மூன்றும் நமக்குத் தேவை.
- நல்லவர்கள் மற்றவர்களுடைய நன்மைக்காக மட்டுமே வாழ்கிறார்கள்.
- ஒருவருக்கொருவர் நன்மை செய்வதன் மூலமாகத் தான், நற்பலன்களை அடைய முடியும்.
- மற்றவர்களுக்கு முக்தியை வாங்கிக் கொடுப்பதற்காக நீ நரகத்திற்கே செல்லவும் தயாராக இருக்க வேண்டும். மரணம் ஒருநாள் உறுதி என்னும்போது நல்ல செயலுக்காக உயிரை விடுவது மேலானது.
- பெரியவர்கள் பலர் செய்த தியாகத்தின் பயனையே இன்று மனிதகுலம் அனுபவிக்கிறது. இந்த உண்மையை உலகம் முழுவதிலும் காணமுடியும்.
- உன் சொந்த முக்திக்காக நீ உலகத்தைத் துறந்து விட விரும்பினால் அது ஒன்றும் பாராட்டத்தக்கது அல்ல. ஆனால், உலக நன்மைக்காக உன்னை நீயே தியாகம் செய்ய முடியுமானால் கடவுளாகி விடுவாய்.
- உலகம் கோழைகளுக்காக ஏற்பட்டதல்ல. இங்கிருந்து தப்பி ஓட முயற்சிக்காதே. தியாக உள்ளத்துடன் சேவையில் ஈடுபடு.

# நெடுந்தீவு பிரதேச செயலக விளையாட்டுப் போட்டி உதயசூரியன் - சென் அன்ரனிஸ் அணிகள் வெற்றி









நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 2019 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவின் குழுப் போட்டிகளின் வரிசையில் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் ஆண்கள், பெண்களுக்கான உதைபந்தாட்ட போட்டிகள் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன.

முதலில் பெண்களுக்கான போட்டியில் உதய சூரியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென். பற்றிமா விளையாட்டுக் கழகம் மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் போடாததினால் சமநிலை தவிர்ப்பு மூலம் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் 3:1 கோல் கணக்கில் வெற்றியை தனதாக்கிக்கொண்டது.

ஆண்களுக்கான போட்டியில் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் போடாததினால் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியை தனதாக்கிக் கொண்டது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# ஹட்ரிக் வெற்றியுடன் தொடரை கைப்பற்றிய இந்தியா

நியூசிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி 7 விக்கெட்டுக்களினால் வெற்றியீட்டித் தொடரை கைப்பற்றியுள்ளது.

மவுண்ட் மன்கன்யில் நேற்றுக் காலை 7.30 இற்கு ஆரம்பமான இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி 49 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 243 ஓட்டங்களைக்பெற்றது.

244 என்ற வெற்றி யிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இந்திய அணியின் வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 43 ஓவர்களில் இந்திய அணி 3 விக்கெட்டுக்களை இழந்து நியூசிலாந்து அணி நிர்ணயித்த வெற்றியிலக்கை அடைந்தது. (க-7)

# சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அம்பதி ராயுடு பந்து வீசத்தடை



சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அம்பதி ராயுடு பந்து வீச சர்வதேச கிரிக்கெட் சபை தடைவிதித்துள்ளது.

இந்திய ஒருநாள் கிரிக்கெட் அணியின் மிடில் ஆர்டர் பட்ஸ்மேன் அம்பதி ராயுடு. பகுதி நேர பந்து வீச்சாளரான இவர், அவுஸ்திரேலியாவிற்கு எதிராக பிரிஸ்பேனில் நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில் சில ஓவர்கள் வீசினார்.

அவரது பந்து வீச்சில் சந்தேகம் இருப்பதாக புகார் எழுந்தது. இதனால் 14 நாட்களுக்குள் அம்பதி ராயுடு, தனது பந்து வீச்சை பரிசோதனைக்கு உட்படுத்தி திருத்திக்கொள்ள வேண்டும் என்று ஐ.சி.சி.வலியுறுத்தியிருந்தது.

ஆனால் இன்றுவரை அம்பதி ராயுடு தனது பந்து வீச்சை பரிசோதனைக்கு உட்படுத்தவில்லை. இதனால் 14 நாட்கள் முடிந்துள்ள நிலையில் சர்வதேச போட்டிகளில் அம்பதி ராயுடு பந்து வீச ஐ.சி.சி. அதிரடி தடைவிதித்துள்ளது. இனிமேல் அம்பதி ராயுடு சர்வதேச போட்டிகளில் பந்து வீச இயலாது. ஆனால், பிசிசிஐ நடத்தும் உள்ளூர் தொடர்களில் பந்து வீசலாம். (க-7)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்.கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் சி.சிவகணேசன் தலைமையில் இடம்பெறும். (க-7)

# ஆண்கள் , பெண்களுக்கான துடுப்பாட்டம் நாயன்மார்கட்டு பாரதி,ஐக்கியம் சம்பியன்

2019 ஆம் ஆண்டுக்கான நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண்களுக்கான துடுப்பாட்டப்போட்டியானது சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய துடுப்பாட்ட மைதானம் மற்றும் யாழ். கனகரத்தினம் மத்திய, மகா வித்தியாலய மைதானங்களில் நடைபெற்றது.

இப்போட்டியின் இறுதிப் போட்டி அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய துடுப்பாட்ட மைதானத்தில் நடைபெற்றது. இதில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து நாயன் மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் மோதியது.

இப்போட்டியில் நாயன் மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகம் 9 ஓட்டங்களால் வெற்றிபெற்று 2019 ஆம் ஆண்டிற்கான வெற்றிக் கேடயத்தினை தனதாக்கிக் கொண்டது.

பெண்களுக்கான துடுப்பாட்ட போட்டியின் இறுதிப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து மணியந்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக்கழகம் மோதியது. இப்போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று 2019 ஆம் ஆண்டிற்கான வெற்றிக் கேடயத்தினை தனதாக்கிக் கொண்டது.. (க)









## வாய்ப்புகளை சாதனைகளாக...

நேற்று சாவகச்சேரியில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வாய்ப்புகளை கைப்பற்றி அவற்றை சாதனைகளாக மாற்ற இளைஞர்களை முன்வரவேண்டும். தேசத்தை வளர்ச்சியை நோக்கி முன்னெடுத்துச் செல்லும் மிக முக்கிய பொறுப்பு இளைஞர்களுக்கு இருக்கிறது

இந்த பிராந்தியத்தில் இந்திய அரசு பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. இவை தவிர, புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள் குடியேற்றத்திற்காக இந்த மாகாணத்தில் மொத்தம் 46 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

1990 இலக்க அவசரகால நோயாளர் ஊர்திச் சேவைகள் வட மாகாணம் உள்ளிட்ட எட்டு மாகாணங்களில் செயற்படுத்தப்பட்டுள்ளன.

வட மாகாணத்தில் தற்போது நடைபெற்று வரும் அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டங்களாவன, யாழ்ப்பாணக் கலாசார மையக் கட்டடம், 3 ஆயிரம் மழைநீர் சேகரிப்பு அலகுகளை நிர்மாணித்தல், 600 மாதிரி வீடுகள் கொண்ட 25 மாதிரி கிராமங்களை நிர்மாணித்தல் மற்றும் யாழ்ப்பாணத்தில் அமைய வுள்ள தொழில் முனைவோருக்கான வர்த்தக / தகவல் தொடர்பாடல் மையம் என்பனவாகும்.

சுமார் 12 மில்லியன் டொலர் செலவில் கட்டப்பட்டு வரும் , யாழ்ப்பாண கலாசார மைய கட்டுமானப்பணிகள் 2019 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் முடிவடையும் எனவும் இந்த மையமானது உள்ளூர் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தின் சின்னமாக விளங்கும் எனவும் எதிர்பார்க்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-9,30)

## உள்நாட்டு...

பான போத்தல்களினதும் விலைகள் 10 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

உற்பத்தி செலவீனங்கள் அதிகரித் துள்ளமையே உள்நாட்டு மதுபான போத்தல்களின் விலை அதிகரிப்புக்கு காரணம் என குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்த விலை அதி கரிப்பு தொடர்பில் தற்போது முகாமைத்துவ மட்ட கலந்துரையாடல் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## கேப்பாபிலவு போராட்டத்தில்...

கொண்டனர்.

இந்நிலையில் படையினரின் முகாம் வாசலில் இருந்து மக்களை அப்புறப்படுத்துவதற்காக பொலிஸார் பல்வேறு பிரயத்தன முயற்சியினை மேற்கொண்டு வந்த நிலையில் போராட்ட மக்கள் தங்கள் போராட்டங்களை கைவிடாத நிலையில் பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்ட மூவர்மீது குற்றம் சுமத்தி நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளார்கள். கேப்பாபிலவு மாதிரி கிராமத்தினை சேர்ந்த வி.இந்திராணி, மனித உரிமை செயற்பாட்டாளர் க.சந்திரலீலா, நீர்கொழும்பினை சேர்ந்த யோ.விறிட்டா பெர்ணாண்டு ஆகியோர் மீது முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் விசாரணை நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது பொலிஸார் பல வேறு குற்றச்சாட்டுக்களை முன் வைத்துள்ளார்கள் குற்றஞ்சாட்டப்பட்ட போராட்டக்காரர்கள் சார்பாக மன்றில் உள்ள சட்டத்தரணிகள் அனைவரும் கருத்துக்களை முன் வைத்துள்ளதாக நீதிமன்றம் சென்று திரும்பிய போராட்டகாரர்களில் ஒருவரான சந்திரலீலா தெரிவித்துள்ளார்.

பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளாக போராட்டத்தில் ஈடுபடுவதால் படைமுகாமில் உள்ள படையினரின் அமைதிக்கு பங்கம் விளைவிப்பதாகவும் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் இராணுவத்திற்கு ஏதாவது குற்றச்செயல்கள் செய்து விடுவார்கள் என்றும், போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்கள் குற்றச்செயல்கள் ஏதும் செய்யலாம் என்றும் போராட்டத்திற்கு வெளியில் இருந்து யாரும் வரக்கூடாது என்று சொல்லியும் போராட்டத்தினை முன்னர் செய்த இடத்திற்கு கொண்டு செல்லு மாறும் பொலிஸாரால் நீதிமன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பொலிஸாரின் இந்த குற்றச் சாட்டுக்களுக்கு நாங்கள் ஒத்துக் கொள்ளவில்லை. விடுபட்ட எங்கள் காணிகளில் இருந்துதான் நாங்கள் போராட்டம் செய்வோம் என்று மன்றுக்கு தெரிவித்துள்ளோம். இதற்கமைய எங்கள் போராட்டம் தொடர்பில் நீதிமன்றம் இரண்டு நாட்கள் கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது என்று போராட்டகாரர் தெரிவித்தனர்.

சட்டத்தரணிகள், பொலிஸார், அரசதரப்பினர், மக்கள் இணைந்து போராட்ட இடத்திற்கு நேரடியாக சென்று பார்வையிட்டு நல்ல முடிவினை எடுக்கவேண்டும் என்று நீதிபதி தெரிவித்துள்ளார்.

தற்சமயம் போராட்டம் நடத்தப்படும் படைமுகாம் வாயிலில் இருந்து 75 மீற்றருக்கு அப்பால் இரண்டு நாட்களும் போராட்ட செய்யலாம் என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார். .

இதேவேளை கேப்பாபிலவு மக்களின் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. போராட்டத்தில் ஈடுபடும் எங்கள் பிள்ளை சிறுவர்கள், பெண்பிள்ளைகள், மக்கள் அனைவரையும் ஒளிப்படம் எடுக்கும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளார்கள். நாங்கள் இரவு பகலாக போராட்ட இடத்தில் இருக்கின்றோம். படையினர் தங்கள் கண்காணிப்பு கோபுரங்களில் இருந்து அனைத்தினையும் ஒளி பதிவு செய்கின்றார்கள். இது எங்கள் மனித உரிமையினை மீறும் நடவடிக்கையாக இருக்கின்றது. நாங்கள் அச்சம் கொள்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-281)

## கொள்ளையர்களிடம் நகை வாங்கியமை தொடர்பில்

# நகைவேலை செய்பவரை ஆள் பிணையில் விடுவிக்க யாழ் நீதிமன்று உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்று வந்த வழிப்பறி உள்ளிட்ட நகைக் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவருக்கு எதிராக 11 வழக்குகளை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் தாக்கல் செய்தனர்.

சந்தேக நபரிடம் கொள்ளையிடப்பட்ட நகைகளை கொள்வனவு செய்த நகை வேலை செய்பவரை தலா ஒரு லட்சம் பெறுமதியான 11 பேரின் ஆள் பிணையில் விடுவிக்க யாழ்ப் பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்று கட்டளையிட்டது.

அத்துடன் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை சில சாட்சிகள் நேற்று அடையாளம் காட்டின. அதனால் அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல இடங்களிலும் அண்மைய நாள்களில் வழிப்பறிகளும் நகைக் கொள்ளைகளும் இடம்பெற்று வந்தன. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வந்திருந்தனர்.

இந்நிலையில் நகைக் கொள்ளைகளுடன் தொடர்புடைய ஒருவரையும் அந்த நகைகளைக் கொள்வனவு செய்த நகை வேலை செய்பவரையும் கடந்த வியாழக்கிழமை பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் களவாடப்பட்ட கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் என சந்தேகிக்கப்படும் சுமார் 8 இலட்சம் ரூபாய் பெறுமதியான பதினைந்து பவுண் நகைகளும் மீட்கப்பட்டன.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் இருவரையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தினர். 11 கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் தனித் தனியே வழக்குகளை பொலிஸார் தாக்கல் செய்திருந்தனர்.

நகைக் கடை உரிமையாளர் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி மு.றெமிடியஸ், பிணை விண்ணப்பத்தை மன்றில் முன் வைத்தார். எனினும் வழக்கு விசாரணைகளின் போது சாட்சிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நகைக் கடை உரிமையாளருக்கு பிணை வழங்க மறுத்த யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன், சந்தேகநபர்கள் இருவரையும் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

அத்துடன், கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நேற்று அடையாள அணிவகுப்புக்குட்படுத்த முறைப்பாட்டாளர்களை மன்றில் முன்னிலையாகுமாறும் நீதிமன்று உத்தரவிட்டது.

இதனடிப்படையில் சந்தேகநபர்கள் நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ்.பி.போல் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

முதலாவது சந்தேகநபர் அடையாள அணி வகுப்புக்கு முற்படுத்தப்பட்டார். 11 சாட்சிகளில் சிலர் சந்தேகநபரை அடையாளம் காட்டினர்.

அதனைத் தொடர்ந்து நகை வேலை செய்வரான சந்தேகநபர் சார்பில் மன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. அந்த விண்ணப்பத்தை ஆராய்ந்த நீதவான், 11 வழக்குகளிலும் தலா ஒரு இலட்சம் பெறுமதியான 11 பேரின் ஆள்பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார். (ம-3)

## நல்லிணக்கத்...

தேசிய சமாதான பேரவை மற்றும் உஸைட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் தேசிய சமயங்களுக்கான மாநாடு நேற்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது. அதன்போதே அவர் மேற் கண்ட வாறு குறிப்பிட்டிருந்தார்.

இந் நிகழ்வில் சிறப்பு அதிதியாக தேசிய நல்லிணக்க, அரச கரும மொழிகள் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன், இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான அமெரிக்க தூதுவர் அலைனா டெப்லிட்ஸ், தேசிய சமாதான பேரவையின் நிறைவேற்று பணிப்பாளர் யோஹான் பெரேரா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ம-3)

## வலிந்து காணா...

மனித உரிமை பேரவைக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நாளை காலை 10.00 மணிக்கு வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் முன்னெடுக்கப்படவுள்ள மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணிக்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐ.நா அமர்வின் 40 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் இடம் பெறவுள்ளது. காணாமல் போனோர் விவகாரம் தொடர்பில் இனியும் இழுத்தடிப்பு செய்யாமல் இலங்கை அரசு உரிய தீர்வை தர வேண்டும்.

இதற்கு சர்வதேச மனித உரிமை பேரவையில் உள்ள நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் மன்னார் புதைகுழி விவகாரத்தில் உரிய நீதியான விசாரணை வேண்டும் என கோரியும் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியை முன்னெடுக்கவுள்ளோம்.

எனவே எமது போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் அனைத்து சிவில் அமைப்புக்கள் மக்கள் பிரதிநிதிகள் ஏற்றத்தாழ்வு பார்க்கால் ஒத்துழைப்பு தர வேண்டும்.

பல்கலைக்கழக மாணவர்களின் பங்களிப்பு எமக்கு நிறைந்துள்ளது. அதே போல் இலங்கையில் மாத்திரமன்றி சர்வதேசத்திலும் எமக்கான ஆதரவை வழங்க வேண்டும். குறிப்பாக சர்வமத தலைவர்கள் எமது போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-9)

# இலங்கை இராணுவம் மாலியிலிருந்து திரும்பாது

## இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து

(கொழும்பு)

மாலியில், ஐ.நா அமைதிப் படையில் பணியாற்றும் இலங்கை இராணுவத்தினரை விலக்கிக் கொள்வது குறித்து இதுவரையில் எந்த கலந்துரையாடலும் நடத்தப் படவில்லை என இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

மாலியின் மத்திய பகுதியில், கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை இராணுவ அணி ஒன்று கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கியதில், இரண்டு இலங்கை இராணுவத்தினர் உயிரிழந்தனர். மேலும் 6 பேர் காயமடைந்தனர்.

உயிரிழந்தவர்களில் கப்டன் தர அதிகாரி மேஜராகவும், கோப்ரல் தர அதிகாரி சார்ஜன்ட்டாகவும் நேற்று முன்தினம் பதவி உயர்த்தப் பட்டுள்ளனர்.

இந்த நிலையில், இராணுவ அணி தாக்குதலுக்குள்ளாகிய போதிலும், மாலியில் தொடர்ந்தும் தமது படையினர் தங்கியிருப்பர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர், மாலியில், இருந்து இராணுவத்தினரை விலக்கிக் கொள்வது குறித்து எந்த கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட படையினரின் சடலங்களை கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. காயமடைந்தவர்களுக்கு மாலியில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. அவர்கள் கொழும்புக்குத் திரும்பமாட்டார்கள்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடுகள் வழங்கப்படும். ஐ.நாவின் மூலமும் இழப்பீடுகள் பெற்றுக் கொடுக்கப்படும் என குறிப்பிட்டார். (ம-3)

மெகா பவர்
திகதி 28/01/2019
சீட்டிழுப்பு இலக்கம் 337
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
E 07 03 28 50 73

கொவிசெத
திகதி 2019.01.28
சீட்டிழுப்பு இலக்கம் 2018
I 19 30 45 68

மஹஜன சம்பத
திகதி 2019/01/28
சீட்டிழுப்பு இலக்கம் 3843
B 3 8 0 3 5 3

சுபிரி வாசனா
திகதி 2019/01/28
சீட்டிழுப்பு இலக்கம் 1399
இலக்கம் வெற்றி இலக்கம்
25 01 13 23 38 06 62

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**SLPS-3**
விசேட கருத்தரங்குகள்
29/1, 31/1, 1/2 ஆகிய செவ், வியா, வெள்ளி ஆகிய தினங்களில் விசேட வகுப்புக்கள் நடைபெறும். 3 PM - 6 PM
(இன்று - 29.01.2019)
P.கமல்தாசன் மற்றும் வளவாளர் குழு
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 077 111 6739
(7324)

# மரண அறிவித்தல்கள்

## ஜெயபாலசிங்கம் காந்தரூபன்

**தோற்றம் : 1986.03.19 மறைவு : 2019.01.27**



*இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயபாலசிங்கம் காந்தரூபன் கடந்த (27.01.2019) ஞாயிற்றுக்கிழமை இரவு 11.36 மணியளவில் காலமானார்.*

*அன்னார் ஜெயபாலசிங்கம் - இந்திராணி தம்பதிகளின் அன்பு மகனும், கிரிதரன், மயூரதன், பகீரதன், கயல்விழி, சுடர்விழி, பரணிதரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பிரியா, சுதர்சினி, ராதை, கிருபாகரன் ஆகியோரின் மைத்துனரும், சகீன், இன்பா, லகீனா ஆகியோரின் அன்பு மாமாவும், விசாலி, தருண், ஜாஸ்மி, கவின், நதீனா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2019) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

மானிப்பாய் வீதி, விளாத்தியடி
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.
(விவசாயக் கல்லூரி அருகாமை)
(7318)

தகவல் : குடும்பத்தினர்
T.P : 077 214 4489
077 415 9775

## அருளம்பலம் கமலசேகரம் (விக்கி)

**(இளைப்பாறிய நில அளவையாளர்)**



*வசாவிளானைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வதிவிடமாகவும் கொண்ட அருளம்பலம் கமலசேகரம் நேற்று 28.01.2019 இறைவனடி சேர்ந்தார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - சிவபாக்கியம் தம்பதியினரின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தவமணி - தம்பதியினரின் அன்பு மருமகனும், நாகப்பிரபா (பிரபா)வின் அன்புக்கணவரும், சோபனா (ஆசிரியை யா/ஊரெழு கணேசவித்தியாசாலை, மோகனா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானராஜ் (ஆசிரியர், வ/வவுனியா இறம்பைக்குளம் மகளிர்கல்லூரி), முகுந்தன் (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், பிறிற்ரிகா (யா/உடுவில் மகளிர் கல்லூரி), பிறீரியன் (யா/உடுவில் மகளிர் கல்லூரி), ஹரிஷ் (இலண்டன்), வரிஷ் (இலண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் சுதர்சனா (இராசாத்தி - பிரான்ஸ்), கணேஸ்வரி (ரஞ்சி), குணசேகரி (பாப்பா), ஞானசேகரி (குமுதம் - சுவிஸ்), தனேஸ்வரன் (பவான் - சுவிஸ்), தனேஸ்வரி (ஜலயா - கனடா), தேவதயாநிதி (சுயனி - சுவிஸ்), தயாபரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகராசா, மகாராசா, காலஞ்சென்ற தியாகலிங்கம் மற்றும் புவிநாதன், ஜெய்ந்தி, துரைசிங்கம், பாலகுமார், சந்திரகுமாரி, காலஞ்சென்றவர்களான குகதாஸ் (இலண்டன்), மோகனதாஸ் (ஜேர்மன்) ஆகியோரின் மைத்துனருமாவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.01.2019) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

"பிரபை மஹால்"
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.
(C-5336)

தகவல் : மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்.
T.P : 021 223 0813

## இராஜினாமா...

பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அந்தவகையில் எதிர்வரும் நவம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்த முன்வர வேண்டும் என்றும் இல்லை யெனில் தான் இராஜினாமா செய்யவுள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

அத்தோடு தேர்தல் தள்ளிவைப்பது என்பது ஊழல் நிறைந்த தேர்தலை நடத்துவது போல் மோசமானது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-3)

## விமல் வீரவன்...

தில் அவர் முன்னிலையாகியிருந்ததுடன், சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் வாக்குமூலம் அளித்ததன் பின்னர், நண்பகல் 12 மணியளவில் திணைக்களத்திலிருந்து வெளியேறியுள்ளார்.

இதன்போது அவரிடம் பிரமுகர் கொலை சதித்திட்டம் தொடர்பாக வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், அவரிடம் எதிர்காலத்தில் இது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுப்பது பற்றி இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை என உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## கூரையில் உலர...

தண்ணீரில் நனைந்த நிலையில் கட்டட கூரை ஒன்றின் மீது உலரவிடப்பட்டிருந்த 72 கிலோகிராம் கேரளக்கஞ்சா மீட்கப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை, வியாபாரிமூலை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கஞ்சா உலரவிடப்பட்டுள்ளதாக கடற்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் உடுகம சூரியவின் வழிநடத்தலில் நேற்று திங்கட்கிழமை மதியம் வியாபாரிமூலை பகுதியில் உள்ள கட்டடம் ஒன்றின் கூரையில் தண்ணீரில் நனைந்த நிலையில் உலர விடப்பட்டிருந்த கஞ்சாவினை மீட்டனர்.

இச் சம்பவம் தொடர்பாக அப்பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-60.101)

## காணிப்பிணக்கு...

குறித்த முதியவருக்கும், மட்டுவில் பகுதியை சேர்ந்த வேறு இருவருக்கும் இடையில் நீண்டகாலமாக காணி பிணக்கு நடைபெற்று வந்துள்ளது.

இந்நிலையில் கடந்த 19ஆம் திகதி இருதரப்பினருக்கும் இடையில் காணிப்பிணக்கு ஏற்பட்டதில் வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியுள்ளது.

அதன்போது இருவரும் இணைந்து முதியவரை பொல்லுகளால் தாக்கியுள்ளனர். அத்தாக்குதலில் படுகாயமடைந்த முதியவரை அயலவர்கள் மீட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதித்தனர். பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முதியவர் மாற்றப்பட்டார்.

இந்நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த முதியவர் கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் வீடு திரும்பியிருந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை திடீரென உயிரிழந்துள்ளார்.

முதியவர் உயிரிழந்தமை தொடர்பில் கொடிகாமம் பொலிஸாரிடம் முதியவரின் உறவினர்கள் அறிவித்துள்ளதையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**
(C-6182)

DELIVERY IN 3-5 DAYS
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
● மானிப்பாய் 0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

## தமிழர்கள் சம...

தெரிவித்திருந்தார். மேலும் அவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

முப்பத்திரெண்டு ஆண்டுகள் கடந்து ஒரு தமிழனான என்னை வடக்கு மாகாண ஆளுநராக நியமித்திருப்பதன் மூலம் இலங்கை நாட்டில் தமிழர்கள் சமமான குடிமக்கள் என்பதனை ஜனாதிபதி உணர்த்தியிருக்கிறார். நாம் ஒன்றுபட்டு விழுந்த எம் தேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும்.

அதற்கு நாம் எமது கல்வித்துறையினை வளர்க்க வேண்டும். எமது கல்வி வளர்ச்சிக்கு இந்திய அரசு செய்யும் உதவிகளை நாம் நன்றிக்கடனுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். நான் கல்வித் திணைக்களத்திடம் ஓர் கோரிக்கை விடுகிறேன். மாணவர்களைக் கஷ்டப்படுத்தாதீர்கள். எங்கள் வருகைக்காக மாணவர்கள், ஆசிரியர்களை வெயிலில் நிறுத்தாதீர்கள். நாங்கள் தான் மாணவர்களை மதிக்க வேண்டும். அடுத்த முறை நான் பாடசாலை நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் போது மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்க வேண்டும். நாங்கள் வாழ்ந்து முடிந்தாகிவிட்டது.

வருங்கால உலகம் மாணவர்கள் கையில் உள்ளது. 21ஆம் நூற்றாண்டின் முக்கிய பகுதிகளை இன்றைய மாணவர்கள் தோளில் சுமக்கவுள்ளனர். உங்களுக்குள் இருக்கின்ற ஒருவன் (மாணவன்) நாளைய நாயகனாக வேண்டும். அவன் பிரச்சினைகளை தீர்க்க வல்லவனாக இருக்க வேண்டும். வெறும் கட்டடங்களால் ஒரு உலகை உருவாக்க முடியாது. அந்த கட்டடத்தில் உள்ள புத்திக்கூர்மை உடையவர்களே நாளைய உலகை உருவாக்குவார்கள்.

மாணவர்களாகிய நீங்கள் வீறுகொண்டு எழ வேண்டும். உலகம் உங்கள் வசப்பட வேண்டும். அத்துடன் காலமும் அரசியலும் என் உற்ற நண்பர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் அவர்களை பறித்து விட்டது. அவர் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்தவர். காலம் சில வடுக்களை எம் மத்தியில் விட்டுச் சென்றுள்ளது. முழுச் சுதந்திர மக்களாக ஒரு தாயின் பிள்ளைகளாக வாழ வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (ம-30)

## கடை உரிமையா...

வீதி பகுதியில் உள்ள இலத்திரனியல் பொருட்கள் விற்பனை நிலையத்துக்கு சென்ற வாடிக்கையாளர் ஒருவர் மின் விசிறி ஒன்றை கொள்வனவு செய்ய முயன்றுள்ளார். அப்போது அந்த கடைக்குள் நின்றிருந்த குறித்த நபர் ஒருவர் அங்கு சென்ற வாடிக்கையாளர்களிடம் தான் கடையின் உரிமையாளர் போலவும், கடை உரிமையாளர்களிடம் தான் ஒரு வாடிக்கையாளராகவும் பாசாங்கு செய்து. வாடிக்கையாளரிடம் மின்விசிறிக்கான 15 ஆயிரம் ரூபாய் பணத்தை பெற்றுவிட்டு அவ்விடத்தில் இருந்து தலைமறைவாகியுள்ளார்.

நீண்ட நேரம் ஆகியும் பொருள் கிடைக்காத காரணத்தினால் குறித்த வாடிக்கையாளர் கடை உரிமையாளாரிடம் மின்விசிறி எங்கே என கோரியுள்ளார். அப்போது கடை உரிமையாளர் நீங்கள் பணம் செலுத்த வில்லை என தெரிவித்துள்ளார். குறித்த சம்பவத்தால் குழப்பமடைந்த வாடிக்கையாளர் பணம் செலுத்திய விபரங்களை தெரிவித்த போது அவர் அந்த கடையில் வேலை செய்ப வர் இல்லை என கடை உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதியில் இந்த சம்பவம் போன்ற 6 சம்பவங்கள் அண்மைய நாட்களில் இடம் பெற்றுள்ளதாகவும் பல லட்சம் ரூபாய் பறிபோயுள்ளதாகவும் கடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர் குறித்த நபரை இனங்காண முடியவில்லை என்றும் வாடிக்கையாளர்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளனர். (ம-9)

**பெண் வேலையாட்கள் தேவை**
மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பெண் வேலையாட்கள் தேவை. வயது 18 முதல் 30 வரை.
**திங்கள் முதல் தொடர்புகொள்ளவும்**
(7325) தொ.பே : 076 118 4010

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.